பதினாறு பக்கங்கள் — விலை ரூபா நான்கு

உங்கள் எண்ணங்களை வண்ணங்களில் பதித்திட இன்றே நாடுங்கள்
சுரேஷ் போட்டோ வீடியோ
569 கடற்கரை வீதி
குருநகர்
யாழ்ப்பாணம்

வார முரசொலி

உங்கள் எண்ணங்களை வண்ணங்களில் பதித்திட இன்றே நாடுங்கள்
சுரேஷ் போட்டோ வீடியோ
569 கடற்கரை வீதி
குருநகர்
யாழ்ப்பாணம்

முரசு 03 ஒலி 213 ஞாயிற்றுக்கிழமை 13 - 08 - 1989 ஆடி 29 முஹர்ரம் 10

● சகல தமிழ்த் தீவிரவாத, மிதவாதக் குழுக்களையும் ஒன்றிணைத்து உருவாகும்

# சமாதானக் குழுவிற்கு இலங்கை அமைச்சரின் தலைமைக்கு எதிர்ப்பு?

(கொழும்பு)

சகல தமிழ்த் தீவிரவாத இயக்கங்களையும் ஒன்றிணைத்த சமாதானக் குழுவிற்கு ஓர் இலங்கை அமைச்சர் தலைமை தாங்குவார் என்ற இலங்கை அரசின் தீர்மானத்தை பல தமிழ்க் குழுக்களும் எதிர்க்கவுள்ளதாகத் தெரியவருகிறது,

நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இது குறித்து பிரஸ்தாபித்திருந்தார்.

விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர் எல்.எப், ஈ.என்.டி.எல்.எப்., ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இக்குழுவில் இணைய வேண்டும் என்றும் தமிழ்க் குழுக்களிடையே மோதலைத் தவிர்க்க இலங்கை அமைச்சர் ஒருவர் இக்குழுவிற்குத் தலைமை தாங்குவார் என்றும் ரஞ்சன் தெரிவித்திருந்தார்.

ஓர் இலங்கை அமைச்சர் தமிழ்க் குழுவிற்குத் தலைமை தாங்குவதைப் பல தமிழ் அமைப்புகள் விரும்பவில்லை என்றும், முஸ்லிம் காங்கிரஸ் போன்ற தமிழ் முஸ்லிம் அமைப்புகளையும் இக்குழுவில் சேர்க்க வேண்டுமென சில அமைப்புகள் விரும்புவதாகவும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தென்பகுதித் தீவிரவாதிகளிடம் இந்திய இராணுவச் சீருடைகள்

தென்னிலங்கைத் தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றிலிருந்து இந்திய இராணுவத்தினரின் போலிச் சீருடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டியில் உள்ள தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றிலிருந்தே இந்தச் சீருடைகள் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியப் படையினரின் சீருடைகள் தென்னிலங்கைத் தீவிரவாதிகளுக்கு எப்படிக் கிடைத்தது என்பது பற்றித் தற்பொழுது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் அரச விரோதப் பிரசுரங்கள், தோட்டாக்கள், பதாதைகள் என்பனவும் இந்த மறைவிடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

## பத்து அரச அலுவலகங்கள் அம்பாறையில் தீக்கிரை

(மட்டக்களப்பு)

அம்பாறையில் நேற்று முன்தினம் பல அரச அலுவலகங்கள் தீவிரவாதிகளால் தீவைத்துக் கொளுத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து உதவித் தபால் நிலையங்களும், ஒரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும், இரண்டு சமநலச்சேவை நிலையங்களும், இரு கிராமசேவகர்கள் அலுவலகங்களும், இருபஸ்களும் தீவிரவாதிகளால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச விரோதச் சக்திகளே இந்தத் தீவைப்புச் சம்பவத்திற்குக் காரணம் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி ஆலோசனை

அமைச்சரவையின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது இந்தியப் படைவிலகல் தொடர்பாக அமைச்சர்கள் தமது கருத்துகளைத் தெரிவித்ததாகவும், பாராளுமன்றத்தின் தெரிவிக்கப்பட்ட கருத்துகளையும்' அமைச்சர்கள் தெரிவித்த கருத்துகளையும் ஜனாதிபதி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வல்வைக்கு வெளிநாட்டு உதவி கோரி மனு

வல்வெட்டித்துறையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற வன்செயல்கள் சம்பந்தமான விரிவான அறிக்கை ஒன்றை வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பியுள்ளதாக செய்திகள் தெரி

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி நாய்களின் பசிக்கொடுமை அங்குள்ள ஆடுமாடுகளே அவற்றிற்கிரை

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் அதிகரித்துவருகிறது. இதனால் இப்பகுதியில் நாய்களையிட்டு அச்சம் ஏற்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரப் புறச் சந்தி ஒன்றில் பசிக் கொடுமை தாங்க முடியாது அலைந்து திரிந்து ஐந்து நாய்கள் அங்கே வீதியில் மேய்ந்து கொண்டு நின்ற ஆடு ஒன்றின் மீது பாய்ந்து அதைக் கடித்துக் குதறிப் பிய்த்தும் விட்டன. இப்பகுதியின் பல இடங்களிலும் இருந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வெளியிடங்களுக்குச் சென்று விட்டதாலேயே அங்கே அவர்கள் வளர்த்த நாய்கள்

—16 ஆம் பக்கம் பார்க்க

## 3 மாதக் கைக்குழந்தையிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ். வைத்தியசாலையில் நேற்றுக்காலை மூன்றுமாதக் கைக்குழந்தையொன்றிடம் இருந்து தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக நின்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

சிறுமி ஒருத்தியுடன் வந்த பெண்மணி ஒருவர் சங்கிலியை அறுத்து உடன் சிறுமியிடம் கைமாறிக்கொடுத்து விட்டுத் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நிவாரணம் பெறத்தவறியோர் மீளப்பெற நடவடிக்கை

(அரியாலை)

மீளக் குடியமர்த்தல் சம்பந்தமான கொடுப்பனவுகளுக்காக வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பட்டியல்களின்படி இப்போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களது பெயர்ப்பட்டியல்கள் அவ்வவ் வங்கி உத்தியோகத்தர்களால் அட்டவணைப்படுத்தப்பட்டு பின்னர் யாழ் அரச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## 25,000 ஆசிரியர் தெரிவு பரீட்சை யாழ். மாவட்டத்தில் ஒத்திவைப்பு

யாழ். மாவட்டத்தில் 25,000 புதிய ஆசிரியர் பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பரீட்சை இம்மாதம் 15-ம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. புதிய திகதிகள் பற்றிய விபரங்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் கல்விநிறுவன ஒன்றியம் உருக்கமான வேண்டுகோள்

தமிழ் மக்களின் சொத்து கல்வியே. தமிழ்ச் சமுதாயம் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆர்வமிழக்காது எமது சிறுவர் கல்வியைத் தொடர்ந்து வந்தனர் கல்லூரிகள் மூடியிருக்கும் இவ்வேளையில் அவர்களின் கல்வி இடையூறு இன்றி நடைபெற வேண்டும் என்று பேரார்வத்தினால் உந்தப்பட்டு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் சென்ற கிழமை தமது நிலை

— 16 ஆம் பக்கம் பார்க்க

## அமிரின் இறுதிக் கிரியைக்காக நட்வர்சிங் விசா பெற்றார்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் நட்வர்சிங்கைத் தவிர ஏனைய தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும், பத்திரிகையாளர்களும் விசா பெறாமலேயே இங்கு வந்துள்ளனர்.

இது தொடர்பாக இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு கிலோ சீனி ரூபா 22.60

ஒரு கிலோ சீனியின் மொத்த விலை இருபத்தைந்து சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் ஒரு கிலோ சீனியின் விலை இருபத்திரண்டு ரூபா இருபத்தைந்து சதத்திலிருந்து இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதமாக உயர்ந்த அதேசமயம் வெளி மாவட்டங்களில் போக்குவ

→ 16 ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டுப்பயணம்

அவுஸ்திரேலியா - AUSTRALIA

பயணம் செய்ய விரும்புவோருக்கு
20 8.89ல் பயண ஒழுங்கு செய்துதரப்படும்

★ சிங்கப்பூர் ★

20 தாதிமார் (Nurse) தேவை சம்பளம் 15000/-

★ ஜேர்மனி ★

மற்றும் வேலைவாய்ப்புகளுக்கும்
14-ம், 15-ம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்

**க. இந்திரலிங்கம் (சந்திரன்)**

**நிரோஷன் என்ரபிறைஸ்**

பருத்தித்துறை வீதி மயிலிட்டி
காங்கேசன்துறை
(T. B. வைத்தியசாலை அருகில்)

08171

# உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

வண்டன், ஹொலண்ட், ஜேர்மன்
கொழும்பிலிருந்து நேரடிப்பயணம்
இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ்

இந்நாடுகளுக்கு இங்கிருந்து செல்ல விசாமற்றும் ஒழுங்குகள் நாம் செய்து தருகின்றோம்.
அரைவாசிக் கட்டணம் எகிப்தில் செலுத்த வசதியுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்
இந்நாடுகளில் தங்கியுள்ள உறவினர்களிடம் செல்ல முயற்சிப்பவர்களுக்கும் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.
மத்திய கிழக்கு நாடுகளிலும் வேலை வாய்ப்புகள் உண்டு.

**ட்ரவல்ஸ் மகேந்திரா**

155|5, குருசோ வீதி, சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.

கொழும்பு:
112, கதிரேசன் வீதி, கொழும்பு-13

08164

# சீட்டிழுப்பு பிற்போடல்

கொடிகாமம், கஸ்தூரி பாலர் பாடசாலை அபிவிருத்திக்காக 15. 08. 1989 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப் படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 30. 09. 1989 க்கு பிற்போடப்பட்டுள்ளது.

குழுவினர்
08178

# வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் கீழ்க்காண் விபரப்படியான வெற்றுச் சாக்குகள் கேள்வி கோரல் மூலம் விற்பனைக்குள்ளது. உரிய சாக்கு கேள்வி விண்ணப்பத்துடன் திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 100/- செலுத்தப்பட வேண்டும். வைப்புப்பணம் செலுத்தாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் பொதுமுகாமையாளர், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்ற முகவரிக்கு 17.8.89-ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலிலோ அன்றி நேரிலேயோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 112 படி அரிசிச் சாக்கு | 2273 |
| 80 படி அரிசிச் சாக்கு | 892 |
| 67 கிலோ மாவுச் சாக்கு | 1528 |
| சீனிச் சாக்கு | 272 |
| பலரகச் சாக்கு | 333 |
| பைகள் | 187 |
| மொத்தம் | 5485 |

இங்ஙனம்
பொது முகாமையாளர்
ப.நோ.கூ. சங்கம், பூநகரி.

08176

# வரி விளம்பரம்

## புத்தகம்

சிரித்து மகிழ வேண்டுமா? வாசியுங்கள் 'கெட்டிக்காரர்கள்' நகைச்சுவையின் தோள்களில் சவாரி செய்யும் ஒன்பது வானொலி நாடகங்கள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியவை. விலை ரூபா 25/-

08131

## தேவை

ஆங்கில அறிவும், கணக்கில் தேர்ச்சியும் உள்ள ஆண் ஒருவர் நகைக்கடையொன்றிற்கு உடனடியாகத் தேவை. வேதனம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு வி எம்.கே. தங்கமாளிகை, கண்டிவீதி, சாவகச்சேரி.

08180

**University of Jaffna**

SUPPLYING AND/ OR INSTALLATION OF AIR CONDITIONERS

Sealed Tenders are invited for the Supplying and/or installation of air conditioners at the following locations:

1. Medical Faculty-
   a) Department of Physilogy 01 No.
   b) Department of Pathology 01 No.
   c) Department of Bio-Chemistry 01 No.
   d) Department of Anatomy 01 No
   e) Medical Faculty Library 01 No
   f) Medical Faculty Board Room 01 No
2. Library - 02 Nos.
3. Finance Branch - 01 No.
4. Department of Maths - Computer Unit - 01 No.

Tender documents in connection with this work will be issued at the Finance Branch University of Jaffna during office hours from 22nd to 25th August '89 on payment of non-refundable fee of Rs. 200/- for each tender.

If necessary site inspection could be made along with the works Engineer from 9 a m. to 10 a.m. on 29th August 1989.

The Tender Documents should be forwared to the Bursar, University of Jaffna by registered post or personally with the mark "Tender for Supplying and/or installation of Air conditioners" to reach him on or before the 08th September 1989 at 10 a m. Tenders will be opened on the same day at 10.30 a.m.

Actg. REGISTRAR
08153

★ லண்டன் ★ ஜேர்மன்
★ சுவிஸ் ★ பிரான்ஸ்
★ ஹொலண்ட் ★ சவுதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு
துரிதகதி பிரயாண ஒழுங்குகள்

அத்துடன்

பாஸ்போட், பொண்ட் ஆகியன உடனே செய்து கொடுக்கப்படும்

எமது கடந்த இருவார குழுக்களும் வெற்றிகரமாக தமது பயணத்தை முடித்துக் கொண்டன.

உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road
Jaffna

08185

பிரயாணம்...... பிரயாணம்...... பிரயாணம்......

**'M' THREE TRAVEL**

வழங்கும்
சவூதி அரேபியா, மாலைதீவு
பிரயாணம்

★ சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| DRIVER (H/V) (கனரக வாகன சாரதி) | — | 700 S.R. |
| CLEANERS (சுத்திகரிப்பாளர்) | — | 400 S.R. |

★ மாலைதீவு

DOCTOR OR R. M. P. 15,000 ரூபா

★ நம்பிக்கை ★ நாணயம்
என்பவற்றிற்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**"M" THREE TRAVEL**

தலைமையலுவலகம்,
"இந்திரபவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளையலுவலகம்:
இல.1,2வது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

08169

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**சதாசிவம் நாகேஸ்வரன்**

(இளைப்பாறிய இ. போ. ச. காப்பாளர்)

அன்னையின் மடியில் 03-10-1946
ஆண்டவன் அடியில் 14-07-1989

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து எம்மை ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே! உங்கள் நினைவலைகள் என்றும் எம்மைவிட்டுப் பிரியாது

உங்கள் பிரிவால்வாடும்
மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை,
சகோதரர்கள், உறவினர்

மட்டுவில் நாடு,
பூநகரி.
08177

# திருப் பாற்கடல்


## எழுத்துச் சீர்திருத்தம்:
## தேவையற்றது; தவறானது!


பண்டிதர்
வி. பரந்தாமன்


தமிழ் எழுத்துக்களிற் காலத்துக்குக் காலம் மாற்றம் நிகழ்ந்துள்ளமை உண்மையே. இறுதியாகப் பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வீரமாமுனிவர் ஏட்டில் ஒரு தன்மையவாக எழுதப்பட்ட எகர ஏகாரங்களை வேறுபடுத்தவும் ஒகர ஓகாரங்களை வேறுபடுத்தவும் மேற்படி உயிர்களேறிய மெய்களை (உயிர்மெய்கள்) வேறுபடுத்தவும் முறையே நெட்டுயிர்களுக்குக் கால் மடித்தும் சுழித்தும், உயிர் மெய் நெடில்களின் ஒற்றைக் கொம்புகளை (ெ) இரட்டைக் கொம்புகளாக்கியும் (ே) தமிழ் எழுத்துக்களின் தொன்மையும் தன்மையும் சிதையாமற் சிறுமாற்றத்தை உருவாக்கினுர்.

பின்னர் அச்சுப் பொறிகள் மூலம் பண்டைய இலக்கியங்களும் பல்லாயிரக்கணக்கான புது நூல்களும் வெளிவந்துள்ளன. இந்த எழுத்துக்களைப் பயிலும் சிறுபிள்ளைகளும் கையெழுத்தில் எழுதுவோரும் தட்டச்சு முதலிய பொறியெழுத்தாளரும் ஏறத்தாழ மூன்று நூற்ருண்டாக இவ்வெழுத்துக்களையே பயன்படுத்திவருகின்றனர், அவர்கள் யாரும் இவ்வெழுத்துக்களால் இடர்ப்படுவதாகச் சொல்லியதில்லை. எழுத்துக்களைச் சீரமைப்பதால் மேலும் எளிமையாக்கலாம் என்று மிகச்சிலர் கருதுதல் கூடும்.

இவ்வாறு எண்ணுபவர்களிற் சிலர், சிலஎழுத்துக்களைச் சீரமைக்க வேண்டுமென்று முனைந்து நிற்கின்றனர். அவர்கள் முதலில் திருத்த விழையும் எழுத்துக்கள்.

1. ஆகார வுயிரேறிய ணகர, றகர, னகர மெய்வரி வடிவங்கள்.

2. ஐகார, வுயிரேறிய ணகர, லகர, ளகர, னகர மெய்வரி வடிவங்கள்.

3. ஒகார வுயிரேறிய ணகர, றகர, னகர மெய்வரி வடிவங்கள்.

4. ஓகாரவுயிரேறிய ணகர, றகர, னகர மெய்வரி வடிவங்கள்.

மேற்படி எழுத்துக்கள் தம் வரிசையில் ஏனைய எழுத்துக்களோடு ஒருசீராகவடிவம் பெருமையை வீராமாமுனிவரை உள்ளிட்டமுன்னையசான்ருேர் நோக்காது விட்டார்கள் என்னல் சாலாது! அவர்கள் இவ்வெழுத்துக்களிற் சீராக்கம் செய்யாமைக்குச் சிறந்த ஏதுக்கள் உளவாதல் வேண்டும் அவற்றைக் கண்டுரைத்தல் மொழியியலுணர்ந்த வல்லார் கடன்.

முன்சொன்ன எழுத்துக்களில் வரிவடிவச் சீரின்மை நோக்கித் திருத்தம் செய்ய வேண்டின் இன்னும் பலவெழுத்துக்களில் அத்தகைய சீராக்கம் செய்தல் வேண்டும். உகரவுயிரேறியமெய்கள்பலவும்தம்முட் சீரின்மையைப் பெற்றுள; ஊகாரவுயிரேறிய மெய்கள் பலவும் அவ்வாறேயுள சீராக்கம் வேண்டுவோர் இவற்றையும் சீராக்கல் வேண்டாரோ?

எண்ணல் (கருதுதல்) எளிமை-முயற்சி யெளிமை-காலச்சுருக்கம்- இடச்சுருக்கம் ஆகிய வற்றை நோக்கியே சீராக்கல் துணியப்படும். முன்சொன்ன எழுத்துக்களில் இன்று சீராக்கம் வேண்டுவோர் எண்ணல் எளிமையொன்றையே காட்டல் முடியும். ஏனைய ஏதுக்கள் அவர்கள் முயற்சிக்குப் பொருந்தாமை புலப்படும்.

எழுத்துக்கள், கையெழுத்து முயற்சிகளுக்குச் சிக்கலின்றி இருத்தலை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டுமேயன்றி; பொறியெழுத்து முயற்சிகளுக் கெளிமை தருதல் வேண்டுமென்பது தேவையற்றது; பெரும் பயனற்றது. எழுத்தைக் கையெழுத்தாகப் பயன்படுத்துவோரே மிகப்பலராவர்.

கையெழுத்திலே தானும் எல்லோரும் ஒரு சீராக எழுதுவதில்லை. இவ்வாறுகையெழுத்துக்கள் அமைவதால் ஒருவர் கையெழுத்தில் எழுத்து மயக்கங்கள் காணப்படுதலும்படிப்பவர்க்கு இடர்ப்பாடு உண்டாதலையும் அறியலாம்.

ஒரெழுத்தின் வரிவடிவம், அதன் கோடுகள், அக்கோடுகள் முடிவுற்று நிற்கும் இடங்கள், இறுதிக் கோட்டின் முடிவிடம்என்பவற்ருல்உருவமைக்கப்படும் இக்கருத்துக்களை விரித்துரைப்பின் பெருகுமாதலால் அப் பெருக்கமஞ்சி விடுகின்ருேம்.

சீரமைப்புக்காகப் பேசப் படும்எழுத்துக்களின் வரிவடிவ இயற்கையையும் முடிவுறுமிடத்தினியல்பையும் நோக்கின் அவ்வெழுத்துக்களின் தற்பொழுதைய வரிவடிவங்களே முயற்சியெளிமை- மயக்கமின்மை- காலச்சுருக்கம் இடச்சுருக்கம் ஆகிய பல்வகைச்சிறப்புக்களையும்பெற்றுள்ளனஎன்பது புலப்படும். எடுத்துக்காட்டாகணகரமானது ஏழு கீழ் நோக்கிய கோடுகளையுடையது அத

(15-ம் பக்கம் பார்க்க)



### தரிசனம் தா!

நித்தம்ஒளி கொட்டும் மறைமொழி
சுட்டும்பொரு ளத்தன் அறிகென
சித்தந்தனில் வைத்தன் றருளிய குருநாத
முத்தம்ஒளி வெட்கும் எயிறுடை
முற்றுங்கனி யொக்குங் குறமகள்
பக்கம்வர விக்கித் திணறிய கிழவேடா!
புத்தம்புது நுட்பம் பொதுளிய
தித்திப்பொடு செப்பம் மிகுகவி
கற்றுக்கொளச் சுட்ட பழமிடும் தமிழ்நேசா
கத்துங்கட லென்னக் குமிறிடும்
பக்தர்குறை முற்றும் ஒழியவோர்
திட்டத்தொடு கிட்டத் தரிசனம்
தருவாயே!

பொ. கணேசமூர்த்தி

அத்தன்- தந்தை, தலைவன், முத்தம்-முத்து, எயிறு-பல்.

## போதைப் பொருள்கள்:
## தகவல்கள்; எச்சரிக்கைகள்!


டாக்டர்
வே. யோகநாதன்
யாழ். லயன்ஸ் கழகம்


போதைப் பொருள் என்ருல் என்ன?

மனிதனின் மனநிலையை மாற்றி மகிழ்வு நிரம்பிய மனநிறைவுள்ள நிலையைக் கொடுக்கக்கூடிய, மனிதனின் தனித்தன்மையை அழிக்கக் கூடிய சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய இயற்கையாகப் பெறப்படுகின்ற அல்லது செயற்கையாகத் தயாரிக்கப் படுகின்ற இரசாயனப் பொருளே போதைப்பொருள்.

போதைப் பொருள்களால் மனித குலத்துக்கு ஏற்படும் நன்மைகள்?...

எதுவுமேயில்லை.

தீமைகள்...?

போதைப்பொருள்

மனித உயிருக்கே உலைவைக்கும் சமூகவிரோதச் செயல்களாகிய கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, பாலியல், துர்நடத்தை முதலியவற்றுக்குக் காரணமாகி, மனித குலத்தை வேரறுத்துவிடும்.

போதைப் பொருள்கள் எப்போது யாரால் இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன?

முற்காலத்தில் சிறிய அளவிற் புழக்கத்தில் இருந்த போதிலும் 1979-ம் ஆண்டுக்குப் பின் உல்லாசப்பிரயாணிகளின் வருகையாலும், சர்வதேசப் போதை கடத்தும் சட்டவிரோத நடவடிக்கைகளாலும் பெருமளவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாவோர்யார்?

18—30 வயதுடைய இளைஞர்கள், யுவதிகள் போதைப் பொருள்களை உபயோகிக்க தொடங்கிப் பின் அவற்றுக்கு நிரந்தர அடிமைகளாகிவிடுகிறுர்கள்.

போதைப் பொருள்களுக்கு எவ்வாறு இவர்கள்அடிமையாகிறுர்கள்?

- பரீட்சார்த்த ரீதியில் ஆரம்பித்துப் பின்னர் நிரந்தர அடிமைகளாகி விடுகிறுர்கள்.
- போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையான நண்பர்கள் மூலம் சிலர் அடிமைகளாகிறுர்கள்.
- போதைப்பொருள்களை விற்பனை செய்பவர்களால் அடிமைகள் ஆக்கப்படுகின்ருர்கள்.
- விரக்தி நிலையிலிருந்து விடுபடுவதற்காக உபயோகிக்கத்தொடங்கிப் பின்பு அப்பழக்கத்தை விடமுடியாமல் அடிமைகளாகின்ருர்கள்.
- நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தத் தொடங்கிப் பின்பு அடிமைகளாகி விடுகின்ருர்கள்.
- செயற்கை மனோ நிலையை அடையும் நோக்கத்துடன் தொடங்கி பின்பு அடிமைகளாக்கி விடுகிருர்கள்.
- போதைப்பொருள் கடத்தல் வியாபாரம் செய்யத்தொடங்கி இப் பழக்

15ஆம் பக்கம் பார்க்க)

# நூற்கடல் அமுதம்

## எது புதுக்கவிதை

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவும்
இல்லாத—
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே
புதுக்கவிதை

## என்ன இருந்தென்ன

வானத்தைநரைமுடியால்
வருடுகின்ற இமயமலை
நாணத்தை ஏந்தி
நடைபயிலுங் கங்கைநதி
அலைச்சேலை கட்டிக்கொண்
டாடுகின்ற முக்கடல்கள்

என்ன இருந்தென்ன
என்ன இருந்தென்ன
எங்களது கண்களுக்கு
வயிறே தெரிகிறது-எங்கள்
வாழ்வே எரிகிறது

## நகரும் கிராமமும்

சலனப்படுத்திடும்
நாட்டியப் பெண்ணின்
நடனச் சலங்கைகள்
நகரங்களானல்
கொஞ்ச வரும் மனைவியின்
கொலுசுகள் கிராமங்கள்

கையெழுத்துப் போட
மட்டும்
கற்றவர்கள் அங்கே
வையகத்தின் தலை
யெழுத்தை
வயல்வெளியில் எழுதுகிறார்

தமிழ்த்தாயின்
ஐம்பெரும் அணிகளில்
வளையும் குண்டலமும்
தொலைந்தது ஏன்

ஈரம் படிந்த இலக்கிய
நெல்லைக்
கொத்த வந்த
கடல் அலைக் கோழிகளை
விரட்டத்தான்
காதின் குண்டலத்தைக்
கழற்றி எறிந்தாளோ
எறிந்த வேகத்தில்
கைவளையும் நழுவிக்
காணமற் போனதுவோ

நூல்: ஊர்வலம்

ஆசிரியர்: மு. மேத்தா

வெளியீடு: வர்மாபதிப்பகம் சென்னை, 1985

## இசை

ஆத்மாவோடு பேசுகிற
அந்தரங்க பாஷை
இசை—
காதுகளுக்குப் போர்த்தி
விடுகின்ற
கௌரவப் பொன்னுடை
இசைவில்லை வளைத்து
ராக நாணேற்றித்
தொடுக்கப்படும்
பாடல் அம்புகள்
இதய சாம்ராஜ்யங்களை
வெற்றி கொள்கின்றன

வாத்தியக் கருவிகளே
சில சமயங்களில்
மனத்துயரங்களுக்கு
மருத்துவம் பார்க்கிற
வைத்தியக் கருவிகளாய்
மாறுகின்றன
அதனல்
எம். எஸ். எஸ் கூட
ஒரு எம். பி. பி.எஸ் தான்

இந்திரனுக்குச்
சாபமாக
உடம்பெல்லாம்
கண்கள் முளைத்தது
எனக்கு வரமாக
உடம்பெல்லாம்
காதுகள்
முளைக்கக் கூடாதா?

பாடல்கள்
சொற்களின் சுகப்பிரசவம்
அர்த்தச் செறிவுகளின்
இசை அணிவகுப்பு
செவியின் சாப்பாடு

பாடும் போது
தாளம் போடுவது
தப்பல்ல

பிறர் பேச்சுக்கெல்லாம்
தாளம் போடுவது
தகாது

இசைக்குத்
தலையாட்டலாம்
இசையாத கருத்துக்
கெல்லாம்
தலையாட்டிக் கொண்டிருந்
தால்
வசை வந்து நம்வீட்டு
வாயிலில் நிற்கும்

## மீண்டும் ஒரு வைகறை

மறுபடியும் ஒரு
மகாத்மா வருவான் அவன்
ஹிம்சையை உபதேசிப்
பானே
அஹிம்சையை உபதேசிப்
பானே
எனக்குத் தெரியாது
ஆனல்
இருண்டு கிடக்கும்
இந்த பூமியின் வாசலுக்கு
மீண்டும் ஒரு
வைகறைப் பொழுது
வரவிருக்கின்றது.

## விமர்சன உறவு

ரசிகனைப்போல நான்
நெருங்கி வருகிறேன்
நீயேன் ஒரு
விமர்சகன் போல
விலகி நிற்கிருய்

# களஞ்சியம்

## புத்திசாலிக் குரங்குகள்

மஹாத்மா காந்தி அடிகள் 'புத்திசாலிக் குரங்குகள்' என்ற பொம்மையைத் தம்மேஜை மீது வைத்திருப்பது வழக்கம். பொம்மைக் குரங்கில் ஒன்று தன் கைகளாற் தன் கண்களை மறைத்துக் கொண்டிருக்கும். மற்றென்று தன் கைகளாற் காதுகளை மூடிக் கொண்டிருக்கும். பிறிதொன்று தன் கைகளால் வாயை மறைத்துக் கொண்டிருக்கும்.

'ஏ மனக்குரங்கே! தீயவற்றைப் பார்க்காதே! தீயவற்றைக் கேட்காதே! தீயவற்றைப் பேசாதே!' என்று தான் இந்தப் புத்திசாலிக் குரங்குகள் நமக்கு எடுத்துரைக்கின்றன என்று காந்தியடிகள் தம்மிடம் வருவோர்க்கு விளக்குவார்.

புத்திசாலிக் குரங்குகள் பொம்மையைத் தயாரிக்கும் எண்ணம் எப்படி ஏற்பட்டது?

ஜப்பானில் நிக்கோ என்றொரு நகரம் இருக்கிறது இங்குள்ள புத்த கோயில் ஒன்றின் சுவரில் ஏறத்தாழ 330 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று புத்திசாலிக் குரங்குகளையும் ஓவியமாகத் தீட்டியவர் ஜிஸ்கோ என்ற மேதை. இவர் இடதுகையாற் சித்திரம் வரைபவர். இடதுகைப் பழக்கம் உடையவரை ஹிதாரி என்று ஜப்பானிய மொழியிற் குறிப்பிடுவது வழக்கம். எனவே இவரையும் ஜப்பானிய மக்கள் ஹிதாரி ஜிஸ்கோ என்றே குறிப்பிட்டனர்

ஹிதாரி ஜிஸ்கோ தீட்டிய சுவரோவியத்தைக் கண்டு வியந்த பொம்மைத் தயாரிப்பாளர் ஒருவர் புத்திசாலிக் குரங்குகளைப் பொம்மை வடிவிலும் தந்து விட்டார். அவர் அதிருஷ்டம் அந்தப் பொம்மைகளில் ஒன்று மகாத்மாவையே சுவர்ந்து விட்டதே!

மற்றொரு வேடிக்கை என்ன தெரியுமோ? மூன்று குரங்குகளுக்கும் தனித்தனி பெயர் வேறு சூட்டியிருக்கிறார்கள். மிஜாரு, இகஜாரு, இவஜாரு என்பவை தாம் அவை.

வி. கேயூரன்

## வசிட்டர் வாயாற் பிரம்மரிஷி

கொக்குவில் மஞ்சவனப் பதி திருமுருக கிருபானந்த வாரியார் கந்தபுராணத்தைப்பற்றிப் பத்து நாள்கள் சொற்பொழிவு செய்கின்றார்.

இன்றுதான் இறுதிநாள்; பத்தாம் (78. 09. 19) நாள் வள்ளிதிருமணத்துடன் வாரியார் விருந்து நிறைவுபெறுகிறது.

வாரியார் மணமக்களை வாழ்த்தினர்; வந்திருந்தவர்களை வாழ்த்தினர், பக்கவாத்திய கலைஞரையும் வாழ்த்தினர்.

பக்கவாத்தியம் வாசித்தவர்கள், வயலின்: சங்கீத வித்துவான் செல்வி தனதேவி சுப்பையா, மிருதங்கம்: சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். ராமநாதன் கடம்: அவர்மகன் ராஜன்.

செல்வி தனதேவி சுப்பையாவை வாரியார் பாராட்டுகிறார்.

''ஆரம்பத்திலிருந்தே இந்தம்மா அடக்கமா சுத்தமா அநுசரணையா வாசிச்சாங்க: நல்ல ஞானம்.

ஒருமுறை ஒரு ஊரிலே என் பேச்சு. இடையிலே சூரியகாந்தம் பாடினேன். வயிலின் வாசித்தவர் சக்கர வாகத்தை ரொம்பப் பிரமாதமா வாசிச்சிட்டார் இரண்டு இராகத்துக்கும் வித்தியாசம் ஒரே ஒருசுரம் தான்.

மீண்டும் சூரியகாந்தம் பாடினேன். அவரோவிடாக் கண்டர்சக் கரவாகத்தை விடவே மாட்டேன்னுட்டார். என்ன பண்றது. சம்சாரம் நம் வழிக்கு வராவிட்டால் நாம அவங்க வழிக்கு போகவேண்டியது தான். சக்கர வாகத்திலேயே பாடி முடிச்சிட்டேன்'' சூபீர்! என்று சபையில் எழுந்த சிரிப்பு அடங்க வெகுநேரம் பிடித்தது. வாரியார் தொடர்ந்தார்.

இந்த அம்மா அப்படி இல்லை. நல்ல ஞானம்—வாரியார் மனந்திறந்து நம் நாட்டுக் கலைஞர் ஒருவரைப் பாராட்டியதுமிக்க உவகையைத் தந்தது

வாரியார் இலேசுப்பட்டவரா? வசிட்டர் வாயாற் பிரம்மரிஷி என்று வாழ்த்தக் கிடைப்பது எத்துணைப் பாக்கியம் அத்துணைப் பாக்கியம் படைத்தவராய் விட்டார் நமது வயலின் வித்துவான் தனதேவி சுப்பையா.

தர்மபூபதி சிதம்பரநாதன் B. Music

## பேச்சுவன்மை இரண்டு உதாரணங்கள்

தந்தை பெரியாரின் தலைமையில் அறிஞர் அண்ணு, கலைஞர் கருணநிதி செயற்பட்ட காலம் அது.

அப்போதெல்லாம் நடக்கும் மாநாடுகளில் நடுநாயகமாக அமர்ந்திருக்கும் பெரியார், அந்த மேடைகளிற் சொற்பொழிவாற்றுவோரைத் தமது கைத்தடி மூலமே கட்டுப்படுத்துவார்.

'போதும் பேச்சை நிறுத்து!' என்று வாயாற் சொல்வதற்குப் பதில் தமது கைத்தடியை மேடைப் பலகையில் இரண்டு முறை தட்டுவார். அந்தச் சமிக்ஞையைப் புரிந்துகொண்டு பேச்சாளர்கள் தங்கள் உரையை முடித்துக்கொள்வார்கள்; முடித்துவிட வேண்டும். மீறுந்துணிவு யாருக்கும் இருந்ததில்லை.

ஒரு சமயம் கலைஞர் கருணநிதி பேசிக்கொண்டிருந்தார். தமது பேச்சின் நடுவே எந்தச் சமயத்திலும் பெரியார் கைத்தடியால் மேடையிலே தட்டித் தம்மை உட்காரவைத்துவிடக்கூடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே அவர் தமது பேச்சின்போது பின்வருமாறு கூறினர்.

'தாழ்வுற்ற நமது இனம் மீண்டும் தலை நிமிர்ந்து இந்தத் தரணிக் கெல்லாம் வழி காட்டும் எழுச்சியினை உடனே பெறவேண்டும். இல்லை, அந்த எழுச்சியையும் விழிப்பையும் நமது இனம் பெறுவதற்காக மேடையேறி முழங்குகின்ற என் போன்றவர்களை, உட்கார் என்று சொல்வதற்கு சையோடு கொண்டுவந்திருக்கும் அந்தக் கைத்தடியையாவது தந்தை அவர்கள் ஈரோட்டிலே வைத்து விட்டுவர வேண்டும்...''

அவையோர் ஆரவாரமான மகிழ்ச்சிக் கரவொலி எழுப்பினர்கள்.

கலைஞரோ இக்கட்டான நிலைக்கு ஆளாகி மெல்லத் திரும்பிப் பெரியாரைப் பார்த்தார் அவரோ அவையோரின் மகிழ்ச்சியிற் தானும் கலந்தவராக ''சரி...பேசு!'' என்று கலைஞருக்கு உற்சாகமூட்டினர்.

## பொறுக்கி!

ஒரு முறை, கவிஞர் பாரதிதாசன் புதுச்சேரி நிகழ்ச்சியொன்றிற் பேசினர் நிகழ்ச்சிக்கு அமைச்சர் ஒருவரும் வந்திருந்தார்.

பாரதிதாசன் தம் பேச்சின் போது இங்குள்ள 'அமைச்சர் ஒருபொறுக்கி... என்று கூறிவிட்டு மேசை மீதிருந்த குளிர்பானத்தை எடுத்து அருந்தத் தொடங்கினர். அப்போது கூட்டத்தில் ஒரே பரபரப்பு; அமைச்சரை அல்லவா 'பொறுக்கி' என்று விட்டார். பாரதிதாசன் குளிர்பானத்தை அருந்தி விட்டு ''...எடுத்த மணி'' என்று முடித்தார்; கூட்டத்தில் ஒரே சிரிப்பொலி.

இ. அநுரதன்

# பறவைகள் பலவிதம்

(தமிழ் நிலா-காகம், தேன்மொழி-கிளி, அன்பரசன்-வாத்து, இளவழகன்-மயில்போல வேடமணிந்து நிற்கிறர்கள்; அறிவண்ணன் வருகிறர்)

அறிவண்ணன்: என்ன? எல்லாரும் இன்று திடீரெனப் பறவைகள் ஆகிவிடீர்கள்?

தமிழ்நிலா: நாங்கள் ஒரு சிறுவர் நாடகம் போடப் போகிறேம்.

(நால்வரும் நாலு பறவை மாதிரி அசைகிறர்கள்; சத்தமிடுகின்றர்கள்)

தேன்மொழி: இன்று நாங்கள் செய்யப் போகிறவெள்ளுடுப்புஒத்திகையைநீங்கள் பார்த்து அபிப்பிராயம் சொல்ல வேண்டும்.

அறிவண்ணன்: மெத்த மகிழ்ச்சி! யார் இந்த நாடகத்தை எழுதி நெறிப்படுத்தியது?

அன்பரசன்: இளவழகன் தான் நாடக ஆசிரியர்; நெறியாளர்; பிரதான நடிகர் எல்லாம்...

இளவழகன்: (சிறிது தயங்கி வெட்கப்பட்டு) ஏதோ சும்மா ஒன்று செய்து பார்ப்போம் என்று...

அறிவண்ணன்: அது நல்ல முயற்சி. ஓய்வுநேரத்தில் நல்ல பயனுள்ள வேலை செய்கிறீர்கள். பார்க்கச்சந்தோசமாக இருக்கிறது ஒப்பனை எல்லாம் முடிந்ததா?

தமிழ் நிலா: இன்னும் கொஞ்ச வேலை இருக்கிறது.

தேன்மொழி: அதுவரை நாங்கள் இந்தப் பறவைகளைப் பற்றியே அண்ணுவிடமிருந்து ஏதும் பிடுஙகலாம்.

அறிவண்ணன்: பறவைகளுக்கு எத்தனை கால்?

அன்பரசன்: இதென்ன? பால்குடிப்பிள்ளையைக்கேட்கும் கேள்வி! இரண்டுகால் தானே?

இளவழகன்: இல்லை நாலு கால்.

அறிவண்ணன்: பார்த்திர்களா? உங்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடு வந்து விட்டது. பறவைகள் பறத்தலுக்காகச் சிறப்படைந்தவைர்வன. அவற்றின் முன்னங்கால்களே இறக்கைகளாக மாறி உள்ளன. ஆகவே அவற்றுக்கு நாலு கால் என்று இளவழகன் சொன்னது அர்த்தமுள்ள பதில்தான்.

(தமிழ்நிலா, தேன்மொழியின் காதில் ஏதோ இரகசியம் சொல்கிறள்)

அறிவண்ணன்: என்னவாம் தமிழ்நிலா?

தேன்மொழி: கிளிக்குப் பல்லு இல்லையாம். நடிக்கும் போது பல்லைக் காட்டிச் சிரிக்காமல் நடிக்கட்டாம். இருவரும் சிரிக்கிறர்கள்; ஏனையோரும் சிரிக்கிறர்கள்)

அறிவண்ணன்: பறவைகளுக்குப் பொதுவாகப் பல் இல்லை என்பது உண்மை தான். ஆதியிற் சில பறவைகளுக்குப் பல் இருந்திருக்கிறது. அவற்றில் முக்கியமானது ஆக்கியொப்ரெறிக்ஸ். (Archaeopteyx) இந்தப் பறவை இப்போது இல்லை.

தமிழ்நிலா: பறக்காத பறவைகளும் இருக்கின்றனவா? அண்ணு.

அறிவண்ணன்: இருக்கின்றனவே. ஆபிரிக்காவின் தீக்கோழி, தென் அமெரிக்காவின் எமு (Emu), அவுஸ்திரேலியாவின்கசோவரி, நியூசிலாந்தின் கிவி (Kiwi) ஆகியவை பறப்பதில்லை. இவை ஓடும் பறவைகள்.

தேன்மொழி: அப்படியானுல் எங்கள் நாட்டுப் பறவைகள் எல்லாம் பறக்கும் இல்லையா!

அறிவண்ணன்: ஆம்! நீங்கள் நன்ருகப் பறந்து பறந்து நடிக்கலாம்.

அன்பரசன்: பறவைகளில் பெரியது எது?

அறிவண்ணன்: மடகாஸ்கரில் வாழ்ந்த மோவாஸ் (MOAS) எனப்படும்யானைப் பறவைதான் மிகப்பெரிது. சில நூற்றுண்டுகளுக்கு முன் இது அழிந்து விட்டது. இதன் முட்டை ஓடுகள் சில இன்றும் குழந்தைகளின் குளிக்கும் தொட்டிகளாகப் பயன்படுகின்றனவாம்.

இளவழகன்: பெங்குவினும் பறப்பதில்லைத் தானே?

அறிவண்ணன்: அந்தாட்டிக்கில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த பறவை பென்குவின். அதன் முன்னங்கால்கள் துடுப்புகளாக மாறி நீந்த உதவுகின்றன.

தமிழ் நிலா: பறவைகள் எவ்வளவு தூரம் பறக்கும்?

அறிவண்ணன்: குடிபெயர்தலின் போது அவை நீண்ட தூரம் பறக்கின்றன. ஆட்டிக்ரேண் (Ardic tern) என்ற பறவை பாதகமான காலநிலையில் ஆட்டிக் வட்டத்திலிருந்து ஐரோப்பா, ஆபிரிக்காவின் கரையோரம் வழியே சுமார் 25,000 மைல்களைக் கடந்து தென் அத்திலாந்திப் பிரதேசங்களுக்குக் குடிபெயருகின்றது.

இளவழகன்:- பறவைகளில் ஆண் அழகானது. மனிதரிலும் அப்படித்தான்! அது தான் என்னை ஆண்மயிலாக நடிக்கவிட்டிருக்கிறர்கள்.

தேன்மொழி:- யார் விட்டது? தானே எடுத்துக் கொண்டது.

அறிவண்ணன்:- என்னைப் பொறுத்தவரை பிரபஞ்சத்தில் எல்லாமே அழகுதான். அழகும், அழகின்மையும் பார்ப்பவர் கண்களைப் பொறுத்தது.

அன்பரசன்:- கண் எல்லாருக்கும் ஒரே மாதிரித் தானே தொழிற்படும்?

அறிவண்ணன்:- சரி அவரவர் மன விசாலத்துக்கு ஏற்ப அறிவு விருத்திக்கு ஏற்ப அழகு வேறுபடும்.

தமிழ்நிலா:- அண்ணு திடீரென ஞானியாகிவிட்டார்.

அறிவண்ணன்:- இறைவனின் படைப்பில் எல்லாமே அழகானவை என்பதை நம்ப மறுப்பவன்; கடவுளே இல்லையென்பவன்; நாத்திகன்.

இளவழகன்:- பறவைகள் வானத்தில் எந்த விதக் கவலையுமின்றிப் பறந்து திரிவதைப் போல, நாங்களும் கொஞ்ச நேரம் சந்தோஷமாய் இந்த நாடகத்தை நடிப்போம்.

அறிவண்ணன்:- பறவைகளுக்குச் சுயநலம் இல்லை. ஆதிக்க வெறி இல்லை. பேராசை இல்லை. நயவஞ்சகம் இல்லை. மற்றவனை நசுக்கவேண்டும் என்ற சிந்தனை இல்லை. அதனுல் மகிழ்வாகப் பாடித்திரிகின்றன. சரி நீங்கள் நடிக்கத் தொடங்கலாம். நான் இங்கிருந்து பார்த்து விமர்சனம் கூறுவேன்.

(நாடகம் ஆரம்பமாகிறது அறிவண்ணன் கதிரையில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறர்)

**விழிசைக்குயில்**

## வளரும் பயிருக்கு...

# இரண்டு அநுபவங்கள்

கடைவிதிக்குக் கம்பளி வாங்கப் போனேன், ஒரு சகோதரி விற்றுக்கொண்டிருந்தாள். ஒன்றரை ரூபா விலை சொன்னுள் 'கம்பளி என்ன விலை? செய்வதற்கு எவ்வளவு செலவு? ஆடுகள் வளர்ப்பதில் என்னசெலவாகிறது? என்று நான் அவளிடம் கேட்டேன். இவற்றையெல்லாம் கேட்கும் 'இவன் யார்'? என்ற பாவனையில் அவள் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தாள். காந்தியடிகளின் ஆசிரமத்தில் வசிப்பவன் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். அவள் எல்லா விவரமும் என்னிடம் சொன்னுள்; கணக்கிட்டுப் பார்த்தேன் இந்தக் கம்பளத்தின் விலை ஐந்து ரூபா இதற்குக் குறைவாக இதன் அடக்க விலை இருக்காது, எப்படி இதன் விலை ஒன்றரை ரூபா என்று சொல்லுகிருய்?'' என்று நான் கேட்டேன். அவள் என்னையே கொஞ்சநேரம்பார்த்தாள்.

ஐந்து ருபா விலை நான் சொல்ல முடியுமா? ஒன்றரை ரூபா என்ருலே ஒன்றே கால் ரூபாவுக்குக் கேட்கிருர்களே! என்ருள்.

ஐந்து ரூபா கொடுத்து நான் கம்பளத்தை வாங்கிக் கொண்டேன். அவளுக்கு இது கலியுகமா? அல்லது சத்தியயுகமா? என்று ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. யாரோ மனிதத் தெய்வம் என்று நினைத்தாள்.

அப்பொழுது நான் காசியிலிருந்தேன். பூட்டு ஒன்று வாங்கவென ஒரு கடைக்குப் போனேன். பொருளைதையும் வாங்காவிட்டாலும் பொருள்களின் விலையைக் கேட்டுத்தெரிந்து கொள்வது என் வழக்கம். எனவே வாங்கப்போகும் பூட்டின் விலை எனக்குத் தெரிந்திருந்தது.

கடைக்காரன் ''பூட்டின் விலை பத்தணு'' என்ருன். ''அதன் விலை மூன்றணு என்று எனக்குத் தெரியும் ஆனுல் நீ பத்தணு என்று சொன்னதனுல் நீ கேட்ட விலையைக் கொடுக்கிறேன்'' என்று பத்தணு கொடுத்து விட்டுப் பூட்டை வாங்கி வந்தேன்.

நான் நாள்தோறும் உலாச்செல்லும்வழியில் அந்தக் கடை இருந்தது மூன்று வாரங்களுக்குப் பின் அந்தக் கடைகாரன் என்னை அழைத்தான். கடையில் அவனைத்தவிர வேறுயாரும் இல்லை. 'பூட்டின் விலை மூன்றணுதான்'' மிகுதி ஏழணுவைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிப் பணத்தை என்னிடம் தந்தான். எனக்கு அழுகை வந்துவிட்டது; சத்தியத்தின் உறுதியை எனக்குக் கடவுள் போதித்தது போலிருந்தது.

**ஆசார்ய விநோபா**

# நேரமா? அது போன்!

பெஞ்சமின்ஃபிராங்கிளினுக்குச் சொந்தமான புத்தக நிலையத்துக்குப்பிரமுகர் ஒருவர் வந்தார். புத்தகங்களைப் புரட்டினுர். ஒரு புத்தகத்தைச் சரேலென்று உருவினுர். 'பையா! இதன் விலையைச் சொல்'- விற்பனையாளனை அதட்டினுர்.

'ஒரு டொலர்' என்ருன் பையன்.

'ஒரு டொலரா? நீ சுத்த மோசம் கூப்பிடு முதலாளியை கர்ஜித்தார் கனவான்.

பையன், பெஞ்சமின் ஃபிராங்கிளினுடன் திரும்பினுன்.

'மிஸ்ரர் ஃபிராங்கிளின் இந்தப்புத்தகம் ஒருடொலர் என்கிருனே பையன்' -சிணுங்கினுர் வாடிக்கையாளரான பெரிய மனிதர்.

ஃபிராங்கிளின்,சிரித்தபடி இல்லை அதன் விலை ஒன்றரை டொலர் 'என்ருர்'

'என்ன இது ஒரே போக்கிரித்தனமாக இருக்கிறதே! பையன் ஒருடொலர் என்கிருன். அதே விலை அதிகம். நீரோ ஒன்றரை டொலர் என்கிறீரே' சினந்தார் சிமான். பெஞ்சமின் மீண்டும் புன்னகை பூத்தார் 'இப்போது அந்தப் புத்தகத்தின் விலை 2 டொலர்' கனவானுக்குக் கோபம் கட்டுமீறி விட்டது. 'அக்கிரமத்துக்கும் ஒரு அளவில்லையா? ஒரு டொலரும் பெருத புத்தகத்துக்கு 2 டொலரா? சீறினுர்.

ஃபிராங்கிளின் அமைதியாகச் சொன்னுர்.

'சற்றுமுன்பு அந்தப் புத்தகம் ஒருடொலர் விலைக்குரியதாக இருந்தது மெய்தான் இப்போது அதன் விலைஇரண்டரை டொலர், ஏன் தெரியுமோ? என்நேரம் பொன்னனது ஐயா பொன்னனது வந்தவர் மறுபேச்சின்றி இரண்டுடொலர் கொடுத்து விட்டு புத்தகத்துடன் வீடு திரும்பினுர்.

**கண்ணப்பன்**

# இக்பால் வரத் தாமதமாகும்

மாணவன் வகுப்புக்குத் தாமதமாக வந்தான். ஏன் இக்பால் இவ்வளவு தாமதம்?' என்ருர் ஆசிரியர். 'இக்பால்தாமதமாகத்தான் வரும்' என்ருன் மாணவன். இக்பால் என்ருல் புகழ் என்பது பொருள். இப்படி ஆசிரியர் மெச்சும்படி பதிலளித்த மாணவன்தான் பின்னுளில் மகாகவி இக்பால் ஆனுன்.

அரபு, உருது, பாரஸீகம் பஞ்சாபி ஆகிய மொழிகளில் மிகுந்த புலமை படைத்தவர் இக்பால், அவருக்கு இலத்தீன்' ஜெர்மன் பாஷைகளும் தெரியும். வடமொழியிலும் போதிய அறிவிருந்தது. பகவத்கீதையும் இராமாநுசரின்தத்துவங்களும் இவருள்ளத்தைக் கவர்ந்திருந்தன.

'உலகத்திற் சிறந்தது நம் இந்துஸ்தானம். இந்த மலர்வனம் நம்முடையது. நாம் இதன்புல்புல் பறவைகள்' என்றபொருள் அடங்கிய' ஹிந்துஸ்தான்ஹமரா' என்ற உருது கீதத்தைப் பாடிய முஸ்லிம் கவிஞர் இந்த இக்பால் தான்.

# கற்க எப்போது தொடங்கலாம்

வேலெண்ட் பாக்கர் புகழ்பெற்ற கல்விநிபுணர். கல்வி பற்றிய சொற்பொழிவொன்றை அவர் முடித்த சமயம் பெண்மணி ஒருத்தி எழுந்து நின்ருள்.

'அம்மணி தயங்காமற் கேட்க விரும்புவதைக் கேளுங்கள் என்ருர்பாக்கர். பெண்மணி 'ஐயா! என்னுடைய குழந்தைக்கு எந்த வயதியிலிருந்து நான் கல்வி கற்பிக்க வேண்டும்' என்ருள்.

'இனித்தான் உங்களுக்கு குழந்தை பிறக்கப் போகிறதா?' - இது பாக்கர் கேள்வி.

'இல்லை ஐயா! என் குழந்தைக்கு ஐந்து வயதாகிறது'

'அப்படியா! ஐயோ! ஐந்து வருடங்களை வீணுக்கி விட்டீர்களே! இனியும் இங்கே தாமதிக்காதீர்கள் உடனே வீட்டுக்குப் போங்கள். அந்தக் குழந்தை பாவம்! என்று அநுதாபப் பட்டார் பாக்கர்.

# தகுதி

மாவீரன் நெப்போலியனைப் பேட்டிகாண இளம் ஓவியன் ஒருவன் வந்தான்.

வறுமையில் வாடும் அந்த ஓவியன் கந்தல் ஆடையுடன் வந்திருந்தான். அருவருப்புடன்தான் நெப்போலியன் வரவேற்ருன். ஆனுல் உரையாடத் தொடங்கியதும் அறிவும் பண்பும் நிரம்பிய கலைஞன் அவன் என்பதை நெப்போலியன் உணர்ந்தான்.

பேட்டி முடிந்தது. ஓவியன் எழுந்தவுடன்நெப்போலியனும் எழுந்தான். ஓவியன் விடை பெற்ருன். வாயிலை நோக்கி நடந்தான். நெப்போலியனும் கூடவே நடந்தான். வாயிலையும் தாண்டி வீதிக்கு வந்து ஓவியனுக்கு நெப்போலியன் விடையளித்தான்.

ஓவியனுக்கோ வியப்பு. தன்னை வரவேற்பதற்குத் தயங்கிய சக்கரவர்த்தி இப்போது வாயில் வரை வந்து வழியனுப்புகிருரே! தன் வியப்பை வாய்விட்டே கேட்டு விட்டான் அவன்.

நெப்போலியன் சொன்னுன்.

'நண்பரே! முன்பின் தெரியாத மனிதர்களுக்கு அவர்களுடைய தோற்றத்துக்கேற்ற வரவேற்பு பழகிப் பிரிகையிலோ அவரவர் தகுதிக்கேற்ற வழியனுப்பு'

**உத்தராடன்**

# நாடகம்

# ரோசக்காரன்

## அராலியூர் ந சுந்தரம்பிள்ளை

பாத்திரங்கள்:-
ரங்கநாதன் - லிகிதர்; பாக்கியம் - அவர் மனைவி; அற்புதன் - அவர் நண்பர்; பரமசிவம் - கடைக்காரன்

காட்சி (I)

இடம் (யாழ்ப்பாணப் கச்சேரி வாசல்) ரங்கநாதன் சம்பளம் எடுத்துக்கொண்டு வேகமாகப் போகிறுன்)

அற்புதன்:- (தூரத்தில் இருந்து) டேய் ரங்கநாதன்! ரங்கநாதன்! கொஞ்சம் நில்லடா!...நானும் வாறன்!

ரங்கநாதன்:- (ஓடிக் கொண்டே) வாடா, வாடா!

அற்புதன்:- (ஓடிக்கொண்டு) கூப்பிடுறன்! கூப்பிடுறன், ஓடுருய்; என்ன?

ரங்கநாதன்.-(ஓடிக்கொண்டு) வாடா, வாடா! பஸ் வரப் போகுது!

அற்புதன்:-(கிட்டவந்து)அந்த பஸ்ஸை பிடிக்கத்தானே நானும் வாறன்

ரங்கநாதன்;- ஓ அற்புதன்!... நான் அவன் லிங்கன் எண்டு நினைச்சல்லோ ஓடின்னுன்! (அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிருன்)

அற்புதன்:- லிங்கன் எண்டா? ஏன்ரா... ஓடுவான்;

ரங்கநாதன்:- லிங்கனை உனக்குத் தெரியாதே?...கடன் கேப்பான்! (சிரிக்கிருன்)

அற்புதன்:- (சிரிப்புடன்) ஓ! சம்பள நாளெல்லே! விளங்குது! விளங்குது! மடியிலை கனமிருந்தால் வழியிலை பயம். [சிரிக்கிருன்]

ரங்கநாதன்:- லிங்கனுக்குக் காசைக் கண்டால் ஆசை வந்திடும் உடனே கடன் கேப்பன்

அற்புதன்:- அவனுக்கு இன்னுர் இனியார் எண்டில்லை! இந்தக் கச்சேரியிலை அவன் கடன் வாங்காத ஆளே கிடையாது! எவரிட்டையும் கேப்பன்!

ரங்கநாதன்:- இண்டைக்கு மத்தியானம் லஞ்ச் இன்ரேவெலிலை என்னைப் பாத்து ஒரு புன்னகை புரிஞ்சவன். எனக்கு விளங்கிப் போச்சு பின்னேரம் கடன் கேக்க போருனெண்டு! [சிரிக்கிருன்]

அற்புதன்:- [சிரிப்புடன்] அது தான் தலைதெறிக்க ஓடினனி டேய், ரங்கநாதன்! நீ சரியான ஆளடா! (சிரிக்கிருன்)

ரங்க:- அற்புதன்!ஆபத்து வர முன்னமே உணந்து தற்காப்பு நடவடிக்கை எடுக்கிறது நல்லது தானே? [சிரிக்கிருன்]

அற்பு:- ரங்கநாதன்! ஒரு வேளை நானும் கடன் கேக்கத்தான் கலைகிறன் எண்டு நீ நினைச்சுட்டியோ?[சிரிக்கிருன்]

ரங்க:- இல்லையடா அற்புதன்! எனக்கு உன்னைத் தெரியாதே!

அற்பு:- உவனுக்குகடன் குடுக்கக் கூடாது மச்சான்! லிங்கன் ஏன் கடன் வாங்கிறவன் எண்டு சொல்லு பாப்பம்? குடிக்க!...குடிக்க...!

ரங்க:-ஆ!...பஸ் வருது! பஸ் வருது! (பஸ் வருகிறது) இருவரும் ஏறுகிருர்கள்)

அற்பு:- ஏறு! ஏறு! கவனம்! ஆ! சீற்றுங் கிடக்கு!

ரங்க: பக்கத்திலை பக்கத்திலேயே சீற் கிடைச்சிட்டுது! (பஸ் புறப்பட்டுப் போகின்றது)

அற்பு:- (குரலைத் தாழ்த்தி) மச்சான் ரங்கநாதன் ஒரு 50 ரூபாய் எடுக்கலாமே?

ரங்க: - (ஆச்சரியமாக) என்ன அற்புதன்? ஐம்பது ரூபாயோ?

அற்பு:- ஓம் மச்சான் கடனுத் தா! அடுத்த மாதச் சம்பளத்திலே தாறன்!

ரங்க:- என்ன கடனே? (சிரித்து) டேய் அற்புதன் உதுக்குத்தான் என்னைத் துரத்திக் கொண்டு ஓடியந்தனியே? டேய் லிங்கனைப் பழிச்சிட்டு நீயே கடன் கேக்கிருய்? என்ன?

அற்பு:- லிங்கன் கடன் கேக்கிறது குடிக்க, நான் கேக்கிறது குடும்பச் சிலவுக்கு மச்சான்!...

ரங்க:- குடிக்க வெண்டால் என்ன குடும்பச் சிலவுக் கெண்டால் என்ன கடன் கடன் தானே மச்சான்...

அற்பு:- இது ஒரு அவசரத் தேவை மச்சான் ..

ரங்க:- தேவை எல்லாம் நாங்கள் ஏற்படுத்திக் கொள்ளுறதுதானே? அதுகளைத் தவிர்க்கலாம். மச்சான் அற்புதன்! நானும் உன்னைப்போலை மாதச் சம்பளம் எடுத்துச் சீவிக்கிறவன் தானே? என்னிட்டை நீ கடன் கேக்கிறியே?

அற்பு:- தவிர்க்க முடியாத ஒருதேவைவந்தபடியால்தான் கேக்கிறன்

ரங்க:- அடுத்த மாதமும் இப்பிடி ஒரு தவிர்க்க முடியாத தேவை வராதெண்டு என்ன நிச்சயம்? மச்சான் அற்புதன்! ஆன முதலிலை அதிகம் செலவானல் மானமழிந்து மதிகெட்டு...

அற்பு:- ரங்கநாதன் உந்தப் பாட்டு எனக்கும் தெரியும் மச்சான்!

ரங்க:- தெரிஞ்சு கொண்டும் கடன் கேக்கிறியே மச்சான்!

அற்பு.- இந்தக் காலத்திலை வாழ்க்கைச் செலவும் கூடிக் கொண்டு போகுது!

ரங்க:- அது உனக்கு மட்டுமே கூடுது? எல்லோருக்கும் தானே கூடுது? அதுக்கு ஏத்த மாதிரித் திட்டமிட்டுச் சிலவழிக்க வேணும்! நான் வீட்டிலை கட்டளை! பெண்சாதி பிள்ளையள் எல்லோருக்கும் கண்டிப்பாச் சொல்லீட்டன். ஒரு சதம் கூட வரவுக்கதிகமா செலவழிக்கக் குடாதெண்டு... சிலவெல்லாம் திட்டப்படிதான்!

அற்பு:- நான் திட்டமிட்டு 'பஜெட்' போட்டுச் சிலவழிச்சாலும் சில வேளையள்லை எதிர்பாராத சிலவுகள் வந்து பஜெட்டை மீறிடுது!

ரங்க:- மச்சான்! தேவையைக் குறைக்கச் சிலவும் குறையும். உறவுக்குப் பகை கடன். இந்தச் சின்னக் கடனுலேஎங்களுக்கை உள்ள சிநேகிதம் கெட்டாலும் கெடும்!

அற்பு:- அது கெடாது மச்சான். நான் அடுத்த முறைச் சம்பளத்திலை கட்டாயம் திருப்பித் தருவன்.

ரங்க:- அற்புதன்! உனக்கு அடுத்த மாதமும் ஒரு புதுச் சிலவு வர...நீ என்னை பேஸ் பண்ண ஏலாமல் திண்டாட என்னைக் கண்டும் காணுதது போலை எங்கேயோ பார்த்துக் கொண்டு போக... எனக்கு கோபம் வர... அதெல்லாம் வேண்டாம் மச்சான்...நாங்கள் நண்பராயே இருப்பம் (சிரிக்கின்ருன்)

அற்பு:- சரி மச்சான் கடனை விடுவம்...பஸ்டாண்ட் வந்தாச்சு இறங்குவம்.

'யாழ் பஸ்டாண்ட்' இருவரும் இறங்குகிருர்கள்.

அற்பு:-ரங்கநாதன்!

ரங்க:- என்ன மச்சான்?

அற்பு:- ஒண்டு தட்டுவமே? (லேசான சிரிப்பு)

ரங்க:- என்ன சாராயமோ? (பதறி) ஐஜையோ! வேண்டாம்! வேண்டாம்!

அற்பு:- கனக்க இல்லை ஆக ஒரு டிருும்!

ரங்க:- மச்சான் அற்புதன் உந்தக் குடியெண்டது எளிய சாமான்! ஆக ஒன்டெண்டு தான் போறது பிறகு போறது தெரியாமல் மளமளெண்டு இறங்கும்!

அற்பு:- இல்லை மச்சான் இது ஆக ஒண்டுதான் நாங்கள் என்ன மனக்கட்டுப்பாடு இல்லாத ஆக்களே?

ரங்க:- அற்புதம்! மனக் கட்டுப்பாடு இல்லாமல் தானே அங்கை போக வெளிக்கிட்டிருக்கிருய்?

அற்பு:- இல்லை மச்சான்!நான் நினைச்சா மனதைக் கட்டுப் படுத்துவன்!

இது ஆக ஒண்டு சும்மா சுதிக்கு.

ரங்க:-இப்ப கடன் கேட்டியே குடும்பச்சிலவுக்கெண்டு? பிறகு குடிக்கப்போறன் எண்ணுருய் உந்தக் காசைக் கொண்டு போய் பெண்சாதிட்டைக் குடு பிள்ளைகுட்டி சாப்பிட்டு!

அற்பு.-மச்சான் ரங்கநாதன்! அப்ப சம்பளம் எடுத்த சந்தோசத்துக்காவது ஒண்டு போட வேண்டாமே?

ரங்க:- (சிரித்து) சம்பளம் எடுக்கிறது சந்தோசமே மச்சான்?

அற்பு:- கையில காசு வாறது சந்தோசம் இல்லையே?

ரங்க:-கைக்கு காசு வாறது சரி அது கையிலை நிலைச்சு நிக்குதோ? வீட்டுக்குப் போய் பெண்சாதின்ரை கையிலைகுடுக்கிறதோடை சரி. பிறகு மாதம் முழுக்கக் கிடந்து காயிறது தானே? சம்பளம் எடுக்கிறது துக்கம் மச்சான் 'துக்கம்' (சிரிக்கிருன்)

அற்பு:-அப்ப அந்த துக்கத்துக்கை ஒருநாளைக்காவது சந்தோசமாக இருப்பம்! சிரிக்கிருன்)

ரங்க:-சாராயத்தைக் குடிச்சா என்ன நஞ்சைக் குடிச்சா என்ன, எங்களுக்கினி சந்தோசம் எண்டது வராது மச்சான் மனச்சாட்சி கிடந்து அறுக்கும்! எங்கடை கதை கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கதை (பெருமூச்சுவிடுகிருன்)

அற்பு:- ரங்கநாதன்! அப்ப உழைச்சுச் சம்பளம் எடுத்து என்ன சுகம்?

ரங்க:- பிள்ளையளைப் பெத்து வளத்த சுகம்தான்! (சிரிக்கிருன்)

அற்பு:- அப்ப தண்ணி வேண்டாமெண்டால் வா ஒரு ஐஸ்கிறீமாவது சாப்பிட்டிட்டுப் போவம்!

ரங்க:-அதுகும் வேண்டாம்! அதிலும்ஒரு பத்துரூபா துண்டு விழும்! அற்புதன் உப்பிடி எத்தினை ஆசையள்?... (பெருமூச்சுவிட்டு) மனிசிக்கு ஒரு வூலிசாறி வாங்கிக் கொடுப்பம் எண்டு எத்தினை நாளாய்த் திட்டம் போடுறன்! திட்டம் இன்னும் நிறைவேறலை.

அற்பு:- ரங்கநாதன்! உனக்கு மனிசி மட்டும் எனக்கு வளந்த பொம்பிளைப்பிள்ளையள் மூண்டிருக்கு! அவளவை ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொண்டு வாங்கிகுடுக்க வேணும் எண்டு ஆசைப்பட்டன்...(பெருமூச்சு)

ரங்க:- அற்புதன்! இந்த லட்சணத்திலை எங்களுக்கு சாராயமும் ஐஸ்கிறீமுமே வேணும் பேசாமல்க் கெதியாய் வீட்டுக்குப் போ! ரவுணுக்கை நிண்டியோ, காசெல்லாம் முடிஞ்சு போம்! பிறகு பிள்ளை குட்டி பட்டினி. நானும் வீட்டை போறன். நீயும் போட்டு வா!

காட்சி (2)

இடம்:- ரங்கநாதன் வீடு. ரங்கநாதன் வருகிருன்.

ரங்கநாதன்:- (தனக்குத் தானே)ஆ! வீடு கிட்ட வந்துட்டுது! இனிப் பயம் இல்லை அப்பாடா!சம்பளத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வாறதுக்கிடேலைதான் எத்தினை ஆசையள்! எத்தினை ஆபத்துக்கள்; கண்ணிலை கண்டதையெல்லாம் வாங்கச் சொல்லுது. தெரிஞ்சும் தெரியாமல் ஏதாவது ஒண்டை வாங்கீட்டா மாதக்கடசிலை,உதைக்குது! ...ஆ!வீடு வந்தாச்சு! வியப்புடன்) ...அது யார்? வீட்டு முத்தத்திலை நிக்கிறது? பேசிக்கொண்டு நிக்கிருன்! ஆத்திரமாய் பேசுறது போலையல்லோ இருக்கு! கத்திக் கத்திப் பேசுருன்! இவன் ஆர்? என்ன பேசுருன்?......

பரமசிவம்:- (கோபமாக) பெரிய கச்சேரி உத்தியோகம் அந்தப் பெருமைக்கு ஒண்டும் குறைவில்லை வாங்கித்திண்ட கடனைத் திருப்பிக் கொடுக்க வழியில்ல-கொப்பியைக் கொண்டந்து நீட்டிட்டுக் கடையிலை கிடக்கிற சமான்கள் எல்லாத்தையும் வாங்கியாகிறது மாதம் முடிய அந்தக்கடனைத் தீர்க்க வேணுமே எண்ட கவலை இல்லை! ஆயிரம் ரூபாய்க்குச் சாமான் வாங்கினு, நூறு இருநூறைக் கொண்டந்து தந்திட்டு பல்லிளிக்கிறது வெக்கமில்லாமல்!... நானும் முதல் போட்டுத்தான் கடை நடத்துறன் இந்த மாதிரி நாலு வீட்டுக்காறர் செய்தா என்ரை முதல் என்னவாகிறது? கடையை இழுத்து மூடவேண்டியது தான்! .. கையாலை வாங்கின கடனையாவது குடுக்காமல் விடலாம்இது வாங்கித் திண்ட கடன்! இதைக் கூடக் குடுக்காமல் விடுதுகள்! இதுகளுக்கும் திண்டது செமிக்குது தானே?........ .. இதுகளுக்கு வெக்கம் மானம் ரோசம் எண்டு ஏதாவது இருந்தால்லே? ரோச நரம்பே அறுந்து போச்சு!

ரங்கநாதன்:- (வந்து கோபமாக) ஏய்! நீ ஆர்? ஏன் கத்துருய்?

பரமசிவம்:- (நக்கலாக) என்னைத் தெரியேல்லையோ ஐயாவுக்கு? கடன் வாங்கித் தின்னேக்கை நல்லாத் தெரிஞ்சுது இப்பதெரியாதுதான்!... நான் தான் உந்தப் பிள்ளையார் கோயிலடிச் சந்திப்பலசரக்கு கடைப்பரமசிவம்! நீங்கள் அரிசியும் மாவும் சீனியும் பருப்பும் வாங்கித் திண்ட கடைக்காரன். இப்ப தெரியுதே?

ரங்க:- ஏதோ நீ எங்களுக்குப் புண்ணியத்திலை தந்த மாதிரியல்லோ கதைக்கிருய்? காசு தந்து தானே வாங்கிரும் சாமான்களை.

பரம:- (கோபமாக) காசு தந்து சமான் வாங்கினுக் கடன் இப்படி ஏறுமே? பெரிய கச்சேரி உத்தியோகம்! வாங்கின கடனைக் குடுக்க வழியில்லை!

ரங்க:-(கோபமாக) கண்டபடி கதையாதை! ஓ நான் கச்சேரி உத்தியோகத்தன் தான்!... .. நீ படிச்சது ஐஞ்சோ...ஆறோ... கடை வச்சுக் கொஞ்சம் காசு பிரண்டதப்போலை வாயிலை வந்த மாதிரி பேசாதை.

பரம:- நீங்கள்கணக்கைப்பாத்துக் காசைத் தந்தா நான் ஏன்கண்டபடி பேசப்போறன்!

ரங்க:-என்ன நெடுக நெடுக தரேல்லை எண்டு கத்துருய்? கொப்பிலை எழுதச் சாமான் வாங்கிற மாசம் முடிய காசு தருவம்தனே.

பரம:- (நக்கலாக) ஓ தாறியள்! ஆயிரம் ரூபாய்க்குக் சாமான் வாங்கினு, மாதம் முடிய நூறு இறு நூற்றைக் கொண்டந்து நீட்டிப் பல்லைக் காட்டுறது.

ரங்க:- (கோபமாக) பரமசிவம்! பேசுறதை கொஞ்சம் அளந்து பேசவேண்டும்?

பரமசிவம்:- நீங்களும் காசைக் கணக்குப்பாத்து தந்தா நானும் அளந்து பேசுவேன்!

ரங்க:- (கோபமாக) சரி கத்தாதை! இப்ப உனக்கு எவ்வளவு தரவேணும்.

பரம:- இந்தா;...... நீங்களே கொப்பியைப் பாருங்கோ!

(கொப்பியை ரங்கநாதன் பார்த்து, வியப்புடன்)

ரங்க:- இரண்டாயிரம் ரூபாய்! இவ்வளவு கடனே (கோபமாக) என்ன கள்ளக் கணக்கு எழுதிறனியா?

பரம:- வீண் கதை வேண்டாம்! உங்கடை பெண்சாதி பிள்ளையளை கேளுங்கோ எப்பிடிக் கடன் வந்ததெண்டு எல்லாம் வடிவாய்த் தெரிய வரும்.

ரங்க:- (கோபமாக) சரி, இந்தா பிடி காசை! இனி மேல்ப் பட்டு இந்தப் பக்கம் வந்து உன்ரை அரியண்ட மூஞ்சையைக் காட்டாதை (காசைக் கொடுக்கிருர்)

பரம:- (போய்க் கொண்டு) நீங்களும் என்ரை கடைக்கு சாமான் வாங்க வராட்டி நானும் வந்து உங்களுக்கு என்ரை மூஞ்சையைக் காட்ட வேண்டிவராது (போகிருன்).

ரங்க:-(உரத்த குரலில்) பாக்கியம்! பாக்கியம்!

பாக்கி:- (வந்துகொண்டு எரிச்சலாக)ஓ!ஓ! ஏன் கத்திறியள்!

ரங்க:- (கோபமாக) என்ரை குரல் கேட்ட உடனை கோபம் வருது! இவ்வளவு சந்திக் கடைக்காரன் பரமசிவம் முத்தத்திலை நிண்டு கத்திக் கொண்டிருந்தான்! அது காதிலை விழேல்லை;

பாக்கி:- என்ன நடந்தது: ஏன் கொதிக்கிறியள்?

ரங்க:- கடைக்காரன் பரமசிவம் இதிலை பேசிக்கொண்டு நிண்டான் கடன் காசு தரேல்லை எண்டு......

பாக்கி:- ஓ! தெரியும்!... .. அதுக்கு?......

ரங்க:- (கோபமாக) என்ன தெரியுமோ? கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தனியே? ரோசநரம்பு இருந்தாலல்லோ!

பாக்கி:- எவ்வளவாம் கடன்?......

ரங்க:- இரண்டாயிரம் ரூபாய் கடன்! மனிசர் உப்பிடியும் வாங்கித்தின்னுறதே? அதுகும் ஒரு மாதத்திலை.....

பாக்கி: இது ஒரு மாதத்திலை வந்த கடனில்லை...... ..!

ரங்க:- பின்னை?...... எத்தினை மாதம்?

பாக்கி:- ஒவ்வொரு மாதமும் கடன் குடுக்கேச்சை (50) ஐம்பது நூறு (100) பத்தாமல் வரும். அப்பிடி மாதம் மாதம் சேர்த்துத் தான் இரண்டாயிரம் ரூபாய் ஆகிட்டுது.

ரங்க: - ஏன் இப்படியெல்லாம் கடன் படுறியள்?...... பாக்கியம் வருவாய்க்கு ஏத்தபடி சிலவழிக்க வேணும் எண்டு நான் உனக்கு எத்தினை நாள் சொல்லியிருக்கிறன்?

பாக்கி:- ஓ! பட்டரும் வெண்ணையும் சொக்குளேற்றும் வாங்கித்திண்டுதான், உந்தக் கடன் வந்தது! அவ்வளவும் பசிக்கு அரிசியும் காய்பிஞ்சும் வாங்கித்திண்ட காசு?

ரங்க:- (கோபமா) அந்தமாதிரிச் சிலவழிச்சா இந்த மாதிரிக் கடன் வருமே? இப்பிடிக் கணக்கு வழக்கில்லாமல் வாங்கித்தின்னுறதே?

பாக்கி:- ஏதோ நான் மட்டுந் தான் எல்லாத்தையும் திண்டு முடிச்ச மாதிரிஎல்லே கதைக்கிறியள்! எல்லாரும் தானே திண்டது!

ரங்க:- பாக்கியம்! நீ திண்டா என்ன? ஆர்திண்டா என்ன? எல்லாரும் சேர்ந்து திண்டா என்ன? கட்டுபடி ஆகாட்டில், சமான்களை குறைச்சு வாங்க வேண்டியதுதான்!

பாக்கி:- குறைச்சு வாங்கினு அரைப்பட்டினி கிடக்க வேணும் எல்லாரும்!

ரங்க:- (கோபமாக) இந்த மாதிரிக் கடைக்காறனிட்டைப் பேச்சு வாங்கிறதிலும் அரைப்பட்டினி கிடக்கலாம்!......அவன் பேசினதைப் பற்றி உங்களுக்கு ஒண்டுமில்லை! ரோசம் கீசம் இருந்தாலல்லோ?

14ஆம் பக்கம் பார்க்க

# கோரிக்கை: 5; கொடாவிடில் 'ஸ்றைக்!'

மனைவியர் சங்கத்தலைவி மங்கையர்க்கரசியார் இரு கைகளையும் முன்னோக்கி நீட்டி 'அமைதி அமைதி' என்று குரல் எழுப்பினார். இக் குரலை அலட்சியம் செய்துவிட்டு அங்கு கூடியிருந்த மனைவியரிற் பெரும்பாலானோர் கீச்சுக் குரலிலும், சத்தமாகவும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடவே தலைவி மங்கையர்க்கரசியார் கோபம் அடைந்து தமக்கு முன்னால் இருந்த மேசையிற் கையினால் ஒரு குத்துக் குத்தி ''அமைதி அமைதி'' என்று பேரொலி எழுப்பினார். அங்கு கூடியிருந்த மனைவியர் குழாம் சற்று அமைதி அடைந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு மனைவியர் சங்கத்தலைவி மங்கயர்க்கரசியார் தமதுமுன்னுரையை ஆரம்பித்தார்.

''சகோதரிகளே'' இன்று நாம் அவசர அவசரமாகக் கூடியிருப்பதன் காரணத்தை நீங்கள் அறிவீர்கள்! குறுகிய கால அறிவித்தலாக இருந்தும் இத்தனை அதிகமாக நீங்கள் வருகை தந்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற சில மாதங்களாக நாம் எமது கணவர்மார்களுக்கு எமது நியாயமான கோரிக்கைகளைச் சமர்ப்பித்தும் அதனை அவர்கள் ஒரு பொருட்டாக மதியாமல் 'எம்மைமிஞ்சி என்ன செய்துவிடுவார்கள்'? என்ற தலைக்கனத்தில் வாழ இருப்பதும் சகஜமாகப்போய் விட்டது.

'பொறுமைக்குப் பெயர் பெற்றவர்கள் என்ற பெயர் எமக்கு இருந்தாலும் எமக்கும் ரோசமுண்டு: தைரியமுண்டு: நியாயமான கோரிக்கைகள் எமது புருஷர்களால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அதைத்தகுந்த முறையில் எடுத்துக்காட்ட ''ஸ்ரைக்'' செய்யும் உரிமையும் எமக்குண்டு என்பதை நாம் காட்டியே ஆகவேண்டும்.

''எனவே எமது கணவர்மார்களுக்கு நாம் விடுத்தநியாயமான கோரிக்கைகளை அவர்கள் இற்றை நாள்வரை கவனிக்கவும் இல்லை: கவனிக்கப்படும் என்ற உறுதியை அளிக்கவும்இல்லை. இந்நிலையில் ஜனநாயக முறைப்படி நமது கோரிக்கைகள் கவனிக்கப்படும் வரை புருஷர்களுக்கு எதிராக ''ஸ்ரைக்'கில் இறங்குவதைத் தவிர வேறு வழி இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

ஒரு குரல்''ஸ்ரைக்''குக்குத் தேதி குறியுங்கள் செயலில் இறங்கத்துடிதுடிக்கிறோம்.

'உங்கள் ஆர்வத்தை மெச்சுகிறேன். இங்கு குழுமி இருப்பவர்களின் பரிபூரண சம்மதத்துடன் தான்''ஸ்ரைக்''குக்குத் தேதி நிர்ணயிக்கப்படும். அதற்கு முதல் நமது கோரிக்கைகளை மீண்டும் ஒரு முறை அங்கத்தவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அங்கத்தவர்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்படின் அவற்றை நிவர்த்தித்துக் கொள்வது நல்லது. கோரிக்கைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாது ''ஸ்ரைக்'' செய்வதும் இரண்டொரு நாள் ''ஸ்ரைக்'' செய்து விட்டு தலைமறைவாகி விடுவதும் மன்னிக்க முடியா குற்றங்களாகும்.

கோரிக்கை-1: இது''போம்'' யுகமாம். புருஷர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால், எமக்கு வேண்டியவற்றை அவர்கள் ''போம்'' மூலம் பரிசீலித்துத் தான் தருவார்களாம். உதாரணமாக எமக்கு சேலை வேண்டுமென்று நாம் கேட்டால் உடனேபுருஷர்கள்''போமை'' நீட்டுவார்களாம். அதில்உள்ள புடைவைகளின் கையிருப்பு மொத்தப் புடைவைகளின் ரகங்கள்; புடைவை வாங்கிய தேதிகள்; கடைசியாகப் புடைவை வாங்கிய தேதி; இப்பொழுதுபுடைவைத் தேவை ஏற்பட்டதன் காரணம்? இன்னும் என்னென்னமோ வினாக்கள் உண்டாம்.

ஒரு குரல் என்ன அக்கிரமமிது?

இன்னும், கேளுங்கள் நாங்கள் நகை கேட்டாலும் ''போம்'' தருவார்களாம். அதிற் கடைசியாக நகை மாற்றிய தேதி; நகை வேண்டுமென்ற எமது விருப்பத்திற்கு நமது தோழியர் யாராவது காரணமா? அடுத்த வீட்டு உபதேசமா?

**செ. நடராஜா**

ஒரு குரல்: சமையலறைப் பொருள்களின் கதி?

அதற்கும் ''போம்'' உண்டாம்; வாங்கிய தேதி உபயோகத்திற்கான காரணம்? முதலிய வினாக்கள் ''போமில் உண்டாம்!

ஒரு குரல்: எம்மைக் கலக்காமல் எடுத்துக் கொண்ட இந்த ''போம்'' விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வேண்டும். இந்த ''போம்'' விவகாரம் ஒழிக்கப்படவேண்டும்.

கோரிக்கை-2: பேசுவதுநமது பிறப்புரிமை. நாங்கள் இரண்டு பெண்கள் சேர்ந்து கொண்டால், பேசத்தான் செய்வோம். எங்கள் பேச்சு குரங்கு போலத் தாவித் தாவிச் செல்லும் என்பதும் உண்மை இதற்காகப் புருஷர்கள் நகைச்சுவைத் துணுக்குகள் எழுதுவதும், தமது மனைவியர் தமது தோழியரை வழியில், தெருவில் பார்க்க விடாமல் குடையினால் மறைத்துக்கொள்வதும் மன்னிக்க முடியாத பெரிய குற்றம்!

கோரிக்கை-3: மனைவி 'சினிமா' பார்க்கவிரும்பிப் புறப்பட ஆயத்தஞ்செய்தால் சில புருஷர்கள் தங்கள் அம்மாவின் அனுமதியைப் பெற விழைவதும் என்னடா சினிமா இது; காசைக் கரியாக்கிக் கொண்டு! பேசாமற் கோயிலுக்குப் போய்விட்டு வா!' என்று அம்மா கூறுவதும் அதையே தேவவாக்காக எண்ணிக் கொண்டு மனைவியின் ஆசையில் மண்ணைப் போடுவதும் இனி மன்னிக்கவே முடியாத குற்றங்கள். புருஷர்கள் வேண்டுமானால் அம்மா பிள்ளையாக இருந்து விட்டு போகட்டும்; ஆனால் எமக்கு நீதி வேண்டும்.

கோரிக்கை-4: நாம் நமது கூந்தலைப் பல முறைகளில் அலங்காரஞ் செய்து கொள்வதைப் பொறுக்க மாட்டாத சில மாமிமார்கள் தங்கள் பிள்ளைகளிடம் 'என்னடா' உன் பெண்டாட்டி சினிமாக்காரி வேஷம் போடுகிறாளே எப்படியடா இதையெல்லாம் சகித்து கொண்டிருக்கிறாய்?' என்று நீலிக்கண்ணீர் வடிப்பதும், புருஷர்கள் சிலர் இதை நம்பித் துள்ளிக் குதிப்பதையும் எத்தனை நாள்களுக்குத் தான் பொறுப்பது? இந்த 'அம்மாபிள்ளை'களை நல்வழிப் படுத்த 'ஸ்ரைக்' ஒன்றே தான் சிறந்த வழி!

கோரிக்கை-5: திடீரென நான்கு விருந்தாளிகளை வீட்டுக்கு அழைத்து வருவதும், அவர்களை நாங்கள் மலர்ந்த முகத்துடன் வரவேற்க வேண்டும் என்று நினைப்பது கண்டிக்கத்தக்கவையாகும். இம் மாதிரித்திடீர்த் தாக்குதல் நடாத்தும் புருஷர்களுக்கு எதிராக 'ஸ்ரைக்' செய்வதில் என்ன தவறு?

'இவ் ஐந்து முக்கிய கோரிக்கைகளையும் முன் வைத்து மனைவிமார் சங்கம் புருஷர்

[ 14-ம் பக்கம் பார்க்க]

# இலக்கணம் பூச்சாண்டியா

இலக்கணம் என்றால் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் முதல் வயசு வந்தவர்கள் வரையில் பயப்படுகிறார்கள் இது இந்த நாட்டின் துரதிருஷ்டமென்றுதான் சொல்ல வேண்டும். இலக்கணத்தைச் சொல்லிக் கொடுத்தவர்களும் மாணாக்கர்களை அளவுக்கு மிஞ்சிப் பயமுறுத்திவிட்டார்கள். பொதுமக்களும் அதில் என்னதான் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளத் துணியாமல் அஞ்சி நடுங்கித் தூரவைத்துத் தொழுது வருகிறார்கள். இது உண்மையில் இரங்கத்தக்க விஷயம். மிகவும் சிக்கலான சட்ட நுணுக்கங்களையும் அரிய நுண்ணிய கணித விஷயங்களையும் சிக்கறுத்துத் தெளிய வைக்கும் தமிழர்களுக்கு இலக்கணம். ஒரு பூச்சாண்டியாக இருப்பதென்றால், குற்றம் இலக்கணத்தில் இல்லை. நம்முடைய அசட்டையோ அநாவசியமான பயமோதான் அந்தக் குற்றத்துக்குக் காரணம்.

இலக்கணத்தைக் கண்டு பயப்படவேண்டிய அவசியமே இல்லை. பாஷை ஜீவநதி போன்றது. தமிழோ என்றும் ஜீவனுடன் ததும்பும் பெரிய நதி. இடையறாது புனல் பரந்து பூம்பொழிலையும் வளவயலையும் செழிக்க வைக்கும் ஆறு அது. அந்த நதிக்குக்கரைபோல இருப்பது இலக்கணம். இயற்கையான அழகைத் தடைப்படுத்திச் சிறையிடுவது இலக்கணத்தின் செயல் அல்ல. இயற்கையாக வரும் வெள்ளத்தை ஒழுங்குபடுத்தி யாவருக்கும் பயன்படுத்தும் கரையைப்போல ஆன்றோர் வகுத்தநெறி இன்னதென்று அறிவித்துப் பின்னால் வருபவர்களுக்குப் பல சௌகரியங்களைச் செய்து கொடுக்கும் வழிகாட்டி போன்றது அது. அந்தக் கரையைக் காரணம் இல்லாமல் உடைப்பதோ, ஜலமே தெரியாமல் மலையைப்போல் உயர்த்திமனித முயற்சியை வீணாக்குவதோ கூடாது. காலத்தின் மாறுபாட்டால் உடைந்த பகுதிகளைப் புதிய மண்ணினால் அடைத்துச் செப்பம் செய்வது போல, இலக்கணக் கரையிலும் புதிய புதிய அமைப்புக்களைச் சேர்த்துக் கொள்ளலாம் இதற்கு இலக்கணம் இடங் கொடுக்கிறது. இலக்கணம் வளர்ந்து வந்த விதத்தை அறிந்தால் நாளுக்கு நாள் அது எப்படிக் காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டே வந்திருக்கிறதென்பதை உணரலாம்.

இலக்கணக் கரையை உடைத்தெறிவது பெரிய காரியம் அல்ல. சில இடங்களில் உடைப்பது அவசியமாகவும் இருக்கலாம். ஆற்றின் வெள்ளநிலை, காலத்தால் ஏற்பட்ட மாறுபாடு, கரையின் அமைப்பு ஆகிய எல்லாவற்றையும் நன்கு அறிந்த இஞ்சினீயர்களே மராமத்து வேலை பார்க்கத் தகுதியுடையவர்கள். கடப்பாரையும், கரண்டியும் உடையவர்களெல்லாம் கரையைச் செப்பஞ் செய்வதென்று வந்தால், கரையும் இராது, ஆறும் இராது; அழகான ஆற்றைக் காட்டாற்றைப் போன்ற நிலைக்குத்தான் கொண்டு வரும்படி நேரும்.

**கி. வா. ஜகந்நாதன்**

# மோட்டாகி அலர்கையில் உதிர்ந்த (குங்ஃ)பூ

புறூஸ்லீ—
உயரம் 5 அடி 7 அங்குலம்
நிறை: 64 கிலோ
நிறை: 64 கிலோ.

''கிராப்'' தலை. குண்டுகளாலும் துளைக்க வியலாதோ என எண்ணவைக்கும் இறுகிய உடற்கட்டு.

'என்டர் தி டிராகன்' படத்தின் மூலம் நாம் இச் சீன இளைஞரை அறிவோம். இவர் திரைப்படங்கள் உலக இளைஞர் சமுதாயத்தில் புறூஸ்லீயிசம்' என்ற ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி இளைஞர்களை நல்வழிப்படுத்தியது என்று தான் கூறவேண்டும்.

குடி, போதைமருந்து எனத் திரும்பவிருந்த இளைஞர்புறூஸ்லீயைத் தம் 'ஹீரோ' ஆகக் கொண்டு உடற்பயிற்சிகளிலும் கராட்டி குங்ஃபூ போன்ற தற்காப்புக் கலைகளிலும் அக்கறை செலுத்தத் தொடங்கினர். ஆனால்,

திரைப்படத்துறை புறூஸ்லீயின் சொந்த வாழ்வினைத் தலைகீழாக மாற்றியது. புதிய சிநேகங்கள் ஏராளமான பணம், பெண்கள் தொடர்புகள்—

இந்த இளைஞனை தன் முப்பத்திரெண்டாவது வயதிலேயே மரண வாயிலுக்கு இட்டுச் சென்றன.

மரணத்துக் காரணம் வலிப்பு நோய் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும் புறூஸ்லீயின் மரணம் இன்னமும் மர்மமே!

புறூஸ்லீ மரணம் பற்றிய செய்தியை ஆரம்பத்திற் பலர் நம்பவில்லை 'கேம் ஒவ் டெத்' என்ற இவரது கடைசித் திரைப்படத்திற்கதன விளம்பர யுக்தி அது எனவே மக்கள் கருதினர்.

1973 யூலை 20-ல் புறூஸ்லீ மரணமடைந்தாலும் இன்று வரை அவர் ஏற்படுத்திய அலை ஓயவில்லை. இன்றும் இவரின் யுத்த தந்திரோபாயங்களை அடியொற்றிக் கராட்டி குங்ஃபூ கலைகள் திரைப்படங்களிற் பின்பற்றப்படுகின்றன. புறூஸ்லீயை பலர் 'இமிரேற்' செய்தனர். போலிகள் ஒரு போதும் அசலாவதில்லையே. தனியே உடல் வலிமையை மாத்திரம் கொண்டு புறூஸ்லீ புகழ்பெறவில்லை.

நிதானம், மதிநுட்பம், விரைவான தீர்மானம் விரைந்த மின்னற் செயற்பாடு, லாகவம் - இவையெல்லாம் அவரின் உடைமைகள்.

கராட்டியையும் குங்ஃபூவையும் இணைத்து 'ஜுகுனேடா' என்ற புதிய தற்காப்புக் கலையையே அறிமுகம் செய்தவர் புறூஸ்லீ.

சங்கிலியினாற் பிணைக்கப்பட்ட இரு குறுந்தடிகள், இவருடைய சிறப்பு மிக்க கருவிகள். இவற்றை புறூஸ்லீ கையாளும் பாணியே தனி.

தன் பதின்மூன்றாவது வயது வரை ஹொங்கொங்கில் மூலை முடுக்குகளில் சண்டை பிடித்துத் திரிந்த புறூஸ்லீ பின்னர் சீன குங்ஃபூவில் பள்ளிக்கூட

**வை. சிவநேசன்**

மொன்றிற் சேர்ந்து பயின்றார்.

குங்ஃபூவின் முழுப் பெயர் ஷா ஒலின் குங்ஃபூ ஷா ஒலின் என்பவரின் மடத்தில்தோன்றி வளர்ந்ததால் இப் பெயர் பொருள் கட்டுப்பாடு.

குங்ஃபூவில் Wing Chum என்ற ஒரு முறை உண்டு. இம் முறையின் சிறப்பம்சம் ஒரே முறையிற் தடுப்பதும் அடிப்பதும் தான். புறூஸ்லீ இம் முறையைப் பற்றிக் கூறுகையில். தடுப்பதும் அடிப்பது போலத்தான். எனவே இதில் வேகம் இரு மடங்காகும். என்றார். புலி, குரங்கு, பாம்பு போன்ற விலங்குகளையொத்த பாய்ச்சல்களும் குங்ஃபூவில் அடங்கும்.

சீனாவில் தொடர்ந்திருந்தால் தவறான வழிகளிற் செல்வான் எனக்கருதிய பெற்றோர் புறூஸ்லீயை அமெரிக்காவிற்கு அனுப்பினர். அங்குபல்கலைக் கழகத்திலேதற்காப்புப்போர்க் கலைகள் பற்றி நன்கு கற்றுத் தனக்கென ஒரு புதிய பாணியைக் ஏற்படுத்திக் கொண்டார்.

ஆரம்பத்தில் தொலைக்காட்சியில் வாய்ப்புப் பெற்றார். பின்னர் திரைப்பட வாய்ப்புக்களும் இவரைத் தேடி வந்தன.

கைகளையும்கால்களையும் தன் ஆயுதங்களாகப் பயன்படுத்திய புறூஸ்லீயே கராட்டி, குங்ஃபூ போன்ற கலைகளை உலகெங்கும் பிரபலமாகக் காரணர்.

பிக்பொஸ், என்டர் தி டிராகன், வே ஒவ் தி டிராகன், றிற்ரேன் ஒவ் தி டிராகன், தி கேம் ஒவ் டெத் எனும் இவரது திரைப்படங்கள் உலகப் பிரசித்தி வாய்ந்தவை.

கலிபோர்ணியாவில்லிண்டா என்ற அமெரிக்க அழகியை மணந்து இரு குழந்தைகளுக்குத் தந்தையான புறூஸ்லீற மொட்டாகி, அலர்கையில் உதிர்ந்த(குங்ஃ) பூ

# வட - கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை எறியங்கள் — ஒரு கணணியின் கணிப்பு

எஸ். அன்ரனி நோபேட்

ஒருநாட்டின் எதிர்காலச் சனத்தொகை எவ்வாறு இருக்கும் என்பதை எறியங்கள் மூலம் எதிர்வு கூறப்படுகின்றது. குடிசனவியலைப் பொறுத்தவரையில் இச் சனத்தொகை எறியங்கள் (Population Projections) மிக முக்கிய ஆய்வாக விளங்கி வருகின்றன. 1947இல்இருந்து ஐக்கிய நாடுகளினால் (United Nations) இத்தகைய குடிசனவியல் மதிப்பீடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டாலும் அதன் அங்கத்துவ நாடுகள் தாமாகவே தமது சொந்த மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றன. 1950இல் தேசிய ரீதியான மதிப்பீட்டு மூலாதாரங்கள் இல்லாத பல நாடுகளுக்கு, அந்நாடுகளின் மொத்த சனத்தொகை பற்றிய மதிப்பீடுகள் ஐக்கிய நாடுகள் சனத்தொகைப் பிரிவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. 1951இல் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகளின் சனத்தொகை அறிக்கையின் முதலாவது தொகுதியில் 1950—80 காலத்துக்கான உலக சனத்தொகை எறியங்கள்கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி குடிசனவியல் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நோக்கில் உலகம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. 1954-ல் உலக சனத்தொகை மாநாட்டிற் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் இப்பிரிவுகள் மேலும் விரிவாக்கப்பட்டு இருப்பத்தைந்தாக நிர்ணயிக்கப்பட்டன. 1957-ல் சனத்தொகை வளர்ச்சியின் ஏழு மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு 1980—2000 வருட காலத்துக்கான எறியங்கள் கணிக்கப்பட்டன.

1960-ம் ஆண்டின்பின்சனத்தொகை எறியங்களின் நோக்கமும் தேவையும் பரந்துபட்டதாக அமைந்தன. கிராம-நகர சனத்தொகை, தொழிலாளர் சக்தி, கல்விகற்போர், வீட்டுடமையாளர்கள் என்ற விசேட விடயங்கள் பற்றிய எறியங்களுக்கான தேவை எழுந்தது. இவை பற்றிய மதிப்பீடுகளைச் செய்வதற்கு புதிய முறைகள் பற்றிய அறிவினை பெற்றுக் கொள்ளலும் அவசியமாகப்பட்டது. 1968-ன் பின் கணனியின் (Computer] பயன்பாடு நடைமுறைக்கு வந்ததினால் 1965-ம் ஆண்டினை நிலையான வருடமாகக் கொண்டுபின்நோக்கி1950 வரையும் ஒவ்வொரு நாட்டுக்குமான எறியங்கள் தயாரிக்கப்பட்டன. முன்னையவற்றுடன் ஒப்பிட்டும் சரிபார்க்கப்பட்டது. 1970இல் கணனியின் கணிம (Software) பிரயோகங்கள் குடிசனப் புவியியலாளர்களுக்குக் கிடைக்கப்பெற்றமை மேலும் ஆர்வத்தைத் தூண்டின. கணிம அபிவிருத்தியானது இலகுவான முறையில் கணிப்புக்களை மேற்கொள்ள வசதியாக இருந்ததுடன் பிரதேச ரீதியாக எறியங்களைக் கணிப்பிடுவதற்குமாறிகளை (Variants) அதிகளவில் பயன்படுத்தவும் முடிந்தது. அண்மைக் காலங்களிலும் சில கணிமங்கள் குடிசனப் புவியியலாளர்களினாலேயே வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டு சனத்தொகை எறியங்களை மதிப்பிடுவதற்கு பிரயோகிக்கப்படுகின்றது.

## இலங்கையின் சனத்தொகை எறியங்கள்

சமூக பொருளாதார அபிவிருத்தியில் யதார்த்த ரீதியான கொள்கைகளை வகுப்பதற்கு எதிர்கால சனத்தொகையின் அளவு, வளர்ச்சி வீதம் என்பதனை அறிந்து கொள்வது கொள்கை வகுப்போர், திட்டமிடலாளர்களுக்கு அவசியமானது, சனத்தொகை எறியங்களைக் கணிப்பிடும் குடிசனவியலாளர்களின் (Demographers) மதிப்பீடும் எல்லாக் காலங்களிலும் சரியாக இருக்கும் எனக் கூற முடியாது. கருவள மட்டங்கள் (Fertility) இறப்பு, இடப்பெயர்வுகள் ஆகியவற்றை நிர்ணயிக்கும் காரணிகளை மிக நுணுக்கமாக மதிப்பிட முடியாததினால் அதனை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படும் எறியங்களும் பெரும்பாலும் சரியாகஇருப்பதில்லை. இலங்கையின் சனத்தொகை எறியங்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

இலங்கையின் சனத்தொகை எறியங்கள் காலத்துக்குக்காலம் பல ஆய்வாளர்களினால் மதிப்பிடப்பட்டுள்ளது 1957 இல் சர்க்கார் (Sarkar) என்பவரினால் 1951 -1976 காலத்துக்கான இரு எறியங்கள் கணிக்கப்பட்டன. முதலாவது எறியம் கணித செய்முறையையும் இரண்டாவது கூற்றுஎறியமாகவும் (Ccponent Projecions) இருந்தது. 1958இல் மத்திய, தாழ்ந்த, மிகத்தாழ்ந்த என்ற மூன்று நிலைகளைக் கொண்ட சனத்தொகை எறியங்கள் ஐக்கிய நாடுகளால் மதிப்பிடப்பட்டது 1959இல் 'செல்வரெட்ணம் என்பவர் 1956-81 காலத்துக்கான மூன்று எறியங்களை இலங்கையில் திட்டமிடல் பணிப்பகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தயாரித்தார். நாட்டின் அபிவிருத்தி திட்டமிடலில் பயன்படுத்தக்கூடிய விரிவான முதல் எறியமாக இது கருதப்பட்ட போதிலும் மொத்த சனத்தொகையின் அளவினை இது மிகை மதிப்பீடு (Over estimate) செய்தது குறிப்பிடத்தக்கது.

1970-ல் செல்வரெட்ணம், றைற் (Wright) ஜோண்ஸ் (Jones)ஆகிய மூவரும் சேர்ந்து 1968-98 காலத்துக்கான மூன்று எறியங்களைக் கணித்தனர். 1974 இல் குடிசனக் கணிப்புப்புள்ளிவிபரத் திணைக்களத்தினால் (Department of census and statistics) 1971-2000 காலத்துக்கான உயர், மத்திய, தாழ் வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்ட மூன்று எறியங்கள் வெளியிடப்பட்டன. எதிர்கால இறப்புக்களின் போக்கினைப்பற்றிய எடுகோளுகளுடன் இணைந்த முறையில் மூன்று வெவ்வேறுபட்ட கருவள மட்ட எடுகோள்களின் அடிப்படையில் கூறுமுறையைப் (Component method) பயன்படுத்தி மதிப்பீடு செய்தனர். அதேயாண்டு 'சிறிவாஸ்தவா'(Srivastsa-va) அபயக்கோன் Abeykoon) ஆகிய இருவரினால் சர்வதேச இடப் பெயர்வுகளைக் கவனத்தில் கொண்டு நான்கு சனத்தொகை எறியங்கள் உருவாக்கப்பட்டன.

இலங்கையைப் பொறுத்தவரையில் சனத்தொகை எறியங்கள் குறிப்பாக திட்டமிடல் மற்றும் கொள்கைகளை வரையறுத்தல் போன்ற நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு அபிவிருத்தி இலக்குகள்(Targets), எதிர்கால சனத்தொகையின் அளவுகள், அதன் தொடர்புகள் மூலம் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை நிதானமாக்கும் கொள்கைகளை வரையறுத்தல் போன்ற நோக்கங்களுக்காக எதிர்கால சனத்தொகை மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. சனத்தொகை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டு வீட்டுவசதிகள், சுகாதார மற்றும் சமூக சேவைகள், மனிதசக்தி என்பவற்றின் எதிர்கால மாற்றங்கள் எறியங்களினூடாக மதிப்பிடப்படுகின்றது. நகராக்கம், கைத்தொழில்கள், ஏனைய அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளிலுமான முதலீட்டு முயற்சிகள் பல்வேறு வயதுப் பிரிவினருக்கான சுகாதார, கல்வித் தேவைகள் போன்றவற்றின் கொள்கை மற்றும் திட்டமிடல் அம்சங்களில் எறியங்களின் உள்ளார்ந்த தன்மை பல நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.

## ஆய்வு முறைகள்

இலங்கையின் மொத்த சனத்தொகை, ஈர-வரண்ட வலயங்கள், ஒன்பது மாகாணங்கள் என்று தனித்தனியாக சனத்தொகை எறியங்கள் கணிக்கப்பட்டன. இவ் எறியங்கள் இரு முக்கிய மாதிரிகள் (Models) மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஒன்று அடுக்குக் குறிமாதிரி (Exponencial model) இது நேரடி (Dirct) பிற்செலவு (regression), திரிந்த (modi fied) ஆகிய மூன்று மாறிகளைக் கொண்டது. இரண்டாவது ஏகபரிமாண மாதிரி (Linear models) இதில் நேரடி பிற்செலவு என இருமாறிகள் உள்ளன. ஏகபரிமாண மாதிரியானது. சனத்தொகை அடுக்குக் குறியாக வளர்ச்சியடைவதற்குப் பதிலாக ஏகபரிமாண அமைப்பில் (Linear fashion) வளர்ச்சி அடைகின்ற தென்னும் எடுகோளைக் கொண்டுள்ளது.

1871- 2041 வரைப்பட்ட காலத்துக்கு 10 வருட இடைவெளியில் இவ் ஐந்து மாதிரிகளின் அடிப்படையில் சனத்தொகை எறியங்கள் கணிக்கப்பட்டன. இலங்கையில் சனத்தொகை பற்றிய புள்ளிவிவர கணிப்புக்கள் சிலகாலங்களில் ஒழுங்கான கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்பட்டாலும் 1946, 53, 63 காலங்கள் ஒழுங்கின்றி அமைந்துள்ளன. எனவே இவற்றிலிருந்து 1941, 51, 61 வருடங்களுக்கான சனத்தொகை தரவுகள் கணிக்கப்பட்டு, ஒழுங்கான கால இடைவெளியுடன் கணனியுட் செலுத்தப்பட்டன.

''பேசிக்'' (Basic) மொழியில் விசேடமாக விருத்தி செய்யப்பட்ட கணனி கணிமம் மூலம் இம் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சனத்தொகையை ஆதாரமாக வைத்து 1981 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை எறியத்தை கணித்தபொழுது உண்மையான தரவுடன் பெரும்பாலும் ஒத்திருந்தமை தெளிவாகியது. இதன் காரணமாக 2041 ஆம் வரை பத்துவருட கால இடைவெளியில் எறியங்கள் கணிக்கப்பட்டன. பிரயோகிக்கப்பட்ட ஐந்து மாதிரிகளில் அடுக்குக் குறி நேரடி மாதிரியே உண்மையான முடிவுகளைத் தந்தது. ஏனையவை சில காலங்களுக்கு குறைவான மதிப்பீடுகளையே தெரிவித்ததினால் பொருத்தம் அற்றதாகியது.

உதாரணமாக 1981 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை எவ்வளவாக இருக்கும் என கடந்தகால சனத்தொகையிலிருந்து கணிப்பீடு செய்த போது அடுக்குறி நேரடி மாதிரி மூலம் சனத்தொகை 14.9 மில்லியனாகவும் பிற்செலவு மாதிரி மூலம் 13.4 மில்லியனாகவும், திரிந்தமாதிரி மூலம் 13.7 மில்லியனாகவும் இருந்தது. ஏகபரிமாண நேரடி மாதிரியில் 13.8 மில்லியனாகவும், பிற்செலவு மாதிரியில் 12.2 மில்லியனாகவும் இருக்கலாம் என்ற முடிவுகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் 1981ஆம் ஆண்டின் உண்மையான சனத்தொகை 14.85 மில்லியனாகவே இருந்தது. எனவே அடுக்குறி (நேரடி) மாதிரியே மிகவும் பொருத்தமுடைய முடிவுகளைத் தந்தது ஏனைய மாதிரிகள் பல்வேறு கலங்களுக்கு ஒப்பிடுசெய்ய பயன்படுத்த முடியும்.

## இலங்கைக்கான சனத்தொகை எறியம்

1871ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை 2.4 மில்லியனாகவும் 1946இல் 6.7 மில்லியனாகவும் வளர்ச்சியடைந்ததுடன்1991இல் 14.85 மில்லியனாக இருமடங்கு அதிகரித்தது. இங்கு கணிப்பிட்ட எறியத்தின்படி இலங்கையின் சனத்தொகை 1991இல் 17.55மில்லியனாகவும் 2001-ல் 20 74மில்லியனாகவும் 2021-ல் 28.97 மில்லியனாகவும் 20.41-ல்40 46மில்லியனாகவும் அதிகரித்துச் செல்லும். இதன்படி இந்நூற்றுண்டு முடிவில் இலங்கை இரண்டு கோடிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்கும். இக் கணிப்பு 1973-ல் பிறேஜ்கா (Frejka) என்பவரினால் எதிர்வு கூறப்பட்ட சனத்தொகை அளவுகளுடன் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஈர வரண்ட வலயங்களின் சனத்தொகை

1871இல் இலங்கையின் மொத்தசனத்தொகையில் ஈர வலயம் 58 வீதத்தையும் வரண்ட வலயம் 42 வீதத்தையும் கொண்டிருந்தது. 1981 இன் குடிசனக் கணிப்பின்படி வரண்ட வலயம் 6.3 மில்லியனையும் மொத்த நிலப்பரப்பில் 23.1 வீதத்தைக் கொண்ட ஈரவலயம் 8.5 மில்லியன் மக்களையும் கொண்டிருந்தது. ஈரவலயத்தினுள் கொழும்பு, களுத்துறை, கண்டி நுவரெலியா, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, கம்பகா ஆகிய ஒன்பது மாவட்டங்களும் ஏனைய 15 மாவட்டங்களும் வரண்டவலயத்தினுள் அடங்கும். 1946இன் பின்புவரண்ட வலயத்தில் மேற்கொள்ளப்பண்ட விவசாய அபிவிருத்திகளும், குடியேற்றங்களும் சனத்தொகை அதிகரிப்புக்குக் காரணங்களாயின. இக்காலத்தில் 33.7 வீதமாக இருந்த வரண்ட வலயத்தின் சனத்தொகை 1953இல் 35.4 வீதமாகவும் 1971இல் 39.5 வீதமாகவும் காணப்பட்டது. 1981இல் 42.75 வீதமாக உயர்வடைந்தது. 110 வருடங்களுக்கு முன் மொத்த சனத்தொகையில் வரண்ட வலயம் கொண்டிருந்த சத வீத அளவினை 1981இல் மீண்டும் அடைந்தது.

குடியேற்ற காலத்திலிருந்து நிர்வாக, கல்வி மற்றும்சேவை நிலையங்களை ஈரவலயம் கொண்டிருந்ததையும், நாட்டின் ஏனைய பாகங்களுடன் சிறந்த போக்குவரத்து தொடர்புகளால் இணைக்கப்பட்டிருப்பதும் ஏறக்குறைய 80 வீதமான கைத்தொழில் முயற்சிகள் இங்கு இடம் பெற்றிருப்பதும் அதிகசனத்தொகையை கொண்டிருக்கக் காரணமாககியது. சுதந்திரத்தின் பின் வரண்ட வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய அபிவிருத்திகள், முன்னேற்றங்கள், உற்பத்தி அதிகரிப்பு, குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றினால் அப் பிரதேசத்தின் சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது. விவசாயம் வளர்ச்சியடைந்துது. பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பகுதியும் உற்பத்தி அளவும் அதிகரித்தது. 1946-63 காலத்தில்அனுராதபுர மாவட்டத்தில் பயிற்செய்கை நிலப்பரப்பு 68 வீதமாகவும் மொனருகல மாவட்டத்தில் 18 வீதமாகவும் அதிகரித்தது. வரண்ட ளலயத்தில் மேற்கொள்ளப்பட்ட மலேரியா தடுப்புமுறைகளும் சனத்தொகை அதிகரிப்புக்கு பெரும்பங்கினை அளித்ததுடன் இறப்புக்களையும் குறைத்தது. கருவளம் உள்நோக்கிய பெயர்வுகள் உயர்வு அடைந்தது.

அடுக்குறி மாதிரி எறியங்களை இவ்விவசாயக் காலங்களுக்குப் பிரயோகித்த பொழுது ஈரவலயத்தின் சனத்தொகை நேரடி மாதிரியில் 9.5 மில்லியனாகவும்பிற்செலவு மாதிரியில் 8.5 மில்லியனாகவும் இருந்தது. 1981ஆம் ஆண்டு உண்மையான சனத்தொகையும் 8.5 மில்லியனாகவே இருந்தது. குறிப்பிடத்தக்கது. ஈரவலயம் சனத்தொகை எறியத்தின்படி 1991இல் 10 மில்லியனாகவும் 2001இல் 11.8மில்லியனாகவும் 2021இல் 16. 44மி ஆகவும் 2041இல் 23 மி. ஆகவும் உயர்வடைந்து செல்லும். நாட்டின் மொத்த சனத்தொகையில் ஈரவலயம் கொண்டிருக்கும் மக்களின் சதவீதமானது 1991 இன் பின்பு உயர்வு தாழ்வு இன்றி தப்பிச் செல்லும் போக்கினையே காட்டுகிறது. வறண்ட வலயம் 1991இல் 7.5மி.யும் 2001-ல் 9மி. யும், 2021-ல் 12.6மி யும் 2041-ல் 17.8மி. யும் கொண்டிருக்கும் 1991-ல் இலங்கை கொண்டிருக்கக் கூடிய மொத்த சனத்தொகையை வரண்ட வலயம் 2041ஆம் ஆண்டு கொண்டிருக்கும் எனக் காட்டப்படுகிறது.

## அதிகரிப்பு வீத மாற்றங்கள்

அடுக்குக் குறி நேரடி மாதிரியில் கால இடைவெளிக்கான சனத்தொகையின் மாற்ற வீதம்(RateofChange) 18.2 வீதமாகவும் பிற்செலவுமாதிரியில் 18 வீதமாகவும் இருக்கும். ஈரவலயத்தின் மாற்ற வீதம் முறையே இருமாதிரிகளுக்கும் 17.93 வீதமாகவும் 18.26 வீதமாகவும், வரண்ட வலயத்துக்கு18 8 வீதமாகவும் 14.6 வீதமாகவும் இருக்கும் இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பைப் பொறுத்த வரை அடுக்குறி (r=0.9906), ஏகபரிமான (r=0 9322) ஆகிய இருமாதிரிகளும் நேர்கணிய அதிகரிப்பையே இக்காலத்தில் எடுத்துக் காட்டுகிறது. அவை மிகவும் வலிமையான குணகத்தைக் கொண்டிருக்கின்றன.

...14ஆம் பக்கம் பார்க்க

# கவி அரங்கம்

## பூஜைமலர்

அழகே
உனை என்
முற்றத்து
ரோஜா
என
ஒப்பிட்டேன்
என் பூஜை
மலர்
நீ யென
நினைத்தேன்
ஆனால்
அடியேன்
என்னிடம் கேட்காமல்
என் அழகு
ரோஜாவை யாரோ
கொய்து
விட்டார்கள்!

ஜெ. ஜெயா

## எது நிச்சயிக்கிறது

திருமணம்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகிறதா
இல்லை
அவள் கொண்டு
வரும்
வரதட்சணையில்
அல்லவா நிச்சயிக்கப்
படுகிறது.

க. கீதாஞ்சலி

## ஒரேமலர்

உலகில் ஆயிரம்
மலர்கள் மலர்கின்றன!
உன் இதயத்தை
பூஜை செய்யநீயொரு
மலரே உண்டு.

யாழ். நகுலேஸ்

## காதலர்களே

காதலர்களே!
சற்று கவனியுங்கள்.
காதலிப்பவர்கள்
எல்லாம்
சிரிப்பவர்கள்தான்.
ஆனால்,
சிரிப்பவர்கள்......
எல்லாம்
காதலிப்பவரல்லர்.
கவனிக்காவிடின்,
கற்பனைகளும்
கனவுகளும்
வீண் விரையங்கள்.

ராஜேந்திரம்

## அரங்கேற்றம்

அன்றைய பொழுதில்
நீ பார்த்த
பார்வையில் நான்
எனை மறந்து ஆடினேன்
நீ இரசித்தாயோ
இல்லையோ
எனைப்பார்த்து
சிரித்தாய் இல்லையா?
அந்த சிரிப்புக்கு
அர்த்தம் புரியாத
அபலையாகி
என் மனதையுனக்கு
அர்ப்பணித்து விட்டேன்
உன்னைச் சொல்லிக்
குற்றமில்லை
நீ சிரித்தது
அறிமுகத்தின்
அடிப்படையில்
நான் நினைத்ததோ-அது
அந்தரங்க உணர்வுகளின்
'அரங்கேற்றம்' என்று

கண்ணம்மா

## உதயம் நாடும் மலர்கள்

இவர்கள்
இரவில்......
கற்பனையில் நனையும்
கனவு மலர்கள்
வாழ்க்கை எனும்
வானத்தில்
கதிரவக் கணவனைத்தேடி
ஏழிசை பாடும்
ஏக்கக் குயில்கள்
'சீர்' கெட்டு நின்றாலும்
சிலலட்சவரதட்சணையுடன்
பொன்னூஞ்சலாட
எண்ணி
மலர்ந்த மலர்கள்—ஆனால்
கனவுச் சுவையில்
கண்ணூஞ்சலாடும்
ஜன்னல் மலர்கள்
ஊமை உணர்வுகள்
ஊர்வலம் போகும்
இதய வானின்
ஏகாந்த மலர்கள்
உணர்ச்சி வேள்வியில்
பருவ நினைவுகளை
ஆகுதியாக்கும்
ஆர்த்த மலர்கள்
இவர்கள் ஓர்
உதயத்தை நாடும்
விடிவெள்ளி மலர்கள்.

பத்மராஜா

## மாலைசூட வாருங்கள்...

சீதனமென்னும்
சிலந்தி வலைக்குள்ளே
சிங்கக் குட்டிகளெல்லாம்
சிக்கி விடுவதனால்
இங்கே நாங்கள்
அடுப்பங்கரைகளே
அசோக வனங்களாய்
அடை பட்டுக்கிடக்கிறோம்!
நாங்கள்
தட்டிக் கொண்டே
இருக்கிறோம்...
ஆனால் உங்களுடைய
மனக்கதவுகளும் சரி
மாளிகைக் கதவுகளும் சரி
திறக்கப்படுவதாய்த்
தெரியவே இல்லை!
முடியில் நரைவிழுந்து
முகத் தசைகள் சுருங்கிய
பின்பும்
எங்கள்
கனவுகள் எதுவும்
கலையவே இல்லை
ஸ்ரீ இராமர்களே
நீங்கள்
வீரம் மிக்கவர்கள் தான்
ஆனால் எங்கள் வாழ்வை
வீணடிக்காதீர்கள்!
விரைந்து வாருங்கள்
மாலை சூடுகிறோம்!

ஆதிலட்சுமி இராசையா

## காதல்

புராணத்தில்
ராமர் சீதை
காதலை
மெச்சும்,
வரலாற்றில்
அம்பிகாபதி
அமராவதி
மோகத்தை
வியக்கும்
பெற்றோர் தாம்
தம்
பிள்ளைகள்
காதலை
வெறுப்பதேன்
எல்லாம்
படிப்பது
தேவாரம் போலுமோ
அல்லது
ஏட்டுச்சுரைக்காய்
கறிக்குதவாது
போல்
இவை
படிக்க மட்டுமே
என்பதாலோ?

தி. தவபாலன்

## தனிமைத் துயரில்...!

இயற்கை எழிலே நின்னையான் பாடி
இன்றுடன் போயின நாள்பல ஓடி
புயற்கை சுழலும் துரும்பென வாடி
புழுதியில் உழல்கையில் ஏதடி தோடி?
கரை மணல் தடவும் அலைச்சுக வருடல்
கால்களை அரிக்கும் மாலைநற் பொழுதில்
நிரை நிரையாக நித்திலப் பூக்கள்
கடல்மடி சிரிப்பதைக் கண்டு கண் பூக்க
நுரைத்தவெள் ளலையில் முளைத்தவெண் ணிலவில்
சிலைத்தவந் நாட்கள் விலைப்படு பொருளோ?
நிமிர்ந்தும் மட ங்கியும் சரிந்துபின் னெழுந்தும்
திமிர்திரை சிரிக்கும் களுக்கெனும் ஒலியில்
அமிழ்தம் ஒழுகும் ஒருகுடம் கிழக்கில்
ஆசைக் கதிர்கள் தாங்கியே விரியும்
குமுதம் புதுமலர் குளிர்ந்த நன் னயனம்
குழியச் சிறுநகை நாணத் தெறியும்
அளக்கும் மேகத் தாயிரம் கோடி
அழகுத் தாரகைப் புஷ்பங்கள் தெரியும்
இழக்கும் சித்தம் இருந்ததோர் காலம்
இற்றைநா ளதற்கெலாம் பொழுதேது?
பால்போல் வானில் உலவிடும் நிலவு
பறந்து தெறிக்கும் துளியென மீன்கள்
ஆலிளந் தளிரை அறுகம் புல்லை
அணைத்து நடக்கும் ஆசைத் தென்றல்
ஒடி மடிந்து ஓலமிட்டலறி
ஒளிரும் மணலை முத்திடும் அலைகள்
வாடி மெலிந்து விழியிடை நீராய்
வளர்ந்து ஒழுகும் ஏழையென் இதயம்
காலைப் பனியால் எழுதிய இதழால்
கனிந்த முத்தம் பெறுவதை உன்னும்
சோலைக் குயிலின் சுதியினிற் குழைத்த
சுந்தர மழலை மென்குரல் நினையும்
தோளில் ஏறிக் குதிப்பதும் மார்பில்
சாய்வதும் நெஞ்சில் முள்ளெனக் கீறும்
மூளும் அனலில் முழுகிடு நெய்யாய்
முளைந்த கவியும் முழுதாய் உருகும்...!
கடலின் மடியில் படகுதள் ளாடும்
கவலைப்பிடியில் மனமுந்தள் ளாடும்
சுடரும் நிலவை செறிமுகில்மூடும்
சேரும் நீ ரென் கண்களை மூடும்
பிரிவின் துயரில் திரைகளும் கூவும்
பேதை மனமும் பிரிவினில் கேவும்
பிரிவின் தென்றல் பழகிடும் போதும்
பாழும் எரியாய் மேனி கொதிக்கும்
பற்றிய கைகள் பரிவுடன் தழுவும்
பாக்கிய மற்றுத் தனித்ததென் வாழ்வு
சுற்றிய மாலை சேர்ந்தது விண்ணில்
சுமந்த தோள்கள் துவண்டது மண்ணில்

நிம்மதி

## இதயம் இழக்காதீர்

வெட்கமின்றிச் சொல்லி வேதனைப்படுகின்றீர்
பக்கத்துணை ஒருத்தி பந்தாடிவிட்டாளென்று
ஏமாறுபவன் எதையுமே நம்புபவர்
ஏழை எளிய இளவயது மங்கையர் தான்

ஏட்டிக்குப் போட்டியதாய் எங்களைத் துரோகியென்று
எழுதுபவர்க்காக இரக்கப்படுகின்றோம்
பழுதுங்கள் கண்களிலே பாவம் உங்கள் நெஞ்சிலே
எழுந்தமான எண்ணத்தில் எதை எதையோ எழுதுகிறீர்

மங்கையர் நாம் வலைவீசி மன்னவனே தஞ்சமென்று
கெஞ்சியழுதுவிட்டு வஞ்சித்து விட்டோமா
விஞ்சியேன் சொல்லுகிறீர் விளையாட்டேன் காட்டுகிறீர்
அஞ்சி ஒடுங்குகின்ற வஞ்சியரைப் பற்றியெல்லாம்

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பெலாம் சொன்று விட்டு
துச்சமாய் வந்து துணை தேடி நின்றோமா?
விண்ணுணம் போட்டு விடுகவிதை புனையாதீர்
உண்ணுணை அண்ணுமார் உபகதைகள் சொல்லாதீர்

காதலித்திருப்பீர்கள் கன்னியும் காத்திருப்பாள்
காதகன் நீர் என்று கண்டு கைவிட்டிருப்பாள்
ஏழையை ஏற்பேன் என்றுமே சொல்லிவிட்டு
ஏராளம் கொடுக்கின்ற ஏந்திழைக்காய் போயிருப்பீர்

பொய்யர் புளுகர்களை மெய்ஞ்ஞானமற்றவரை
ஐயா நீர் என்று அடிவருடமாட்டோம் நாம்
உண்மை நேர்மை உயர்ந்த பண்பாடுடைய
உத்தமரின் துணைக்காக உயிரையும் விட்டிடுவோம்

இதயம் இழப்பவர்கள் இரக்கம் நிறைந்தவர்கள்
பழக இனியவர்கள் பாசத்தின் பொக்கிசங்கள்
பாவையர்கள் நாங்களன்றி நீங்களல்ல சோதரரே
வஞ்சகரை நம்பி இதயம் இழக்காதீர் வஞ்சியரே

செவ்வந்தி மகாலிங்கம்

## பெண்ணினமே புரிந்துகொள்

ஓ
பெண்வர்க்கமே
புரிந்து கொள்ளுங்கள்!-
உண்மையை
அறிந்து கொள்ளுங்கள்!!

திருமணவாழ்வில்
ஓர் பெண்ணைப்பற்றி
நாம் நினைப்பதெல்லாம்...
ஆம்
அந்த நான்கும் போதும்.

ஆனால்
கஷ்டப்பட்டு
பெற்றெடுத்து,
காளையாய்
வளர்த்தெடுத்து,
கல்யாண மண்டபத்தில்
காட்சியாய் நிறுத்திவிட்ட,

அந்தப் பெண்ணின்
அருமைத் தாயின்
ஆசைதான்
அந்த நாலெழுத்து —
'சீதனம்'

ஓ
பெண்களே—நாம்
சிந்தித்து விட்டோம்,
ஆனால் நீங்கள் .....??

காதலித்த கன்னியை
கல்யாணம் செய்ய
தடை போட்டு,
சீதனம் கேட்பது .....
யார்? ஆணா? பெண்ணா?

நீங்கள் உங்கள்
கணவனிடம்
எதிர்பார்ப்பது ..?

'அழகானவனாக'
'அறிவுள்ளவனாக'
'குணமுள்ளவனாக'
'ஆண்மையுள்ளவனாக'

போதுமா?
இல்லையே,—இதனுடன்
'பட்டம்' என்ற
நான்கெழுத்தும்,
'பதவி' என்ற
மூன்றெழுத்தும்
சேர்ந்துவிட,
'சீதனம்' என்ற
நான்கெழுத்தின்
'ரேட்' ஏறத்தான்
செய்கிறது

'டாக்டர்,'
'என்ஜினியர்',
'எக்கவுண்டன்,'—என
பட்டியல்படுத்தி
ஏலம் கேட்கும்
பெற்றோர்கள்
இருக்கும்வர...!

ஏழைப் பெண்களின்
இளமைக் காலங்களும்,
இனிய கனவுகளும்
கொழுந்துவிட்டு
எரிவதைத்தவிர
வேறுவழி...?

சம்பிரதாயங்கள்
மாற்றப்பட வேண்டும்
அதற்கு......?
வீணே ஆண்களைச்
சாடுவதை விட்டு,......
ஆறுதலாய்ச் சிந்தியுங்கள்!

எம்மிடம் துணிவில்லை
ஆனால்
ஆண்மை...—
ஒரு
பெண்ணை—அவளின்
அன்பை மீற
எம்மிடம் துணிவில்லை
அவ்வளவு தான்

பெண்களே,
எம் குணமே
இதுதான்!

நீங்கள்
எம்மைப் புரிந்து
கொள்ளுங்கள்!
உண்மையை அறிந்து
கொள்ளுங்கள்

துணவியூர் கேசவன்
(89.07.23ஈழமில் எழில்
எழுதிய கவிதைக்கு பதில்)

# யாழ். சைவ சித்தாந்தக் கல்வி மரபு 1960 - 1965

2

**போ**த்துக்கேயரைத் தொடர்ந்து, ஒல்லாந்தரும் அதன் பின்னர் ஆங்கிலேயரும் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களைக் கிறித்துவத்துக்கு மாற்றுவதிற் பல வகையான உத்திகளைக் கையாண்டனர். அரசாங்கஉத்தியோகம், பதவி உயர்ச்சி, மேனாட்டுக்கல்வி முதலியன, தூண்டில் இரையாக அப்பாவி மக்கள் முன் வீசப்பட்டன. இத்தகைய வழிகளோடு மட்டும் நின்றுவிடாமல் அதிகாரபலத்தைப் பிரயோகித்தும்சைவமதத்தை ஒடுக்க அவர்கள் முயன்றனர்.

ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என்ற இருபிரிவினரும், போர்த்துக்கேயர் கடைப்பிடித்த அளவுக்குக் கடுமையான மதமாற்றும் கொள்கைகளைக் கடைப்பிடிக்காவிடினும், அதிக தாராளமாக நடந்து கொண்டார்கள் என்று கொள்வதற்கும் இடமிருக்கவில்லை. ஆங்கிலேய அரசு மதவிடயங்களில் நடுநிலையை மேற்கொண்டதெனக் கூறப்படினும் அவர்களுடைய போக்கு மறைமுகமாக-பாதிரிமாருக்கூடாக-மதமாற்றத்தை உற்சாகமூட்டுவதாகவே காணப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலேய ஆள்பதிகள் நாட்டின் பலபாகங்களிலும் கிறித்துவ மதக்குருக்களின் செல்வாக்கைப் பரப்புவதற்கு அரச ஆதரவையும் உதவியையும் நல்கினர். மதகுருமாரோ ஆங்கிலக்கல்வி என்ற தீன் சுவைப் பண்டத்தைக்காட்டிச் சைவப் பெற்றோரையும் பிள்ளைகளையுந் தம்பாலீர்த்தனர்.

1802ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 136000 கிறிஸ்துவர்கள் இருந்தார்கள். 1806-இல் புக்கணம் (Buchanam) என்பர். இலங்கைக்கு ஆங்கிலேயர் வந்த போது யாழ்ப்பாணத்திற் புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்தவர் எவருமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெஸ்லியன் (1814) அமெரிக்கன் (1816) சேர்ச் மிஷன் (1818) முதலாம் திருச்சபைகள் வேரூன்றி ஊரெங்கணும் தமிழ், ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவித் தமது சமயக் கொள்கைகளை மாணவருடாகப் பரப்பின.

1833ஆம் ஆண்டில், கோல்புறாக் ஆணைக்குழுவினர், கீழ்மட்ட நிர்வாகத்தைச் சுதேசிகளுக்கு வழங்குவதன் மூலம், நிர்வாகச்செலவைக் குறைக்கலாம்; சுதேசிகளை நிர்வாகத்துறையில் ஈடுபடுத்துவதற்காக ஆங்கிலக் கல்விக்கு முதலிடம் வழங்க வேண்டும் என்று சிபார்சு செய்தனர்.

'மலைநாட்டில் கோப்பிப் பெருந்தோட்டம் எந்தளவு துரிதமாக விருத்தி அடைந்ததோ அந்தளவு துரிதமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கிறித்துவப் பாடசாலைகள் விருத்தியடைந்தன. கோப்பியினூற கிடைத்த அபரிமிதமான லாபம் ஐரோப்பிய பெருந்தோட்டச் செய்கைக்காரரிடையே ஏற்படுத்திய கோப்பி வெறிபோல் (Coffee Mania) அரசாங்கஉத்தியோக வாய்ப்புக்கள் சைவர்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் மத்தியில், ஆங்கிலக் கல்வி வெறியினை ஏற்படுத்தின.

சமயப் பிரசாரத்துக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் தமிழ் நாட்டில் சங்ககாலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கக் காண்கிறோம். கி. பி. 2ஆம் நூற்றுண்டளவில் தமிழ் நாட்டிற்குள் நுழைந்த பிற மதத்தவரான சமணபௌத்த முனிவர் பள்ளிக் கூடங்களை அமைத்து மாணவர்களுக்குஉண்டி, உறையுள் வழங்கித் தமிழிலக்கண இலக்கிய நூல்களை இயற்றி மக்களைத் தம்பால் ஈர்த்தனர். பழைய இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் பள்ளி என்ற சொல் சமண பௌத்த முனிவர் வாழ்ந்த இல்லங்களையே குறிக்க வழங்கப்பட்டுள்ளன. மதுரைக்காஞ்சியில் மதுரையிலே சோலைகளிற் சமணத் துறவிகள் வாழ்ந்து சாவகருக்குக் கல்வி கற்பித்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

'சைவ இளவலாகிய மருணீக்கியார் மணப்பள்ளியைச் சார்ந்து பாடலிபுரத்துச் சமணமடத்தலைவராய்ப் பணிபுரிந்தார் என்பர். கிறித்துவர்களும் இதே வழிகளைப் பின்பற்றியே தமது மதமாற்றும் முயற்சிகளை விஸ்தரித்தனர்.' என்பர் ஜெபநேசன். ஆயின் மிஷனரிமார்களின் நோக்கம் மதமாற்றமே தவிர சுதேசிகளின் கல்வியை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்பதல்ல. கல்வி வளர்ச்சி காலப் போக்கில் தவிர்க்க முடியாது நிகழ்ந்த பக்கவிளைவே என்பதனை அமெரிக்க மிஷன் போதகர் கனம் C. D வேலுப்பிள்ளையின் பின்வரும் குறிப்புத் துலாம்பரமாக்கக் காணலாம்.

'யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் கல்வியறிவிற் தேற்றமடையத்தக்க ஒழுங்குகளை மிஷனரிமார் செய்தபின் தங்கள் சொந்தப்பிள்ளைகளுக்குக் கல்வியறிவை யூட்டும்படி யாது செய்யலாமென யோசித்தனர். இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாசாலைகளிற் கற்கும் சுதேச மாணுக்கருடன் மிஷனரிமாரின் பிள்ளைகளையும் படிக்கவிட்டால் இத் தேசத்துத் துர்ப்பழக்க வழக்கங்களுடன் ஊடாடி அவர்கள் கெட்டுப் போவார்களென மிஷனரிமார் நினைத்து மிகுதியுங் கவலைப்பட்டு அமெரிக்கமிஷன் காரியஸ்தருக்குக் கடிதங்கள் பல ஒன்றின் பின்னொன்ருய் எழுதிவாதாடித் தங்கள் தேசத்துத் தங்கள் சாதி சனத்தாரிடம் அனுப்பி விடும்படி உத்தரவு பெற்றுக் கொண்டனர். அது முதல் மிஷனரிமார் தங்கள் பிள்ளைகளை 10, 12, 15 பராயமாவதற்குமுன் தங்கள் சென்ம நாட்டுக்கு அனுப்பி விட்டனர்.'

யாழ்ப்பாணத்தில் உள்ளவர் கல்வியறிவில் தேற்றமடையத்தக்க ஒழுங்குகள் தமது பிள்ளைகள் கல்வித் தேற்றமுறப் போதாதென்றும் இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாசாலையிற் கற்கும் சுதேச மாணவருடன் மிஷனரிமாரின் பிள்ளைகளும் கூடிப் படிக்க விடப்பட்டால் இத் தேசத்துத் துர்ப்பழக்க வழக்கங்கள் தம் பிள்ளைகள் மீதும் ஒட்டிக்கொள்ளும் என்றும் குறிப்பிட்டதன் மூலம் சுதேசிகளை மிஷனரிமார் எத்துணை அருவருப்போடு நோக்கினுர்கள் என்பதும் சுதேசிகள் மீது அவர்கள் காட்டிய கரிசனை போலியானதென்பதும் தெளிவாகும். மதமாற்றத்தைக்கூட அவர்கள் தத்தம் வயிறு வளர்ப்பதற்காகவே மேற்கொண்டனர். இவர்களால் மதம் மாற்றப்பட்டவர்களும் தத்தம் வயிறு வளர்ப்பதற்காகவே போலிக் கிறிஸ்துவர்களாக நடித்தனர் என்பதை ஆறுமுகநாவலர் அவர்களின் பின்வரும் கூற்று எடுத்துக் காட்டுகிறது.

'போலிக் கிறிஸ்தவர்களுடைய செய்கைகளெல்லாவற்றையும் பாதிரிமார்கள் நன்ருக அறிந்திருந்தும் இவ்வுண்மையைத் தங்களை இத்தேசத்துக்கு அனுப்பிய சங்கத்தார் அறிந்தார்களாயின் இங்கே கிறிஸ்து மதம்பரவாது என்று துணிந்து தங்களைச் சுதேசத்துக்கு வருவித்துக் கொள்வார்களென்றும் மேன்மேலும் தங்களுக்குப்பணம் அனுப்பார்களென்றும் தாங்கள் இத் தேசத்தைப் போலப் பிற தேசங்களிலும் அதிக சௌக்கியம் அநுபவித்தல் இயலாதென்றும் பயந்து இவ்வுண்மையை அவர்களுக்குத் தெரிவியாது இங்கே கிறிஸ்து சமயம் மேன்மேலும் பெருகுகின்றதென்று முழுப் பொய்யறிவிப்பு எழுதுகின்ருர்கள்.'

1855-ம் ஆண்டிலே இலங்கையில் மிஷனரிமாரின் பணியை ஆராயவந்த அண்டர்சன் விசாரணைக்குழு அமெரிக்கன் மிஷனரிமாருடைய சுவிசேடப்பணியில் அதிருப்தியடைந்து கல்வித்துறையில் அவர்கள் மேற்கொண்ட செலவைக் கட்டுப்படுத்தும்படி சிபார்சு செய்தது என்ற செய்தியும் மதமாற்றமே மிஷனரிகளின் முக்கிய குறிக்கோள் என்பதைப் புலப்படுத்துகிறது.

இங்ஙனம் பாதிரிமார் ஆரம்பக் கல்வி முயற்சிகளைச் சற்றே அலட்சியப்போக்கோடு மேற்கொண்டபோது இங்கு திண்ணைப்பள்ளிகளும் நிறுவன ரீதியானவை எனக் கருதத்தக்க கல்வி நிலையங்களுக்கும் இந் நாட்டுக்கே உரிய கலாசாரப் பின்னணியில் இயங்கின. அவை பற்றிய உதிரியான குறிப்புக்களே இன்று நமக்குக் கிடைப்பதால் அவை பற்றிய விரிவான செய்திகளைப் பெறமுடிவதில்லை. குறிப்பை எழுதி வைத்தவர்களும் பாதிரிமார்களே என்பதால் அக் குறிப்புக்கள் நடுநிலையானவை என்று முற்றுமுழுதாகக் கொள்வதிலும் இடர்ப்பாடுண்டு.

ஜோன்ஸ்கடர் என்ற மிஷனரியின் நினைவுக் குறிப்பொன்று இங்கிருந்த திண்ணைப்பள்ளி முறைபற்றி குறிப்பிடுகிறது.

'அவை (திண்ணைப் பள்ளிகள்) பெரும்பாலும் ஒரு மரத்தினடியில் அல்லது ஓர்வீட்டின் திண்ணையில் நடைபெற்று வந்தன. மாணவர் சப்பாணி கூட்டி உட்கார்ந்து தம் முன்னே பரப்பப்பட்டிருந்த புழுதி மணலில் எழுதக் கற்றனர். ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணியினுல் நூல்கள் எழுதப்படும். கருவி நூல்கள் அந்தாதி நிகண்டு என்பவை ஆரம்பத்தில் மனனம் செய்யப்படும். அதன்பின் பாடத்தை வகுத்துப் பொருள் காணப் பயில்வர். உயர்தர தமிழிலக்கண இலக்கியமும் சிலசில இடங்களில் சுதேசிய கலாசாலைகளிற் போதிக்கப்பட்டன.' இக்குறிப்பிலிடம்பெறும் சுதேசிய கலாசாலை என்ற தொடர் உயர்கல்வி நிறுவனங்கள் அக்காலத்திலே இங்கு நிலவின என்ற உண்மையை வலியுறுத்துகின்றன. ஆரம்பக்கல்வி திண்ணைப் பள்ளிகளிலும் உயர்கல்வி சுதேசிய கலாசாலைகளிலும் நடைபெற்றதாக ஊகிக்க இடமுண்டு. இச்சுதேசிய உயர் கலாசாலைகளே சைவ சிந்தாந்தாந்தக் கல்வியையும் வழங்குவனவாக அமைந்திருக்க வேண்டும்.

இலக்கணம் முதலிய கருவி நூல்களைப் பயில்வது மொழித்திறத்தின் முட்டறுப்பதற்கெனவும், மொழியாற்றல் சிந்திக்கப் பெறுவது முதல் நூல்களாகிய வேதசிவாகமங்கள், சமயசாஸ்திரங்கள் என்பவற்றைப் பயிலவே யென்றும் அங்ஙனம் பயின்று சாஸ்திரஞானம் வாய்க்கப் பெற்றவன் அநுபூதி நிலை பெற்று முத்தியென்னும் ஆன்ம விடுதலை பெறுவானென்றும் கருதிய பண்டையோரின் கல்வி நோக்கை,

> எழுத்தறியத் தீரும் இழி
> தகைமை தீர்ந்தால்
> மொழித்திறத்தின் முட்
> டறுப்பான் ஆகும்-
> மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன்
> முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்.

என வரும் திருக்குறள் (392) உரைமேற்கோள் காட்டுகின்றது.

திண்ணைப் பள்ளிகள் நிகண்டு, அந்தாதி முதலிய கருவி நூற்பயிற்சி நல்க, சுதேசிய கலாசாலைகள் உயர்தர இலக்கண இலக்கியப் பயிற்சி நல்கி மொழித்திறத்தின் முட்டறுத்தபின் முதனூற்பயிற்சியாகிய சைவ சித்தாந்தக் கல்வியை நல்கின எனக் கருத இடமுண்டு.

"இருபாலையில் சேனாதிராச முதலியாரும் உடுப்பிட்டியில் அருளம்பல முதலியாரும், வண்ணார்பண்ணையிற் சிலரும் ஒவ்வொரு கலாசாலை ஸ்தாபித்துத் தமிழ்க் கல்வியைக் கற்பித்து வந்தனர்."

என அமெரிக்க மிஷன் சரித்திரத்திற் போதகர் கனம் C. D. வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இதே போல, யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல கலாசாலைகள் இயங்கின. தெல்லிப்பளை மேற்கு விழிசிட்டியிற் சிவஞான வித்தியாசாலை என்ற பெயரில் அம்பலவாண உபாத்தியாயர் (அம்பலச் சட்டம்பியார்) கலாசாலை ஒன்றை அமைத்து (1855) ஒழுங்கு முறையிலான உயர் கல்வி அளித்து வந்தனர். இக் கலாசாலை போன்ற ஏனைய பல கலாசாலைகளைப் பற்றிய குறிப்புக்கள் தானும் இன்று கிட்டாது போயினமை துரதிருஷ்ட வசமானதாகும்.

போத்துக்கேயர் கால முதல் மூன்று நூற்றுண்டுகள் வரையில் நீடித்த திட்டமிடப்பட்ட கிறிஸ்துவத் தாக்குதலுக்கு ஆற்ருது நாளடைவிற் சைவ மதமும், கல்வியும் சற்றே ஆட்டங்காண நேர்ந்ததெனினும் அது நேர்ந்தமைக்கான காரணத்தை திரு. வ. ஆறுமுகம் M. Phil பின்வருமாறு விளக்குவர்:

"ஒழுங்கு முறையிலான சைவக் கல்வி வீழ்ச்சியடைய அது முற்ருக அழிந்து விடாமற் காப்பாற்றிய பெருமை ஆங்காங்கு இயங்கிவந்த திண்ணைப்பள்ளிகளையும், கோயில்களையும், மடங்களையுமே சாரும். பாதிரிமாருடைய பள்ளிக்கூடங்களிற் படிக்கப் போகும் ஒவ்வொரு பிள்ளையும் நெற்றியில் விபூதி இட்டிருந்தால் அதைத் துடைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட அந்த நாள்களிலும் சைவமதமும், கல்வியும் தப்பிப்பிழைக்க மேற்கூறிய தாபனங்களே காரணமாய் இருந்தன."

திண்ணைப்பள்ளிகளும், கோயில்களும், மடங்களும் மிஷனரிமாரின் மதமாற்ற முயற்சிகளுக்கு ஈடுகொடுத்து எதிர்த்து நின்று தலையெடுப்பதற்கான துணிவை மக்களுக்கு எவ்விதத்தில் நல்கின என்பதனைப் பின்வருமாறு ஆறுமுக நாவலரவர்கள் விளக்கியுள்ளார்.

'இந்தியாவிலே சைவசமயிகளுள்ளும் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும் இவ் யாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவர்களுள்ளும் சைவசமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணம் தான் என்னையெனிற் கூறுதும்; எத்துணைக்காலந்திருப்பித் திருப்பிப்படிப்பினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்தமிழ் தூறும் அதி அற்புத அதிமதுரத்திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினுல் இவர்களுள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்.'

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களோ,

'கந்தபுராண கலாசாரம் அருஞ் சந்தர்ப்பத்தில் நமக்கொரு நாவலரைத் தந்தது. அன்றி நாவலர் எடுத்த முயற்சிகளுக்குத் தோன்ருத்துணையாய் அநுகூலமும் செய்தது' என்கிருர்.

1706 ஆம் ஆண்டில் தரங்கம் பாடியில் மதப்பிரசாரம் செய்ய வந்த சீகன் பால்கு தென்னிந்தியக் கடவுளரைப் பற்றி நூலெழுதி ஜேர்மனியில் வெளியிட முயன்ற போது, அவரை அனுப்பி வைத்த தாய்ச்சங்கம்,

'உம்மைச் சுதேசிகளைக் கிறிஸ்துவர்களாக்க அனுப்பினேமே ஒழிய எமக்கு இந்தியக் கடவுளரைப்பற்றிப் போதிப்பதற்காக அல்ல'

என்று கண்டித்தமையை அறிந்திருந்த கலாநிதி ஹொய்சிங்ரன், சைவசமயத்தை ஆர்வத்துடன் கற்கவும் தத்துவக்கட்டளை, சிவஞானபோதம், சிவப்பிரகாசம் ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு சைவசித்தாந்தம் பற்றிய நூலொன்றை எழுதி 1854 இல் பிரசுரம் செய்யவும் தூண்டியதும் யாழ்ப்பாணத்தில் நிலவிய கந்தபுராண கலாசாரமே ஆகலாம். நாவலர், இவரும் இவர் போன்ற பிறபாதிரிமார்களையுமே,

'அப்பாதிரிமார்கள் நமது பெரியபுராணத்து சாக்கிய நாயனுர் போலக் காலம் விட்டார்கள்; விடுகின்ருர்கள், விடுவார்கள்'

எனக்குறிப்பிட்டிருக்க வேண்டும்.

'அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்' என்ற நூலில் (பக் 86) எஸ். ஜெபநேசன்.

'அமெரிக்கன் மிஷனரிமார் புராதன சமயங்களைத் தகர்த்தெறிவதில் வெற்றி காணவில்லை'

என்று கூறியிருப்பது முற்றிலும் உண்மையே.

மிஷனரிமாரின் செயற்பாடுகளால் யாழ்ப்பாணத்தில். பிராசீன வழியில் நீடித்து நிலைத்திருந்த சைவசித்தாந்தக் கல்வி மரபு புதுமலர்ச்சிபெற்று புதிய தொருவழியில் செல்லத் தொடங்கியது.

திருமதி சு. இராமநாதன்
B. A., Dip - in - Ed.

(வளரும்)

# வாழும் வழி

## தருமம் என்றொரு பொருள்!

**சிவத்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி**

'தர்மம் தலை காக்கும்' என்பது அனைவரது உள்ளத்திலும் ஒலிக்கவேண்டிய முதுமொழி உலகில் தோன்றிய ஒவ்வொரு பொருளும் அதனதன் தர்மத் திலேதான் தங்கியுள்ளது. தர் மம்அழிந்தால் அனைத்தும் அழி யும் எனவே அழியாத தர்மத்தி னுல் அனைத்தையும்காப்பாற்ற வேண்டும். அன்பும் கருணை யும் தர்மத்திலிருந்து பிறக்கின் றன. இறைவனுடைய வெளிப் பாடும் கருணைதான். உலகப் படைப்புகள் அத்தனையும்இறை வனின் குழந்தைகளே. பெண் ணில் நல்லாளொடும் பெருந் தகை இருப்பதனுல் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று ஞானக்குழந்தை அருளு கின்றது. தர்மமே நல்லவண் ணம்வாழ்வதற்கு உயிர்நிலையா கும் ஞானதர்மம், தானதர் மம் என்றெல்லாம் தர்மம் விரிவடைகிறது. இதனுலே உலகம் உய்வடைகிறது. 'தரு மந்தன் வழிச் செல்கை கட னென்று தன் மைந்தன் மரு மந்தன் தேராழி உற ஊர்ந் தான் மனுவேந்தன்' என்று குறிப்பிடும் மனுச்சோழனு டைய வரலாறு தர்மத்தின் உச்சநிலையாகும். இதனுல் அவ னுடைய ஆட்சிக்கு இறைவ னுடைய ஆசி முழுமையாகக் கிடைக்கிறது.

உலகிலே பெரும் கோடீஸ் வரராகிய ஒருவர் சிக்காக்கோ நகரில் சுவாமி விவேகானந்த ரைச் சந்தித்தார். அவருக்குச் சுவாமிகள் முதலில் கூறிய அருளுரை 'தருமம் செய்' என் பது. கோடீஸ்வரர் திரும்பி விட்டார் மீண்டும் இரண்டு வாரங் கழித்து வந்து தரிசித் தார். அப்பொழுதும் திரும் பிப்பாராமலேயே 'செயற் படுத்து' என்று திருவாய் மலர்ந்தார். கோடீஸ்வரர் தெளிவடைந்தார். அங்கிருந்து புறப்பட்டு தர்மகாரியங்கள் பலவற்றுக்கு நிதி கொடுத்து இன்றும் 'புகழ் பெற்ற பொன் மலை' என்ற பெருமைக்கு ஆளாகி நினைவு கூரப்படுகி ருர். அவர் ஒரு கோடீஸ்வரர் என்ற நாமத்தோடு மாத்தி ரம் வாழ்ந்திருந்தால் அவர் மறைவோடு நாமமும் மறைந் திருக்கும். ஆனுல் தர்மஸ்தா பனங்களை வளர்த்த காரணத் தால் அவர் மறைந்தாலும் நாமம் நின்று நிலவுகின்றது. ஞானிகளின் வாக்குக் காரிய சித்தியைத் தருவது.

பிறர் துன்பங்களைத்தன்னிற் காண்பது விசேட தர்மமா கும். திருநின்ற ஊரில் காளத்தி முதலியார் என்ப வர் சிறந்த தர்மவானுக வாழ்ந்தார். இரப்போர்க்கு இல்லையென்னுது வாரி வாரி வழங்கும் கொடையாளி அவர். இதனுல் அந்த ஊர் மன்னன் காஞ்சிப் பல்லவன் பொருமையடைந்தான். அவ ருடைய தர்மத்துக்கான சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். கொடுக்க வழியில் லையே என்ற கவலையுடன் முத லியார் மனைவியையும் அழைத் துக்கொண்டு சென்று ஒரு சத்திரத்தில் தங்கியிருந் தார். வறுமையால் வாடிய ஒரு புலவர் அந்தச் சத்திரத் திலிருந்து மறுநாள் முதலியா ரிடம் செல்வதாக நினைத்து மனதுக்கு ஆறுதல் கூறி ஒரு பட்டுப் பாடினுர். இருவரும் ஒருவரையொருவர் முன்பின் அறியாதவர்கள். புலவர் வறு மையை விளித்துப் பாடுகிருர். முதலியார் காதில் விழுகிறது.

'நீளத் திரிந்துழன்ருய்
நீங்கா நிழல் போலே
நாளைக்கிருப்பையோ நல்
குரவே- காளத்தி
நின்றவூர் சென்றக்கால் நீ
எங்கே நானெங்கே
இன்றைக்குச் சற்றேயிரு'

இப் பாடலைக் கேட்டவுடன் முதலியாருக்குக் கவலையேற் பட்டு புலவர் தன்னைக்காணுது ஏமாறப் போகிருரே என நினைத்து அன்றிரவே நின்ற வூர் சென்ருர். புலவர் அங்கு மறுநாட் காலை சென்றடைந்து முதலியாரை வணங்கி நின்ற போது புலவரைவரவேற்ற முதலியார் கொடுப்பதற்கு எதுவுமில்லையே என்ற ஏக்கத் தால் உயிரை விட நினைத்து நாகம் உறையும் புற்றில் கை வைத்தார். சீறி வந்த நாகம் அவர் கையில் நஞ் சைக் கக்காது நாகரத்தினத் தைக் கக்கியது கொடுத்துச் சிவந்த கையல்லவா? நாகம் எப்படி நஞ்சைக் கொட்டும்? முதலியார் மகிழ்ந்து நின் ருர். புலவரின் வறுமைக்கு நிவாரணமாக நாகரத்தி னத்தை வழங்கி உள்ளங் குளிர்ந்தார். கொடுத்துக் கெட்டவர் என்று எவருமி ருக்க முடியாதன்றே.

மௌனமும் ஒரு தர்மமா கும். இதனுல் மனம் வாக்கு காயம் மூன்றும் புனிதமடை கின்றன. திருவண்ணுமலையில் ரமண மகரிஷி மௌன தவம் அநுட்டித்து மக்களைப் புனி தப்படுத்தினுர். காந்தியடிகள் நாள் தோறும் சில மணிநேரம் மௌன தவம் செய்து மனதை தூய்மைப்படுத்தினுர். முடியு மானுல் தினந்தோறும் ஒரு மணி நேரமாவது மௌனத் தைக் கடைப்பிடிக்க வேண் டும் உணவருந்தும் போது மௌனம் இன்றியமையாதது. என்பது சுவாமி சிவானந்தர் போதனை. நாம நுபவிக்கும் அனைத்தையும் ஈஸ்வர அர்ப் பணமாக்குவதற்கு மௌன தவமே வாய்ப்பானது. புலன டக்கத்துக்கு மௌனம் முதற் படி. சிந்தனைத் தெளிவுக்கு மௌனம் முதற்படி. மௌன நேரங்களில் தனித் திருக்கப் பழகவேண்டும். இதனுல் உள் ளம் வலுவடைந்து உறுதி கிடைக்க ஏதுவாகிறது. பொதுவாகப் பேச்சைக் குறைப்பதும் செயலைப் பெருக் குவதும் மனிதனை உயர்த்துப் ஏணிப்படியாகும்.

கர்ணன் தான் செய்த புண் ணியம் அனைத்தையும் கிருஷ் ணுர்ப்பணம் செய்ததும் சுவர்க்கம் அடைந்தான். அங்கு அவனுக்குப் பசியேற் பட்டது. ஆனுல் சுவர்க்கம் செல்பவர்களுக்குப் பசியேற்ப டாது என்ற நூலுரையைத் தேவ தூதுவர்களிடம் அறி வித்தான். 'தர்மத்தை ஏற் போரின் பக்கத்திலிருந்து கொடுக்காதபடியால்தான் இங்கு பசியேற்பட்டது' என்று தேவ தூதுவர்கள் கூறினர். என்ருலும் சுட்டு விரலை வாயி னுள் வைத்துச் சுவைக்கும்படி கர்ணனுக்குக் கூறினர். அப்ப டியே செய்த பொழுது பசி நீங்கியது. காரணத்தை வின விய போது 'துரியோதனன் சபைக்கு கிருஷ்ண பரமாத்மா தூது சென்ற காலை விதுரன் வீட்டைச் சுட்டிக்காட்டி' உங் களுக்கு உணவு அங்கேதான்' என்று கூறிய மகிமையால் சுட்டு விரலே பசி தீர்க்கும் சக்தியைப் பெற்றமையை உணர்த்தி நின்றனர் தேவ தூதர்கள். எனவே தர்மம் செய்ய முடியாத போதும் அதற்குரிய இடத்தைச் சுட் டிக் காட்டல் உயர்ந்த தர்மம் என்பதை இதனுல் அறிய முடிகிறது. தர்மம் என்றொரு பொருளின் ஒரு பகுதியை மாத்திரம் இங்கு கண்டோம்.

---

## சந்திப்பு

## நாவலாசிரியை கோகிலா மகேந்திரன்

சந்தித்தவர்
ஊரெழு தர்ஷினி

?:- எமது நாட்டையும், எமது இனத்தையும் பொறுத்தவரை விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில பெண் எழுத்தாளர் களைத் தவிரக் குறிப்பிடக் கூடிய அளவுக்குப் பெண் எழுத்தாளர்கள் உருவாக வில்லையே; ஏன்?

!:- 'எமது நாட்டிற் பெண்க ளுக்கு என்ன உரிமை வழங் கப்படவில்லை? உயர்கல்வி கற் கின்ருர்கள்; சைக்கிள் ஓடுகின் ருர்கள்; பிறகென்ன குறை?' என்று கேட்பவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி இது! பெண்களுக்கு எல்லா உரிமை களும் வழங்கப்பட்டிருப்பது போன்ற திரையின் உள்ளே, பெண்கள் தமது திறமைகள், ஆற்றல்களை உரிய முறையில் வெளிக்கொணர முடியாதவர் களாகவே இருக்கின்ருர்கள் என்பதற்கு இது ஒரு சான்று

?:- யாழ்ப்பாணத்தில் வெளி யாகும் பத்திரிகைகள் சஞ்சி கைகள், என்பன எமது எழுத் தாளர்களை வளர்த்தெடுக்கப் போதுமானவையா?

!:- யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகைக்கு இங்கு வெளியா கும் பத்திரிகைகள், சஞ்சிகை கள் குறைவு எனச் சொல்ல முடியாது. தரமான எழுத் துக்களை வெளிக்கொணர இவை போதும் என்றே நான் கருதுகின்றேன்.

?:- பெண்களுக்கென்று ஒரு தமிழ்ப்பத்திரிகை நமது மண் ணில் உருவாகவில்லை என்ற குறையிருக்கின்றதே...? இது பற்றி என்ன கூற விரும்பு கின்றீர்கள்?

!:- முளைவிட்ட ஓரிரு சஞ்சி கைகளும் நின்று போயின. துடிப்பான பெண்கள் சிலர் இணைந்து முயன்ருல் சாதிக்க லாம்.

?:- ஆர்வமும் திறமையும் உள்ள இளம் எழுத்தாளர்க ளுக்கு என்ன கூற விரும்பு கின்றீர்கள்?

!:- முயற்சியையும் நம்பிக் கையையும் இழந்து விடவேண் டாம் என்று கூறுவேன்.

?:- ஓர் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய அடிப் படைத் தகுதி என்ன?

!:- நேர்மை; மனிதப் பண்பு.

?:- சீதனப் பிரச்சினை, மனித உரிமைப் பிரச்சினை, விதவை கள் மறுவாழ்வுப் பிரச்சினை களுக்குக் காரணம் என்ன?

!:- மனிதர்களின் தவருன மனப்பாங்கு!

?:- அவை எவ்வாறு தீர்க்கப் படலாம்?

!: மனித மனங்களைப் பண் படுத்தும் பல்வேறு நடவடிக் கைகளில் நாம் ஈடுபட வேண் டும். இலக்கியங்கள் மூலமும் ஒரு பகுதி வெற்றியைப் பெறக் கூடிய சாத்தியம் உண்டு.

?:- நீங்கள் ஓர் எழுத்தாள ராக இருந்து சாதித்தது என்ன?

!:- மன நிறைவு!

?:- எதிர்காலத்தில் நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?

!:- ஒரு வெற்றிகரமான வாழ்வு!

?:- நீங்கள் ஒரு குடும்பப் பெண்ணுக, ஆசிரியராக, எழுத்தாளராக, பேச்சாள

(14ஆம் பக்கம் பார்க்க)

---

# இலக்கியங்களில் துடிக்கும் — தோளும் கண்ணும் —

**திக்கவயல் தர்மகுலசிங்கம்**

தமிழ் இலக்கியத்தில் முக் கிய இடம் பெறும் காவியங் களில் ஒன்று சீவகசிந்தாமணி இடக்கண்ணும்,வலக்கண்ணும் துடித்தலை வைத்துவரப் போகும் நன்மையையும் தீமை யையும்நூலாசிரியர்திருத்தக்க தேவர் உணர்த்துகின்ருர்.

சீவகசிந்தாமணியின் கதா நாயகன் ஜீவகன் துறவு பூண் டபோது பெண்கள் எல்லோ ருக்கும் வலது கண் துடிக்கின் றது. ஜீவகன் விசையை என்பாளைக் காண்பதற்கு முன்பு அவளுக்கு இடதுகண் துடிக்கின்றது. [1900] போருக்குப் புறப்படும்போது கோவிந்தைக்கு வலக்கண் துடிக்கின்றது. கட்டியங்கார ஞல் ஜீவகன் சிறை செய்யப் பட்டபோது சுதஞ்சணன் என் பவனுக்கு இடம் துடித்தது. (2917)

### பெருங் கதையில் இடக்கண்

பெருங்கதையின் கதாநாய கன் உதயணன். தனது காதற் கிழத்தி வாச வத்தையின் பிரிவினை இடக் கண் துடித்ததால் உதயணன் அறிந்ததாக கொங்குவேளில் சுட்டிக்காட்டுகின்ருர்.

இடுக்கண் தருதற்கேதுவாகி
இடக்கண் ஆடலும்
தொடித்தோள் துளங்கலும்
ஆருயிர்க்கிழத்தியகன்றன
ளிவணிலள் .....'
(2.18:32—40)

### கம்பராமாயணத்தில் இடமும் வலமும்

சிறையில் இருக்கும் சீதை யைச் சுற்றி அரக்கப் பெண் மணிகள் பலர் சூழ்ந்திருக்கின் றனர். அரக்கப் பெண்மணி களுள் ஒருத்தி உத்தமி. அவள் தான் திரிசடை. சீதை தான் கண்ட கனவு ஒன்றினைத் திரி சடைக்குச் சொல்கின்ருள். 'தன் கண், புருவம் என்பன வலம் துடிக்கின்றில' எனக் கூறுகின்ருள் சீதை.

இராமன் வனம் போனதும், இராவணன் அவளைக் கவர்ந்த நாளும் தனக்கு வலம் துடித் ததாகச் சீதை திரிசடைக்கு எடுத்து இயம்புகின்ருள்

'முனியொடு மிதிலையில் முதல்
வன் முந்துநாள்
துனி அறு புருவமும் தோளும்
நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும்
ஆண்டு என
நனி துடிக்கின்றன; ஆய்ந்து
நல்குவாய்
(5101)

கரனேடு நடந்த போரில் வருணன் கொடுத்த வில்லை இராமர் பிடித்தபோது இடக் கண் துடித்தது இராமனுக்கு எதிராக இராவணன் கும்ப கர்ணனுக்குப் போர்க் கோலம் செய்தான். அப்போது இராவணன் போரில் வெல்ல மாட்டான் என்பதைக்கம்பர் முன்னுணர்ந் தும் பொருட்டு 'மின்னின் அன்ன புருவமும் விண்ணினைத் துன்னு தோளும் இடம் துடியா நின்ருன் எனக் கூறித் தீ நிமித்தம் காட்டியுள்ளார்.

இலங்கை எரியூட்டப்படுவ தற்கு முன்பு பல தீ நிமித் தங்கள் கம்பரால் காட்டப்பட் டுள்ளன. அதில் இலங்கையில் வசித்த பெண்களின் புருவ மும், மென்தோளும் வலம் துடித்த விடயங்கள் கம்பரால் எடுத்தாளப்பட்டுள்ளன

'நிலம் துடித்தன நெடுவரை
துடித்தன
நிருதர் தம் குலமாதர்
பொலந் துடிக்கும் அமை
மருங்குல் போல்கண்களும்
புருவமும் பொன்தோளும்
வலம் துடித்தன; மாதிரம்
துடித்தன
(5038)

### சூளாமணியில் இடதுபக்கம்

சூளாமணியில் போரின் வெற்றிக்கு இடது பக்கத்தை உதாரணம் காட்டியுள்ளது திவிட்டன் போருக்குப் புறப் படும்போது அவன் போரில் வெற்றிபெறுவான் என அதன் ஆசிரியர் தோயாமொழித் தேவர் சுட்டிக்காட்டியுள் ளார். அவன் போருக்குப் போகும் முன்பு பெண்டிரின் தோள்கள் இடம் துடித்ததா கக் குறிப்பிடுகின்ருர்.

(1218)

### வலம் சுழன்ற அக்கினி

இடதுபக்க உறுப்புக்களின் கண்ணும் தோளும் பெண்க ளுக்குத்துடிப்பது நன்னிமித்த மாக இருப்பினும் தீ இடது பக் கம் சுழல்வதும் மிருகங்கள் இடது பக்கமாகத் தாவி வரு வதும் நல்லசகுனங்கள் அல்ல!

தருமர் பிறந்தபோது அக் கினி வலது புறமாகச்சுழன் றது என வில்லிபுத்தூரர் கூறியுள் ளார்.

தருமன் தனது சகோதரர்க ளுடன் அத்தினபுரி நோக்கிப் புறப்பட்டபோது குக்கில் என் னும் பறவை இடம் வரத்தாவி யது. இது தீ நிமித்தத்தின் அறிகுறியாகும்.

இவ்வனம் வரும் இலக்கியச் செய்திகளால் பெண்களுக்கு அவர்களது இடதுகண் இடது தோள் துடித்தல் நன்நிமித்த மென்றும் ஆண்களுக்கு வலது தோள் வலது புருவம் என்பன துடித்தல்நன்நிமித்த மென்றும் மாறித்துடிப்பில் தீ நிமித்தம் மென்றும் பண்டையோரிடை ஆழ்ந்த நம்பிக்கை வேருன்றி யிருந்ததென்று புலப்படுகின் றது.

# ஏமாற்றாதே: ஏமாறாதே!

கண்ணப்பன் பெரிய அரிசி வியாபாரி. அவன் அரிசியிலே கல் கலந்து விற்பான். மக்கள் அவனை மிகவும் வெறுத்தனர். அந்த ஊரில் வேறு அரிசிவியாபாரி இல்லாததால் ஒருவரும் அவனை எதிர்க்க முன்வரவில்லை.

ஒருநாள் வியாபாரிவேறு ஓர் ஊருக்கு அரிசிமூடைகள் வாங்குவதற்கு ஆயிரம் ரூபாயுடன் சென்றான். போகும் வழியில் ஆற்றோரம் உள்ள ஓர் ஆலமரத்தின் அடியில் வந்து சேர்ந்தான்; கட்டுச் சோற்றை உண்டுவிட்டு ஆற்றிற் கை கழுவினான். பின்பு திரும்பவும் ஆலமரத்தினடியில் வந்துஉட்கார்ந்தான். சிறிது நேரத்தில் தூக்கம் கண்ணைச் சுற்றவே பணப்பையைத் தலைக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுத்தூங்கினான்.

அந்த ஆலமரத்தில் ஒரு குரங்கு வசித்தது. பணப்பையைக் கண்டதும். இறங்கிவந்தது; மெதுவாக எடுத்தது. மீண்டும் மரத்தில் ஏறியது.

வியாபாரியின் முகத்தில் ஆலம்பழம் ஒன்று விழுந்தது. உடனே வியாபாரி திடுக்கிட்டு விழித்தெழுந்தான்;

பணப்பை இருந்த இடத்தைப்பார்த்தான். பணப்பை அங்கே இல்லை. பதற்றத்தோடு அங்குமிங்கும் தேடினான். இறுதியில் மரத்தைப் பார்த்தான், குரங்கு தனது பையை வைத்திருப்பதைக்கண்டான்.

குரங்கைப் பிடித்துப் பையை மீட்க மேலே ஏறினான். அதற்குட் குரங்கு பையைத்திறந்து பணத்தைக் கீழே கொட்டியது. அது கொட்டியவற்றுள் சில பண நோட்டுக்கள் ஆற்றிலும் மிகுதி நிலத்திலும் விழுந்தன. உடனே வியாபாரி கீழே இறங்கி வந்து நிலத்தில் கிடந்த பணத்தை எண்ணிப் பார்த்தான் சரியாக எண்ணூறு ரூபா இருந்தது.

கண்ணப்பன் கல்லுக்குரிய காசு நீரிலே! அரிசிக்குரிய காசு நிலத்திலே என்று சொல்லி அழுதான் அதன்பின்பு அரிசியில் அவன் கல்லைக்கலப்பதில்லை.

மகாலிங்கம் ராஜ்ரூபன்

## கிழக்கே போன ஆந்தை

ஒரு நாள் ஓர் ஆந்தை ஒரு புறாவைச் சந்தித்தது. எங்கே போய்க் கொண்டிருக்கிறாய் என்று புறாகேட்டது.

நான் கிழக்குச்சீமைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன் என்றது ஆந்தை.

ஏன் அங்கே என்ன விசேடம்?

இங்கே உள்ளவர்கள் எல்லோருமே என் குரலைக் கேட்டு என்னை வெறுக்கிறார்கள். அதனால் தான் கிழக்கே போகிறேன் என்றது ஆந்தை.

உன் குரலை உன்னால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் கிழக்கே உள்ள மக்களும் வெறுக்கத்தான் செய்வார்கள் என்றது புறா.

வதன்




## சின்னஞ்சிறு சிட்டுக்களே

'தமிழ் இலக்கணமா?; வேண்டாம்; வேப்பங்காய்! என்று வெறுப்போர் பலர் வேப்பங்காயை வேலூர்ச் சர்க்கரையாக்கிச் சின்னஞ்சிறு சிட்டுக்களும் சுவைத் தின்புறவைத்த தாத்தாவைத்தான் இங்கே நாம் பார்க்கிறோம் இவர் பெயர் பிரம்மஸ்ரீ க. சு நவநீத கிருஷ்ணபாரதியார், பாரதியார் உங்களுக்கென்றே எழுதிய இலக்கண நூல் பாரதீயம்.

தாத்தா பிறந்தது தென்னிந்தியாவிற் கிருஷ்ணாபுரத்தில்; வாழ்ந்தது ஈழத்தில் மாவிட்டபுரத்தில்

பரமேஸ்வராக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும்இந்தத் தாத்தா தமிழ் படிப்பித்திருக்கிறார். பரமேஸ்வராக் கல்லூரியில் பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலைஒன்று சிலகாலம் நடந்தது. அக்கலாசாலையிலும் பாரதியார் தமிழ் கற்பித்தார்; நல்லாசிரியர்கள் பலர் அங்கே உருவாகினர்

பெரியவர்களுக்கெனப்பாரதியார் பல நூல்கள் செய்திருக்கிறார். அவற்றுள்உளவியல் விளக்கம், திருவாசக உரைஎன்பவை சிறந்தவையாகப் போற்றப்படுகின்றன.



அவருடைய பாட்டொன்றைப் பாருங்கள்:

பூமாலைக் குண்டழிவு
பொன்மாலைக் கேதுமணம்
பாமாலைக் குண்டே பயன்.

பூமாலை வாடிவிடும், பொன்னால் மாலை செய்தால் அதற்கு நறுமணம் இருக்காது பாட்டால் மாலை கட்டினால் மிகுந்த பயன் உண்டு. பாமாலை தான் சிறந்த மாலை என்பது இந்தத்தாத்தாவின் கருத்து. எனவே பயன் தரும் பாமாலைகளைப் படிப்போம்.

## பலூன்

பாலுத் தம்பி பட்டணத்தில்
பலூன் ஒன்று வாங்கினான்
பலரும் காண ஊதி ஊதிப்
பார்த்து மகிழல் ஆயினான்
'இன்னும் கொஞ்சம் ஊதடா'
இளைய தம்பி கூறினான்
'ஊதவேண்டாம் உடைந்து விடும்'
என்று அண்ணன் கூறினான்
'அதிக ஆசை வேண்டாமெடா'
என்று பாட்டி கூறினாள்
ஒரு வர்சொல்லும் கேட்டிடாமல்
பெருமையாக ஊதினான்
ஊத ஊதப் பெருக்கவே
உவகை கொண்டு ஊதினான்
படார் என்று வெடிக்கவே
மனம் உடைந்து போயினான்

சி.சதாசிவம்

## நான் வளர்க்கும் நாய்க்குட்டி

நான்வளர்க்கும் நாய்க்குட்டி
நல்ல வெள்ளை நாய்க்குட்டி
பப்பி என்று நான் அழைத்தால்
பாய்ந்து வரும் நாய்க்குட்டி
பாலும் சோறும் வைத்தே
நான் வளர்த்த நாய்க்குட்டி
பப்பி என்று நான் அழைத்தால்
பாய்ந்துவரும் நாய்க்குட்டி

விட்டைக் காக்கும் நாய்க்குட்டி
வீரமுள்ள நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
வீரமான நாய்க்குட்டி
வள்ளென்று குரைக்கின்ற
வடிவுமிக்க நாய்க்குட்டி
அணிலைக் கண்டால் பதுங்கும்
விரைந்து ஓடிப்பிடிக்கும்

யசோதா சிவப்பிரகாசம்
அங்கத்தவர் இலக்கம் 361

## யார் தரித்திரம்?

ஒரே ஊரைச் சேர்ந்த நான்கு வியாபாரிகள், வியாபாரத்துக்காக வெளியூர் போய் விட்டுத் தம் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் காட்டில் வந்துகொண்டிருக்கும்போது பொழுது போய் விட்டது. வழியில் திருடர் பயம் அதிகம் இருந்தது. வியாபாரிகளிடமோ நிறையப்பணம் இருந்தது. அதனால் அவர்கள் ஏழை விவசாயிகளைப்போல உடைகளை மாற்றிக்கொண்டு நடந்தார்கள்.

அவர்களைச் சில திருடர்கள் பின் தொடர்ந்தார்கள். அவர்களை விவசாயிகள் என்று நம்பிவிட்ட திருடர் தலைவன் இந்தத் தரித்திரங்களிடத்தில் என்ன இருக்கப் போகிறது? வாருங்கள் போகலாம்! என்று அந்த வியாபாரிகள் காதில் விழும்படியாகக் கூறினான்.

அந்த நான்கு வியாபாரிகளில் ஒருவனுக்கு அதைக் கேட்டுக் கடும்கோபம் வந்துவிட்டது. அவன் ஓர் முன்கோபி எனவே எங்களைத் தரித்திரம் என்று சொல்பவன் யார்? ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் வைத்திருக்கும் நாங்களா தரித்திரம்? என்று கூச்சல் போட்டான்.

அந்த மூடன் பேச்சைக் கேட்ட திருடர்கள், அந்த வியாபாரிகளைச் சும்மா விடுவார்களா? அவர்களிடத்திலிருந்த எட்டாயிரம் ரூபாய்களையும் பறித்துக் கொண்டார்கள்,

எஸ், ஏ. வதனன்

## கோதுமை காயவிடக் கயிறு

முல்லா தனது வீட்டின் பின்பக்கத்தில் கிணற்றை ஒட்டி ஒரு கயிறு கட்டி அதன்மேல் துவைத்த துணிகளைக் காயப்போடுவது வழக்கம், ஒரு நாள் அவரது அண்டை வீட்டுக்காரர் அந்தக் கொடிக் கயிற்றை கொஞ்ச நேரத்திற்கு இரவல் கொடுக்குமாறு முல்லாவிடம் கேட்டார். அப்பொழுது கயிற்றில் எந்த விதமான துணியும் காயவில்லை.

முல்லாவோ நண்பரே நான் கொடிக்கயிறில் கோதுமை காயப்போட்டிருக்கிறேன். ஆகவே அதனை இரவல் கொடுக்க முடியாது, என்று கூறினான்.

அடுத்த வீட்டுக்காரருக்கு ஒரே ஆச்சரியம் யாராவது கோதுமையைக் கயிற்றில் காயப்போடுவார்களா? இல்லை போடத்தான் முடியுமா? என்று முல்லாவிடம் கேட்டார்.

முல்லா உடனே இரவல் கொடுக்க விரும்பவில்லை என்றால் எதைத்தான் செய்ய முடியாது? என்று திருப்பிக் கேட்டார். பக்கத்து வீட்டுக்காரர் பதில் பேசாது வெட்கித் தலை குனிந்தார்.

முல்லா கதைகளிலிருந்து எழுதியவர்

அ வதன்

## விடுகதைகள்

1. பலபேருக்கு ஒரு குடுமி அது அன்ன?
2. எரிப்பவன் ஆனால், எரியாதவன் அவன் யார்?
3. வழியெல்லாம் கூடவே வருவான். வீட்டுக்கு மட்டும் வரமாட்டான் அவன் யார்?
4. முப்பத்திரண்டு வெள்ளைச் சிப்பாய்களுக்கு நடுவில் ஒரு சிவப்பு இராசா அது என்ன?
5. தட்டினால் பறப்பான் தடவினால் சாவான் அவன் யார்?
6. என் குதிரை கறுப்புக் குதிரை. குளிப்பாட்டினால் வெளுப்புக் குதிரை
7. அம்மா படுத்திருப்பாள் மகள். ஓடிக் கொண்டிருப்பாள் அது என்ன?
8. அப்பன் சொறியன், அம்மா சடைச்சி, அண்ணன் முழியன், நான் சர்க்கரைக் குட்டி அது என்ன?
9. கரையும் உப்பல்ல, தண்ணீரிலே குளிப்பான் மனிதனும் அல்ல, அது என்ன?
10 கடித்தால் கடிபடாது பிடித்தால் பிடிபடாது அது என்ன?

## விடைகள்

1. உள்ளி
2 சூரியன்
3. செருப்பு
4. நாக்கு
5. நுளம்பு
6. உழுந்து
7. அம்மி, குளவி
8. பலாப்பழம்
9. சோப்
10. தண்ணீர்

கிருத்திகா தருமராஜா

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ..........................................

வயது :- ..........................................

பாடசாலையின் பெயர் :- ..........................................

கல்விகற்கும் வகுப்பு : ..........................................

வீட்டு முகவரி : ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

..................... ..........................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# சாவியை மறந்த சாரதி

லண்டனின் பிரதான வீதியூடாக 110 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றுகொண்டிருந்த 'ரேவர் காரினை' நிறுத்த முடியாது அதன் சாரதி தத்தளித்தார். சிறிதளவு பிரேக் பிடிக்க முடிந்ததாயினும் என்ஜின் தொடர்ந்து வேலை செய்தது. தொடர்ந்து பிரேக் பிடிக்கையில் அது தீப்பற்றக் கூடிய சாத்தியக்கூறு ஏற்பட்டது.

காரை 'நியூற்றல்' நிலைக்குக் கொண்டுவந்தாலும் கார் தீப்பற்றி வெடிக்கும் ஆபத்து இருந்தது. இவ்வாறு கார் கிட்டத்தட்ட 75 கிலோ மீற்றர் ஓடியுள்ளது. செய்வதறியாது திகைத்த சாரதி கடைசியாகத் தனது காரில் பொருத்தியிருந்த தொலைபேசி மூலம் ஒட்டோமொபைல் அசோஷியேசனோடு தொடர்பு கொண்டு தன் நிலைமையை விளக்கினார். அவர்கள் அவரை ஒரு 'ரேவர்' கார் வியாபாரியிடம் தொடர்பு கொள்ளும்படி கூறினார்கள். சாரதியும் அவ்வாறே தொடர்பு கொண்ட போது வியாபார நிலையத்திலிருந்த மெக்கானிக் ஒருவர் என்ஜின் சுவிற்சை ஓஃப் பண்ணும்படி புத்திமதி கூறினார். சாரதியும் அவ்வாறே செய்து காரை ஓய்வுக்குக் கொண்டு வந்தார். பின் இந்தச் சின்ன விடயம் தன் மூளைக்கு வரவில்லையே என்று தன் தலையில் அடித்துக்கொண்டார்.

# உறைப்பான சாதனை

'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறுவதற்கு மனிதர்கள் பல்வேறு சாதனை முயற்சிகளில் ஈடுபடுவது வழக்கம். அதில் சாப்பிடுவதும் அநேகர் தேர்ந்தெடுப்பது ஒன்றாகும். ஆனால் சாப்பிடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டது மிளகாய்த் தூள் என்றால் எப்படியிருக்கும். மிகவும் கடினமான, உறைப்பான முயற்சியாயிருக்கும்.

ஆனால் கோயம்புத்தூரைச் சேர்ந்த 30 வயதுடைய பார்த்தசாரதி என்ற இளைஞர் அப்படி நினைக்கவில்லை.

பல பொதுமக்கள் முன்னிலையில் 50 கிராம் மிளகாய்த் தூளைச் சாப்பிட்டுச் சாதனை புரிந்துள்ளார்.

இவ்வித சாதனை இதுவரை வேறு யாரும் செய்யாததாகக் கூறும் இந்த இளைஞர் தனது சாதனை நிச்சயம் கின்னர்ஸ் புத்தகத்தில் இடம் பெறுமென நம்புகிறார்.

இவர் ஏற்கனவே 45 நாட்கள் பாம்புகளோடும் தேள்களோடும் சேர்ந்து வாசம் செய்துள்ளார். சாப்பிடுவதிலும் வேறு சில சாதனைகள் புரிந்துள்ளார். 30 நிமிடங்களில் 81 வாழைப்பழங்களும் 4 நிமிடங்களில் 300 பாவற்காய்களும், 5 நிமிடங்களில் ½ கிலோ உப்பும், 12 நிமிடங்களில் 1 கிலோ சீனியும் 250 கிராம் கறி வேப்பிலையும் சாப்பிட்டுள்ளார்.

# வேண்டாம் ஈனக் கவலைகள்

'வீட்டுக்கு வீடு வாசற்படி' கவலைகள் இல்லாதார் இலர்.

மனிதருக்கு அவரவர் வயது வித்தியாசத்துக்குத் தக்கபடி வித விதமான கவலைகள், மூடுபனிபோல சூழ்கின்றன. கவலைகளால் வெந்து துடிப்போர் பலர்.

மனதில் ஏற்படுகின்ற கவலைகளைப் பிறருக்குச் சொல்லாமல், தன் மனத்துக்குள்ளேயே வைத்துக் குமைவதில் அர்த்தமே இல்லை. பிறருக்கு அவைகளை மனம் விட்டுக் கூறவேண்டும் ஆயின் நமது கவலைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லப்போய் அவர்களை வேதனைக்குள்ளாக்கக் கூடாது.

மிகவும் விசுவாசம் மிக்க நண்பர் ஒருவரையாவது நாம் தேடிக் கொள்வது வாழ்வை எளிதாக்கும். ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் அவர் நமது விசுவாசத்திற்குரியவராக இருப்பாரேயானால் அவரே உண்மை நண்பர். நண்பராக ஒருவரை நாம் தேர்ந்தெடுத்த பின் அவரிடம் உண்மையான அன்பை நாம் செலுத்த வேண்டும். சந்தேகத்துக் கிடமில்லாத வகையில் அவருடன் நடந்து கொள்ள வேண்டும். சந்தேகம் மூளை கொள்ளுமானால் அதுவே ஒரு தொல்லையாகப் பரிணமித்து விடும்.

எத்தனை பேரிடம் ஆலோசனை கேட்கிறோம் என்பது முக்கியமன்று. நாம் பெற்ற ஆலோசனைகளிற் சிறப்பானது எது என்பதை நாம் தேர்ந்து கொள்ள நம் சுய அறிவைப் பயன்படுத்த வேண்டும். அது முக்கியம். முடிவுகளை நாமே எடுக்க வேண்டும். ஏற்படும் விளைவு, இன்பமோ, துன்பமோ, அனுபவிக்கப் போகிறவர் நாமே.

துன்ப உணர்வுகள் ஒரு மனிதனை உளவியல் ரீதியாகப் பாதிக்கிறது. தனக்கு ஏற்படும் துன்ப துயரங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியாமற் போகும் சந்தர்ப்பங்களிலேதான் மனநோய் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளதாக மனத்தத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். துன்பங்களைத் தாங்கும் மனவலிமை குறையக் குறைய உடல் உபாதைகள் ஏற்பட்டு நாளடைவில் நிரந்தர நோயாளி ஆக நேருகின்றது. இத்தகைய நிலையிலிருந்து விடுபட வேண்டுமெனில் நமது அந்தரங்கங்களை எமது மனதுக்கிசைந்தவர்களிடம் பகிர்ந்து கொள்வது அவசியம்.

குடும்பத் தலைவனுக்குப் பொருளாதாரப் பிரச்சினையும் மனைவிக்குக் குழந்தைகளைப் பற்றிய கவலையும், மாணவனுக்குத் தன் பாடங்களைப் பற்றிய கவலையும், காதலர்களுக்கு காதலே கவலையாகவும் இருக்கும். இவைகளைக் களைய நாணயமான உத்தமமான நண்பர்கள் தேவை.

கவலைகளைப் போக்கடிப்பதற்கு மதுவையும் போதைப் பொருள்களையும் நாடுவோர் உளர். இதனாற் காலப் போக்கில் அவற்றிற்கு அடிமையாக நேரும். பின் அதுவே கவலையாக—துன்பமாக உருவெடுக்கும்.

தமது நெஞ்சக் குமுறல்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்பாதவர்கள், கள், அவற்றை ஒரு காகிதத்தில் எழுதித் துன்பத்தைத் தீர்த்துக்கொள்ள முடியும் என மனத்தத்துவ அறிஞர்கள் கருதுகின்றனர். பின் ஒரு காலத்தில் நாம் எழுதியவற்றை மீண்டும் படித்துப் பார்க்கும்போது எமக்கே சிரிப்பு வரும் "ஓ" இதற்குப் போய் இப்படியெல்லாம் கவலைப்பட்டோமே என நம்மை நாமே எள்ளிநகையாடும் நிலையில் இருப்போம்,

எமக்கு நேர்ந்தவற்றை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டு அழுவதன் மூலமும் எமது கவலைகளைப் போக்கிக் கொள்ள முடியும். அழுவது மிகமிகச் சிறந்த செயல் மனம் விட்டு அழும்போது எமது கவலைகள் தீர்ந்துவிடுவதுடன் கண்ணும் தூய்மையடைகிறது

இயற்கையை ரசிக்க நாம்

**அரசடி பூ. நவம்**

கற்றுக்கொண்டோமானால், எமது கவலைகளைப் போக்கும் சஞ்சீவியாக அது அமைந்து விடும். கவலைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஆரோக்கியமான வழி இதுதான்

கவலைகளுக்கு, கட்டுப்பாடற்ற ஆசைகளே பெரும்பாலும் காரணிகளாக அமைகின்றன. இது எமக்குத் தெரிந்தபோதிலும் எமது ஐம்புலன்களையும் அடக்க எமக்குச் சக்தி இல்லாக் காரணத்தால் ஆசைகள் நம்மை வென்று துன்பக்கடலில் வீழ்த்தி விடுகின்றன.

எமக்கு ஏற்படும் கவலைகளால் கோபம்—ஆத்திரம் என்பன ஏற்படுகின்றன. மற்றவர்கள் மீது இவற்றைத் தீர்க்க முயல்கிறோம். அது ஆகாது. நமது துன்பத்தை நாமே அனுபவிக்க வேண்டும். பிறர்மீது நம் ஆத்திரத்தையும், கோபத்தையும் காட்டுவோமேயானால் பலரது விமர்சனத்திற்கு நாம் ஆளாக வேண்டி வரும். அதுவே எமது பலவீனமாகி எம்மை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

தெளிவான சிந்தனை, தீர்க்க தரிசனமான முடிவு, விசுவாசமான நடவடிக்கை, அன்பான செயற்பாடு—இவை அனைத்துமே வேதனையைக் குறைப்பதோடு ஆரோக்கியமான நீண்ட வாழ்க்கைக்கும் ஆணிவேராக இருக்கும்.

# பல் சுவை

# தாய்ப்பால் என்னும் அற்புத அமுதம்

குழந்தை தாயின் கருப்பையில் இருக்கும் போது தாயின் இரத்தத்தில் இருந்து, தன் உணவைப் பெற்று வளர்ச்சி அடைகின்றது, குழந்தை பிறந்தவுடன் அதற்கு உணவு தேவை. அவ் உணவு சுத்தமானதாகவும், சுகாதாரமானதாகவும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதாகவும் தேவையான சத்துக்களை அளிப்பதாகவும் இருக்க வேண்டும். இவ்வளவையும் கொண்ட உணவுப் பொருள்களுட் தாய்ப்பாலுக்கு ஈடானது வேறு ஒன்றும் இல்லை.

தாய்ப்பாலிற் குழந்தைகளுக்கு ஏற்ற பின்வரும் சிறப்பியல்புகள் காணப்படுகின்றன.

தாய்ப்பால் எவ்வித கிருமிகளோ அழுக்குகளோ அற்றது. இயற்கையாகவே நோய்த் தடுப்பு சக்தி பெற்றது. இதனால் தொற்று நோய்கள் இலகுவில் தாக்குவதில்லை. தாய்ப்பாலின் சுகாதாரம், காரணமாக அஜீரணம், வாந்திபேதி போன்ற நோய்கள் குழந்தைகட்கு வருவதில்லை. தாய்ப்பாலிலே கிருமி கொல்லித் தன்மையும் உண்டு. தொற்று நோய்களான அளியற்சன்னிச் சுரங்களுக்கு மருந்தோடும் உணவாகவும் நம் நாட்டு வைத்தியர்கள் இதைக் கொடுத்து வருவதால் நோயாளி மிகவும் விரைவில் குணமடைகின்றான்.

2 தாய்ப்பால் இயற்கையானது. இதிற் குழந்தைக்கு தேவையான சத்துணவுகள் காணப்படுவதுடன், தாய்ப்பால் தாயின் இயற்கைச் சூட்டோடு பிள்ளையின் இரைப்பையைச் சேர்வதாலும் வேறெவ்வித உணவுகளிலும் பார்க்க தாய்ப்பால் வெகு சுலபமாகச் சமிபாடு அடைந்து விடுகின்றது.

3 உளத்தத்துவ ரீதியிலும் தாய்ப்பால் சிறந்தது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கும் தாய்க்கும் இடையில் ஓர் உளரீதியான பாசப்பிணைப்பு ஏற்படும்.

4. தாயின், உடற் கட்டோடு இருப்பதால் எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதாவது குழந்தைக்கு ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

5 எவ்விதமுன் ஆயத்தங்களும் இன்றி இலகுவாக நினைத்தவுடன் கொடுக்கக் கூடியது.

**ந. ஜெயராசா**

6. பொருளாதார ரீதியிற் சிக்கனமானது.

ஒரு பிள்ளை குறைந்த பட்சம் ஒருவருடத்துக்கு குறையாமலும், மூன்று வருடத்துக்கு மேற்படாமலும் தாய்ப்பால் குடிக்க வேண்டும்.

குழ்ந்தைகளுக்கு "கழருன கறுப்பான்தான் பிறவி நோக்கிக் கண்டமுதல் நாட்தொடங்கித் திங்கள் மூன்று" என்னும் விதிப்படி முதல் மூன்று மாதங்கள் வரை கிரந்தி ரோகமும்,

உலகந் தன்னில் உயர்ந்த
நோன்பு
பலவு மாற்றிப் பயந்த
மக்கட்
குற்ற தோட மொருமுத்
திங்கள்
பற்றி யாண்டு பயின்று
வருத்தும்"

எனும் விதிப்படி மூன்றும் மாதம் இருந்து ஒருவயதுவரை தோடம் என்னும் நோயும்

சிமருன மாந்தம் எல்லாம்
வருடந்தொட்டு
செறி மூன்று வருடமட்டும்
வதைக்கு மென்னே"

என்றபடி ஒரு வயது தொடக்கம் மூன்று வயது வரை மாந்த ரோகங்களும் "எண்ணவே கண மூன்று வருடந் தொட்டு ஏழாண்டு மட்டுக்கு மிருக்குங் காலம்" என்பதால் கண ரோகங்களும், கரப்பான் ரோகங்களும் வரக்காத்திருப்பதால் இவ் ஐந்துவகையான நோய்களினின்றும் ஒரு பிள்ளை தப்ப வேண்டுமானால் அல்லது அந்நோய்களைத் தாங்கும் சக்தியைப் பெறவேண்டுமேயானால் குறைந்தது ஐந்து வருஷமாவது அப்பிள்ளை தாய்ப்பால் எனும் அரிய மருந்து குடிக்கவேண்டும் என்பது, பண்டையோர் வழக்கு நம் மூதாதையர்கள் ஐந்து வருடங்கள் வரை தாய்ப்பால் குடித்து வளர்ந்தார்கள் என்று பெருமை பேசிக்கொள்வதையும் நாமறிவோம்.

"அரிவையர் முலைப்பா
லருந்தலூன்சித்தி"

என்று நம் முன்னோர்கள் கூறியது பொய்யல்ல.

மேலைத்தேய நாடுகளில் வாழ்வோரும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்ந்து தாய்ப் பால் வங்கிகள்(Breast Milk Bank) உருவாக்கியுள்ளார்கள்.

நகர நாகரிகத்தில் வாழும் சில தாய்மார்கள் குழந்தைக்கு பால் கொடுப்பதைத் தவிர்க்கிறார்கள். குழந்தையை விட்டு வெளி இடங்களுக்குச் செல்கிறவர்களும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் அழகு கெட்டுவிடும் என்று நினைப்பவர்களும் தம் குழந்தையுடன் மாதம் தோறும் மருத்துவரை நாட மறப்பதில்லை.

தாய்மை என்பது பெண்களின் பெரும் பேறு ஒரு குழந்தையின் வளர்ச்சியில் தாய்ப்பால் அருந்தும் பருவம் மிக்க சிறப்பானது. எனவே காய்கறிகள், பழம், பால், முட்டை போன்ற சத்துணவுகளை உட்கொண்டு உடலை ஆரோக்கியமாக வைத்திருந்து குழந்தைக்குப் பால் கொடுப்பதன் மூலம் தாயர் உங்கள் குழந்தையின் ஆரோக்கிய வாழ்க்கைக்குச் சிறப்பான அடித்தளம் இட முடியும்.

# சிரிப்பென்னும் தெள்ளமுது



வேலைக்காரன்:- என்னுடைய சம்பளத்தில் பத்துரூபா குறைகிறது எஜமான்!

எஜமான்: போனமாதம்பத்து ரூபா கூடுதலாகக் கொடுத்திருந்தேனே. அப்போது ஏன் நீ இதுபோல வந்து என்னிடம் சொல்லவில்லை.

வேலைக்காரன்.- அது வா? முதல்தடவை நீங்கள் தவறு செய்தபோது சுட்டிக்காட்ட வேண்டாம் என்றிருந்தேன். இரண்டாவது முறையும் தவறு செய்யும் போது சுட்டிக் காட்டத்தானே வேண்டும்.



வாசகர்:- உங்கள் கதை ரொம்பச் சிந்திக்கவைக்கிறது.

எழுத்தாளர்:- 'மகிழ்ச்சியுடன், அப்படியா?

வாசகர்:- இவையெல்லாம் எப்படிப் பிரசுரித்தார்கள் என்று சிந்திக்க வைக்கிறது.

★ ★

பத்திரிகை ஆசிரியர்:- நீங்கள் சிறுகதை உலகில் நுழைந்தது நல்லதாய்ப் போய்விட்டது.

எழுத்தாளர்: எதற்காகச் சொல்கிறீர்கள்.

பத்திரிகை ஆசிரியர்:- நாவல் இலக்கியமாவது பிழைத்துதே.

## வடக்கு கிழக்கு

(—8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களின் பொதுவான சனத்தொகை வளர்ச்சியை நோக்கும் போது மேல் மாகாணம் உயர்வான தொகையையும்மத்திய,தென், வடமேல், சப்ரகமுவ மாகாணங்கள் இடைநிலை வளர்ச்சியையும் வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்கள் தாழ்நிலை வளர்ச்சியையும் 1871இல் இருந்தே கொண்டிருக்கின்றன. ஆனல் 1901–ஆம் ஆண்டின் முன்பு வடமாகாணம் இடைநிலை வளர்ச்சி கொண்ட மாகாணங்களுடன் இணைந்திருந்தது இம் மூன்று வகையான வளர்ச்சி நிலைகளிலேயே அந்தந்த மாகாணங்கள்தொடர்ந்தும் நீடிக்கலாம. எனினும் 2001 ஆம் ஆண்டின் பின் வடமத்திய மாகாணத்தின் சனத்தொகையில் விரைவான அதிகரிப்புக்கள் ஏற்படலாம்.

1981இல் 3.9மி.மக்களைக் கொண்டிருந்த மேற்கு மாகாணமே தொடர்ந்தும் 2041 வரை மிகக் கூடுதலான மக்களைக் கொண்ட மாகாணமாக விளங்கலாம்.2041 இல் இதன் சனத்தொகை 11.2மி. ஆக இருக்கும். யாழ்ப்பாணம், முல்லைத்திவு, கிளிநொச்சி,வவுனியா, மன்னர் ஆகிய மாவட்டங்களைக் கொண்ட வடமாகாணம் 1981இல் மொத்த சனத்தொகையின் அடிப்படையில் ஆருவது இடத்தையும் 1.1.மி. மக்களையும், கொண்டிருந்தது இம்மாகாணத்தின் சனத் தொகை 1991ல் 1.26 மி.யும் 2001 இல் 1.44 மி.யும் 2011இல்.1.6 மில்லியகாவும் 2021ல் 1,85 மி யும் 20 3ல் 2.11மி. யும் 2041ல் 2.04யும் கொண்டிருக்கும். ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு போக்கு மிகவும் குறைந்த தாக இருப்பதுடன் சனத்தொகை அடிப்படையில் 2001 இல் ஏழாவது இடத்துக்கும் 2011இல்எட்டாவதுஇடத்துக்கும் தள்ளப்பட்டு 20 21 11ல் இருந்து 2041 வரை ஒன்பதாவாது கடைசி மாகாணமாகவே காணப்படலாம். இக்காலத்துக்கான சனத்தொகை மாற்ற விதம் ஏனைய மாகாணங்களிலும் பார்க்க மிகக் குறைவான 13.65 விதத்தையே கொண்டிருக்கும். அதேவேளை மிக உயர்ந்த அதிகரிப்பை வடமத்திய மாகாணம்(29.7%) கொண்டிருக்கும். (அட்டவணையில் விபரமாக கொடுக்கப்பட்டுள்ளது)

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைக் கொண்ட கிழக்கு மாகாணம் 1981இல் ஏறக்குறைய 9 இலட்சத்து 76 ஆயிரம் மக்களைக் கொண்டிருந்வதுடன் சனத்தொகை அடிப்படையில் ஏழாவது நிலையும் கொண்டிருந்தது 1953–63 காலத்தில் மட்டக்களப்பு,திருகோணமலை மாவட்டத்தில் வெளியேற்றத்திலும் பார்க்க மக்கள்உள்வரவே in-Migraton அதிகமாக இருந்தது. இக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் விவசாய நிலப்பரப்பு 141 சதவீதிஞல் அதிகரித்துள்ள விவசாய அபிவிருத்தியுடன் மக்கட்பெயர்வுகள் இணைந்திருந்தமையைக் காட்டுகின்றது. 1953–63 காலத்தில் தேறிய இடப்பெயர்வு (Net-Migration)திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் 16,000 மேல் காணப்பட்டதுடன்அம்பாறை மாவட்டத்தின் சதவீத அதிகரிப்பு 71 வீதமாக இருந்தது.

1963–71 காலத்தில் தேறிய இடப் பெயர்வு வீதம் 9மாவட்டங்களில் நேர்கணிய போக்கினைக் கொண்டிருந்தது திருகோணமலை (3,94) வவுனியா (6.92) மன்ஞர்(2.82)மட்டக்களப்பு (0 94 அவற்றுள் முக்கிய மாவட்டங்களாகும். இக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வரவுக்கு மேலதிகமாக 36,250 பேர் அம் மாவட்டத்தை விட்டு வெளியேறி உள்ளனர். 1946–81 காலத்தில் சனத்தொகை அதிகரிப்பு விதம் வவுனியாவில் 646 விதமாகவும் மட்டக்களப்பில் 215 வீதவாகவும் மன்ஞரில் 239 விதமாகவும் அம்பாறையில் 321 விதமாகவும் திருகோணமலையில் 238 வீதமாகவும் இருந்தது. கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற குடியேற்றத் திட்ட நிகழ்வுகள் சனத்தொகை அதிகரிப்புக்கு மேலும் அழுத்தம் கொடுத்திருந்ததை அவதானிக்க முடிகின்றது.

### அட்டவணை

இலங்கையின் மாகாண அடிப்படையில் சனத்தொகை எறியங்கள் 1991 — 2041 [மில்லியனில்]

| மாகாணம் | 1991 | 2001 | 2011 | 2021 | 2031 | 2041 | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 4.66 | 5.56 | 6.62 | 7.88 | 9.39 | 11.19 | 19.11 |
| மத்திய | 2.35 | 2.76 | 3.24 | 3.79 | 4.45 | 5.22 | 17.27 |
| தென் | 2.17 | 2.50 | 2 89 | 3.33 | 3 84 | 4 42 | 15.28 |
| வட | 1.26 | 1.44 | 1.63 | 1.85 | 2.11 | 2.40 | 13 65 |
| கிழக்கு | 1.20 | 1.47 | 1.79 | 2.20 | 2.69 | 3.30 | 22.51 |
| வடமே | 2.02 | 2.39 | 3.83 | 3.35 | 3.96 | 4.69 | 18.35 |
| வட மத் | 1.10 | 1.43 | 1.85 | 2.41 | 3.12 | 4.05 | 29.70 |
| ஊவா | 1.11 | 1.34 | 1.61 | 1.94 | 2.34 | 2.82 | 20.47 |
| சப்ர | 1.78 | 2.14 | 2.57 | 3.09 | 3.71 | 4.46 | 20.21 |

ஆதாரம்: கணனி மூலம் கணிப்பிடப்பட்ட எறியங்களின் மாதிரிப் போக்கு பற்றிய முடிவுகள்.

1991 இல் சனத்தொகையைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணம் 1.2 மி யும்
2001 இல் 1. 47 மி. யும்
2011 இல் 1. 79 மி.யும்
2121 இல் 2. 2 மி. யும்
2031 இல் 2. 69 மி. யும்
2041 இல் 3. 3 மி. யும்
கொண்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம் மாகாணத்தின் சனத்தொகை மாற்ற விதமானது வடமத்திய மாகாணத்தை அடுத்து இரண்டாவது நிலையில்காணப்பட கொழும்பைத் தலை நகராகக் கொண்ட மேல் மாகாணம் ஐந்தாவது இடத்தில் (19. 11%) காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

குடியேற்றத்திட்டங்களின் காரணமாகவும், வேறு காரணங்களினுலும் கிழக்கு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்த மக்களின் அதிகரிப்பு வீதம் மேலும் உயர் வடையலாம் என்பதை. கிழக்கு மாகாணத்துக்கான எறியத்தின் அதிகரித்துச் செல்லும் வளர்ச்சி வீதத்திலிருந்து ஊகிக்க முடிகின்றது. எனவே இப்பிரதேசங்களை விட்டு வெளிநாடுகளுக்குத் தொடர்ச்சியாக வெளியேறிச் செல்லும் போக்கு இப் பிரதேசத்தின் அரசியல் வாழ்வுக்கு ஆரோக்கியமானது அல்ல. நாட்டின் அபிவிருத்தி சூழலையும் கெடுத்து விடும் அபாயம் உள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான விபரமான ஒரு கணிப்பு மேற்கொள்ளப்படும் போது இதன் தாக்கங்களை அறிந்து கொள்ளமுடியும். அத்தகைதொரு முயற்சி நிர்வாகப் பிரிவுகளினடிப்படையில் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

## ரோசக்காரன் . . .

(14–ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி:– சரி எனக்கு ரோசமில்லை! கேட்டுக்கொண்டிருந்தன் நீங்கள் ரோசமுள்ள ஆம்பிளை என்ன செய்திட்டியள்?

ரங்க:– (பெருமையாக) என்ன செய்தனே? அவன் இனிமேல் இந்தப்பக்கம் தலைகாட்டாத முறேலை திருப்பி அனுப்பிட்டன்!

பாக்கி:-என்னசெய்தனீங்கள்?

ரங்கன்:– அவனை அடிக்காத குறையாக மூஞ்சையிலை காசைவீசி எறிஞ்சு, ஆளைந் துரத்திப்போட்டன்! (பெருமிதச் சிரிப்பு சிரிக்கிருர்)

பாக்கி:– (பதறி) என்ன? இரண்டாயிரம் ருபாயையுமோ? ஏன் அவசரப்பட்டுஅப்படிச் செய்தியள்?

ரங்கா:– (விளங்காமல்) என்ன? அவசரப்பட்டுட்டனே?

பாக்:– நானெண்டா அரைக்கரவாசியை மிச்சத்தை வாற மாதம் தாறன் எண்டு சமாதானம் பண்ணி அனுப்பியிருப்பன்......

ரங்க:– (கோபமாக) ஓ சமாதானம் பண்ணியிருப்பாய்! பல்லைக்காட்டி! நான் சொன்னனே ரோசம் எண்டது மருந்துக்கும் இல்லை!

பாக்கி:–(நக்கலாக) நல்லது காசை வீசி எறிஞ்சிட்டியள் பெரிய கெட்டிக்காரன்தான்!

ரங்க:- (கோபமாக) என்ன கெட்டிக்காறன் எண்டு ஒரு நக்கல்கதை விடுகிருய்?

பாக்கி:- பெரிய ரோசக்காரன்! காசைத்தூக்கி எறிஞ்சிட்டியள்! இனி இந்த மாதச் சிலவு?...

ரங்க:- அதுக்குத்தான் சம்பளத்திலை இன்னும் ஐந்நூறு ரூபாய் மிச்சம் இருக்கே! அதுக்கை சமாளிக்கிறதுதான்!

பாக்கி:- உந்த ஐந்நூறுருபாய் மூக்குத்தூளுக்கும் காளுது! பிள்ளையளின்ரை ருசன் காச மட்டும் நூற்றைம்பது ரூபாய் இப்ப,வரப்போருங்கள் பால்! காறன் மீன்காறன், விவிக்குக்காறன் எல்லாரும்!...இனி லோன்றிச் சிலவு, எல்லாருக்கும் பஸ் சிலவு.....? இன்னும் எத்தினை?...சொல்லுங்கோ! .. ஏன் பேசாமல் நிக்கிறியள்?

ரங்க:– (கோபமாக) அதுக்காகக் கடைக்காறனிட்டைக் கெஞ்சியிருக்கவேணும் எண்டு சொல்லுறியே! (ஏளனமாக) ஐயா பொறுத்துக்கொள்ளுங்கள் பிறகு தாறன் எண்டு? அதுக்கு வேற ஆளைப்பார்!

பாக்கியம்:– (கோபமாக) ஓ! நானும் வேற ஆளைப்பாக்கிறன்! நீங்களும் இப்பமிச்ச சிலவுக்குவழியைப்பாருங்கோ!

ரங்க:– (கோபமாக) என்ன வெருட்டுருய்? கடைக்காறப் பிள்ளைக்கு அவ்வளவு கெறுக்கெண்டா எனக்கு இல்லையா? (பெருமையாக) பாக்கியம்! ஐயா கச்சேரி உத்தியோகந்தான்! (கனைப்புச் சிரிப்பு)நான் ஒரு உத்தியோகத்தன்!... ..... சும்மா கொஞ்சக் காசைப் போட்டு கடைவைச்சு லாபம் அடிச்சு எழும்பீட்டா வாயிலை வாறதெல்லாம் பேசலாமே? அதுதான் முறையாக்குடுத்தன் அவருக்கு இனிமேல் உன்ரை அரியண்ட மூஞ்சையைக் இங்கினேக்கை காட்டாதைஎண்டு!

பாக்கி:- பரமசிவம் தன்ரை அசிங்கமான முகத்தைக் காட்ட இஞ்சை வாரான். நாங்கள்தான் எங்களுடைய அசிங்கமான முகத்தைக் காட்ட அவன்ரை கடைக்குப் போகவேணும்!

ரங்க:- போகவேணுமா?...... அதேன் அப்பிடி?

பாக்கி அரிசி, சீனி, மாவாங்கத்தான்!......

ரங்க:– அதுக்குஉவனுடையது தானு உலகத்திலை ஒரே ஒரு கடை? வேறகடையே இல்லையா?

பாக்கி:– இருக்கு! அதுகளுக்கு காசு கொண்டல்லோ போக வேணும்! முழுக்காசையும் தூக்கிக் குடுத்திட்டியள்! கடனை முழுசா குடுத்து செற்றில் பண்ணின படியால் இந்தாள் கொப்பிலை எழுதீட்டுக் கடன் தரும் மற்றவன் காசு கேட்பன்

ரங்க:- சீ! ரோசம் இல்லாமல் நடக்கிறதே? உவனிட்டைப்போறநேரம்! நாங்கள் ஒரு புதுக்கடேல கடன் வாங்குவம்

பாக்கி:– எந்தக் கடைக்குப் போப்போறியள்?

ரங்க:– புளியடிப்பொன்னையா கடை!

பாக்கி:-பொறுங்கோவாறன்! (உள்ளே போய் வருவது) இந்தாருங்கோ!

ரங்க:- (வியப்புடன்) என்ன? கணக்குக் கொப்பி! பொன்னையாகடேலும் கடனு?(பதறி) ரண்டாயிரம் ரூபா! இவ்வளவு கடனு?

பாக்கி:–பொன்னையா கடேலை ரண்டாயிரம் ரூபாய்க்குகடன் ஏறின பிறகுதான் சுரேஷ் கடைக்குப் போனனுங்கள் கடன் வாங்க! (நக்கலாக சிரித்து) இப்ப பொன்னையாவும் காசுக்கு வராமல் இருக்க வேணும்

ரங்க:– (ஏக்கத்துடன்)பொன்னையாவும் வந்துகேட்டா, இப்ப எப்படிக் கடன் காசு குடுக்கிறது?

பாக்கி:- அதுதான் தூக்கி விசிட்டியளே கொண்டந்த காசு முழுவதையும்! பெரிய ரோசக்காருன்!.....இனி...?... ஆ! அவனும் அங்கவாருன்! .. சம்பள நாளல்லவே காசு கேக்க வாருன்!

ரங்கன்:- (ஏங்கி) ஆ! என்ன பாக்கியம்? ..ஆர் வாறது .. .. எங்கை?...

பாக்கி:- பொன்னையா தான் வாருன்! ..''பாருங்கோ!...... அங்கை! படலேக்கை!

ரங்க:– (ஏங்கி) உண்மையாகவா?... ஓ...ஓ வாருன் வாருன்! பொன்னையாவும் வாருன்?...(கவலையாக) நான் இப்ப என்ன செய்ய? தண்ணி! தண்ணி! ஹா! ..... (மயங்கி விழுகிருன்)

## சந்திப்பு . . .

[11ம்-பக்கத் தொடர்ச்சி]

ராக, நாடக ஈடுபாடு உடையவராக – இப்படி பல்வேறு துறைகளிலும் பரிமளிக்கிறீர்களே இது எப்படி உங்களால் முடிகின்றது?

!:– வீண்வம்பு பேசுவதில் நேரத்தை வீணடிக்கப் பழகிக் கொள்ளாததால்முடிகின்றது. நீங்கள் குறிப்பிட்ட எல்லாவற்றிற்கும் மேலாக நான் எப்போதும் ஒரு மாணவ நிலையில் இருக்கின்றேன் — அது முக்கியம்!

?:– பல்வேறுதுறைகளில் ஈடுபடும்போது ஏற்படும் கஷ்டங்களை எப்படிச் சமாளிக்கிறீர்கள்:

!:– சில சமயங்களில் எதைச் செய்வது என்ற திணறல் ஏற்படுவது உண்மைதான். எது அதிக முக்கியமானது என்று நினைக்கின்றேனே அதை முதலில் செய்துவிட்டு மற்றவற்றைப் பின்னர் பார்த்துக் கொள்வேன். ஒரு நாளின் மணித்தியாலங்கள் போதாமல் வேலை இருந்துகொண்டு இருப்பது ஒரு மகிழ்வு. காலையில் கண்விழிக்கும்போது... இன்று சமைப்பதையும், சாப்பிடுவதையும் விட வேறு ஒரு வேலையுமில்லை... என்ற நிலை இருந்தால் மனதுக்கு ஒரே சோம்பலாக இருக்கும் எனக்கு. பலவேலைகள் இருந்தால் துள்ளிக் கொண்டு எழுந்துவிடுவேன்.

?:– உங்கள் எழுத்துக்கள் மூலம் என்ன சேதிகூற விரும்புகின்றீர்கள்?

!:– எனது ஒவ்வொரு படைப்பும் ஏதோ ஓர் சேதி கூறிக் கொண்டுதான் இருக்கும். சில வேளை அது வெளிப்படையாக இருக்கும் சில வேளை பூடகமாக இருக்கும். வாசிக்கும் போது உணர்ந்திருப்பீர்களே!

?:– நீங்கள் எழுத்துத்துறையில் ஈடுபட ஏதாவது விசேட காரணங்கள் தூண்டுகோலாக இருந்தனவா?

!:– ஆரம்பத்தில் சில எழுத்தாளர்கள் எனக்கு நெருக்கமான நண்பர்கள் ஆயினர். நேரில் அல்ல தமது நூல்களின் மூலமாகவே! எனது கவலைகளைக் கூட அவர்கள் பகிர்ந்து கொண்டது போல் உணர்ந்தேன். அவர்களிடம் எனக்கு விவரிக்கமுடியாத அன்பு ஏற்பட்டது. அதைப் போலவே நானும் சிலருக்கு நூல்களின் மூலம் நண்பராக இருக்க முடிவு செய்தேன், செயற்படுகிறேன்!

?:– உங்களது படைப்புக்களை மோசமாய்த் தாக்கும் விமர்சனங்களை எப்படி ஜீரணித்துக்கொள்கிறீர்கள்?

!:– கூறப்படும் குறை நியாயமானதே என உணரும்போது திருத்திக்கொள்ள முயலுகின்றேன். வேண்டுமென்றே குறை கூறப்படுவதாய் உணரும் போது அந்த விமர்சனத்தையும், விமர்சகரையும் மெதுவாகத்தூக்கி எனக்குத் தொலைவில் வைத்துவிடுகின்றேன். அந்நியமாய் இருந்துவிட்டுப் போகட்டுமே!

## கோரிக்கை: 5;

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராக 'ஸ்ரைக்' ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கிறது. அங்கத்தவர்களுக்கு ஏதாவது புரியாத விஷயங்கள் இருந்தால் தெளிவு படுத்திக் கொள்வது நலம்'

ஒருகுரல்: 'ஸ்ரைக் செய்து புருஷர்களுக்குப் புத்தி புகட்டுவதை நாம் மனமார ஆதரிக்கிறோம். ஆனல் 'ஸ்ரைக்' கைப்புருஷர்களோடு கூடியிருந்து கொண்டு ஆரம்பித்தால் அவர்கள் கஷ்டப்படுவதைப் பொறுக்காது சில மனைவியர் மனம் மாறிவிடலாம். எவ்விடத்தில் இருந்து கொண்டு 'ஸ்ரைக்' கை ஆரம்பிக்க வேண்டும் என்பதைத் தீர்க்கமாகத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.'

இரண்டாவது குரல்: 'ஸ்ரைக்' என்று தீர்மானித்தவுடன் மனைவியர் தத்தம் பிறந்தகத்துக்குச் சென்று விடுவது நல்லது என்பது என் எண்ணம்!'

மூன்ருவது குரல்: குழந்தைகள் உள்ள மனைவியர் என்ன செய்ய வேண்டும்?'

நான்காவது குரல்: குழந்தைகளை மனைவியர் கையோடு அழைத்துச் செல்லாமல் புருஷர்களிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும். எமது 'ஸ்ரைக்' சூடுபிடிக்கவும் சீக்கிரமான ஒரு முடிவுக்குவரவும் இது உதவும்.'

தலைவி தமது பேச்சைத் தொடர்கிருர்: இங்கே சுட்டிக் காட்டிய விஷயங்கள் மிக அவசியமானவை. 'ஸ்ரைக்' ஆரம்பித்த கையோடு மனைவியர் தத்தம் குழந்தைகளைப் புருஷர்களிடம் ஒப்படைத்து விட்டுப் பிறந்தகம் சென்று விடுவதே புத்திசாலித்தனம் என்பதை நாமும் ஒத்துக் கொள்ளுகிரோம்.

புருஷர்களுக்கு ஒரு வார முன்னறிவித்தலுடன் 'ஸ்ரைக்' ஆரம்பமாகும். புருஷர்கள் எமது கோரிக்கைகளைக் கவனியாது வாளாவிருந்தால் அதன் பலனை அவர்கள் அநுபவிக்க நேரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

பல குரல்கள்: 'ஸ்ரைக்' வெல்க! நமது 5 அம்சக் கோரிக்கைகளை வென்றெடுத்திட 'ஸ்ரைக்' செய்வோம்! புருஷர்களே! எமது உரிமைகளை வழங்குங்கள்!

# தென்பகுதிச் சவச்சாலைகளில் பெருமளவு இடநெருக்கடி

தென்பகுதியிலுள்ள வைத்தியசாலைச் சவச்சாலைகளில் தற்பொழுது அடிக்கடி திடீரென இடநெருக்கடி தோன்றிவருகின்றது.

தென் பகுதியில் வீதியோரங்களில் அடையாளம் காணப்படாத சடலங்கள் தற்பொழுது தினமும் பெருமளவில் கண்டெடுக்கப்படுவதையடுத்தே இந்த நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

மேற்படி சவச்சாலை லாச்சிகளில் ஒரு சடலம் மட்டுமே வைக்கப்படல் வேண்டும். ஆனால் இட நெருக்கடியைச் சமாளிக்க மூன்று அல்லது நான்கு சடலங்கள் ஒன்றின் மேலொன்ருக அடுக்கப்படுகின்றன. இதனால் சடலங்களை அடையாளம் காண்பதும் பெரும் சிரமமாக உள்ளதாம்.

# ஸ்ரீமாவோவின் அறிக்கை சிறுபிள்ளைத்தனமானது-ரஞ்சன்

இந்தியப்படை விலகல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கடந்த வியாழன் பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கை சிறுபிள்ளைத்தனமானது என அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன வெள்ளி பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஸ்ரீமாவோவின் அறிக்கையில் படைவிலகலுக்கான உருப்படியான எந்த யோசனையும் இருக்கவில்லை. தாம் பதவிக்கு வந்தால் இலங்கை-இந்தியஒப்பந்தத்தைக்கிழித்தெறிவேன் எனக்கூறியவர் பாராளுமன்றத்தில் இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தமது கட்சி உறுப்பினர்களைக்கூடப் படைவிலகல் தொடர்பாகப் பேச ஸ்ரீமாவோ அனுமதிக்கவில்லை எனவும் அமைச்சர் ரஞ்சன்மேலும் தெரிவித்தார்.

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி (25. 08. 89) முற்பகல் 10 0) மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும்கூடிய தொகைக்கு, கட்டிடவேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி (22 08 1989) பிற்பகல் 2 00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பணமாக ரூபா ஐம்பதும், (ரூபா. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா. இருநூற்றி ஐம்பதும் (ரூபா. 250/-) செலுத்தியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம திகதி (25. 08 1989) பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறுஅறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவருது வேலையைப் பூர்த்திசெய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
11 08 1989

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| யா/நெல்லியடி ம. ம. வி. | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1,600,000.00 |
| யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | இரு மாடிக் கட்டிடம் 90'/25' (இரு கட்டிடங்கள்) | 1,600,000.00 |
| யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' விஞ்ஞானகூடம் | 1,600,000.00 |
| யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1,600,000.00 |
| யா/வயாவிளான் ம. ம. வி. | பெருந்திருத்த வேலைகள் | 800,000.00 |
| யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை | தண்ணீர் தாங்கி 2000 கலன்கள் | 150,000 00 |
| யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000.00 |
| யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000'00 |
| யா/நெல்லியடி ம. ம. வி. | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000 00 |
| யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000.00 |
| யா/வயாவிளான் ம. ம. வி. | மலசலகூடம் அமைத்தல் | 150,000 00 |
| யா/வயாவிளான் ம. ம. வி. | விவசாயகூடம் 30'/20' | 150,000.0C |
| யா/நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை | இருமாடிக் கட்டிடம் 70'/20' | 800,000 00 |
| யா/ஹாட்லிக் கல்லூரி | சுற்றுமதில் 2000 அடி | 400,000.00 |
| யா/வதிரி திரு. இருதயக் கல்லூரி | சுற்றுமதில் 500 அடி மனையியற் கூட திருத்தம் | 150,000.00 |
| யா/புனித சார்ள்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் | மூன்று மாடிக் கட்டிடம் 70'/25' | 1,200,000.00 |
| யா/பலாலி வடக்கு த. க. பாடசாலை | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000.00 |
| யா/எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம் | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000.00 |
| யா/வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாசாலை | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000 00 |

08179

## போதைப்...

(3 ஆம் பக்கத் தொடர்)

கத்துக்கு அடிமைப்பட்டு விடுகின்றூர்கள்

எல்லோரும் இந்தப் பழக்கத்துக்கு அடிமைப்படுகிறூர்களா?

இல்லை. சமூகச் சூழ்நிலை சிலரை ஈர்க்கக் கூடும் பெற்றேரின் அன்பும் ஆதரவும் இல்லாப் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் இளைஞர்கள் வெகுவிரைவில் ஈர்க்கப்படுகின்றூர்கள். மதுபானம், புகை பிடிக்கும் பழக்கம் உள்ள பெற்றேர்களின் பிள்ளைகள் போதைப் பொருள் பழக்கத்திற்கு மிகுதியாக அடிமைப்பட்டு விடுகின்றூர்கள்

உளதத்துவ ரீதியிற் சில குறைபாடுள்ளவர்களே மிகவும் விரைவாக ஈர்க்கப்படுகின்றூர்கள்.

இலங்கையில் பெரும்பாலும் பயன்படும் போதைப் பொருள்கள் எவை?

அபின்—Opium. Modrhine, கஞ்சா—(Ganja Gannabis, Hashish, Marihvana) ஹேறேயின்—Brown sugar, 'பவுடர்'' 'குடு' ஹெறுயின்

போதைப் பொருள்களை எப்படிப் பயன் படுத்துவார்கள்?

வாய்மூலம் உட்கொள்ளல், ஊசிமூலம் செலுத்தல், புகைத்தல், நுகர்தல் முறைகள் உள்ளன. இவை மருந்துக்கு மருந்து வித்தியாசப்படலாம்.

போதைப் பொருள்களால் ஏற்படும் பயங்கர விளைவுகள்:

மிதமிஞ்சிய அளவை உட்கொள்ளுதல், (OVER DOSAGE) அறிவற்ற நிலை (COMA) மரணம் (DEATH) தற்கொலை (SUICIDE) விபத்து- (ACCIDENT) குழப்பமான மனநிலை, பயங்கரக் காட்சி, உளவியற் கோளாறு. மனேவியாதி (PSYCHOSIS) நாளடைவில் போதைவஸ்தில் தங்கியிருக்கின்ற நிலை, அவற்றிற்கு அடிமையாகும் நிலை. ஊசி மூலம் செலுத்திஞல் புண், சீழ்கட்டுதல், குருதியில் நஞ்சேறல் (SEPTICAEHIA) ஈர்ப்புவலி (TETANUS) செங்கண் மாரி, மேகநோய், எயிட்ஸ்.

போதைப் பொருளை உபயோகிப்பதால் விளையும் அறிகுறிகள்:-

மகிழ்வு நிரம்பிய மன நிறைவு நிலை (EUPHORIA) உடல் மனம் தளர்ச்சியடைந்த நிலை, சுவாசம் தளர்ச்சியடைதல், இதய நாடித்துடிப்புக்கள் அதிகரித்தல், நித்திரையின்மை, பசி அதிகரிப்பு, கண் சிவப்படைதல் ஆகி கண், மூக்கு, வாய் ஆகியவற்றிலிருந்து நீர் வடிதல், பேச்சுத் தடுமாறல், ஒழுங்கற்றுப் போன நடை, கைகால் நடுக்கம், ஓங்காளம், சத்தி, மலச்சிக்கல், சிறுநீர் கழிப்பதில் கஷ்டம், வயிற்றுவலி. போலிக் கற்பனை, உளமாயம், மயிர் சிலிர்த்தல், காலகதியில் ஏற்படும் மாற்றங்கள்: மகிழ்வு நிரம்பிய மனநிறைவு நிலை திடீரென சிடுசிடுப்பான, மந்தமான நிலைக்கு மாற்றமடைதல், எதிர்பாராதமுன் கோபம் அல்லது சண்டையிடுதல், தோற்றத்தில் கவனவீனமாக இருத்தல் பசியின்மை, உடம்பு மெலிந்திருத்தல், அசுத்தமாக விருத்தல், பொய்பேசுதல், களவெடுத்தல், மற்றவர்களிடமிருந்து ஒதுங்கிக்கொள்ளுதல், அரைத்தூக்கம், அல்லது தூக்கமின்மை, படிப்பு, தொழில், வீட்டுவேலை முதலியவற்றில் நாட்டம் குறைதல், உடலிற் காயங்கள் காணப்படுதல்.

இக் கொடுமைகளிலிருந்து மீள முடியுமா?

நிச்சயமாக!

எப்படி?

அ. அறிவுறுத்தல்:-

நோய்க்குச் சிகிச்சை செய்வதைவிட நோய் வராது தடுப்பதே சிறந்தது. பெற்றேர், ஆசிரியர் ஆகியோரினதும் சமூக சேவை ஸ்தாபனங்களாகிய லயன்ஸ், றேட்டரி போன்ற ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பு, ஒலி.ஒளி, சாதனங்கள் மூலமும விளம்பரம் துண்டுப் பிரசுரங்கள் பத்திரிகைகள் மூலமும் அறிவுறுத்தல்கள்

ஆ. சட்டங்கள் இயற்றுதலும் அதனை நடைமுறைப் படுத்துதலும் (இது அரசின் பொறுப்பு.)

இ. போதைப்பழக்கம் உள்ளவர்களின் மனமாற்றம்:

வாழ்வு என்பது இன்பம் தரக்கூடியதும் பயனுள்ளதுமாக இருக்க வேண்டுமென்ற தத்துவம இளையர்களுக்குப் புரிய வைக்கப்பட வேண்டும். போதைப்பழக்கத்தை விட்டுச் சமயம், விளையாட்டு, நாடகம் இலக்கியம் சமூகசேவை முதலிய அர்த்தமுள்ள வாழ்க்கையில் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும்.

ஈ. மருத்துவச்சிகிச்சை
உ. புனர்வாழ்வு
ஊ. கண்காணிப்பு

## எழுத்துச்...

(3 ஆம் பக்கத் தொடர்)

னுடன் மேலும்ஐந்துகீழ்நோக்கிய கோடுகளையுடைய ஐக்கொம்பையும் (ை)முன்னிட்டெழுதின் அவ்வோரெழுத்தேஎவ்வளவுஇடத்தையெடுக்குமென்பதையும் வேறு மயக்கத்தையும் இடரையும் விளைக்குமென்பதையும் உணரல் வேண்டும்.

ணை-ளை இவ்வாறெழுதி எதற்கு முயற்சியெளிமை இடச்சுருக்கம் உண்டென்பதைக் கணித்தறிக ணகரத்தின் முன் ஐக்கொம்புக்கீடாக வளைகொம்பை (?) இட்டெழுதிய சான்றேரது மதிநுட்பம் வியந்து பாராட்டற்பாலது!

இவ்வாறே பல வேதுக்களால் தற்பொழுதுள்ள வரிவடிவங்களே முன் சொன்ன எழுத்துக்களுக்கு ஏற்றவடிவங்களெனத் தெளிக. எனவே எழுத்துச் சீராக்கம் தேவையற்றதும் பிழையானதுமானமுயற்சியென்று அறிஞர் வெறுத்துத் தள்ளுவாராக!

A/L MATHS
ஆசிரியா:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

நிநரியூரன் சென்ரர்
புகையிரத வீதி
கோண்டாவில்
விலங்கியல்
15 08. 89
ஆசிரியர்;
திரு கெங்காதரன்
08184

# கைகால்கள் கட்டப்பட்ட நிலையில்

# தெற்கில் இளைஞர்களின் சடலங்கள்

கண்டிப் பகுதியில் தெருவோர மர்ம மரணங்கள் தொடர்ந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் கண்டியின் பல பகுதிகளிலும் பதினைந்து சடலங்கள் தெருவோர பற்றைகளுக்குள் இருந்து மீட்கப்பட்டன.

இதேபோன்று இரத்தினபுரிப்பகுதியிலும் ஏழு சடலங்கள் தெருவோரங்களில் இருந்து மீட்கப்பட்டன

அரசியல் காரணங்களுக்காகவே இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

நாள் தோறும் ஆறு மற்றும் குளங்களிலும் பல சடலங்கள் மீட்கப்பட்டுவருகிறது இச் சடலங்கள் சில அடையாளம் காணப்பட முடியாதவாறு அழிக்கப்பட்டிருப்பதாகவும் சில சடலங்களில் கையும் கண்களும் கட்டப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இரவில் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்படுபவர்கள் காலையில் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்படுகிறது.

இதேவேளை நேற்று மெதகொடலந்த ரஜமஹாவிகாரையில் பாதுகாப்புப் படையினர் நடாத்திய தேடுதலில் பல அரச விரோத துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டதாகவும் 750 பேர் நேற்று மட்டும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொக்கந்தரயில் வாதுவை பொலிஸ் நிலைய அதிகாரியின் தந்தையும் நேற்றுச்சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென்பகுதியில் தற்போது அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்களையடுத்து மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள எதிர் நடவடிக்கையில் இறங்க அநுமதிவழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

மக்கள் தமது உயிருக்கோ, உடைமைக்கோ ஆபத்து ஏற்படும் எனக் கருதினால் எதிராளியை திருப்பித்தாக்கிக் காயப்படுத்தவோ, அல்லது கொல்லவோ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஒரு கிலோ...

ரத்துச் செலவைக் கருத்திற்கொண்டு சீனியின் விலை இருபத்திரண்டு ரூபா முப்பத்தைந்து சதத்திலிருந்து இருபத்திரண்டு ரூபா அறுபது சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது மூன்று மாதத்திற்குத் தேவையான அளவு சீனி கையிருப்பில் உள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## நிவாரணம்...

இவர்கள் உரிய காரணங்களை வெளிப்படுத்தி மேன்முறையீடு செய்யும் சந்தர்ப்பங்களில், அம்மேன்முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டுத் தகுதியெனக் காணப்படுபவர்களுக்குரிய விசேஷ பட்டியல் தயார்செய்யப்பட்டு இரண்டாங்கட்டக் கொடுப்பனவுடன் சேர்ந்து ரூபா 2000/- வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வங்கியால் திருப்பியனுப்பப்படவிருக்கும் பட்டியலில் உள்ளவர்களுக்கான தொகைப் பணம், ஏற்கனவே பிற காரணங்களால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்குச் சிபார்சு செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்தவிண்ணப்பதாரிகளுட் தகுதியானவர்களுக்கு வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறியவருகிறது.

## வடமராட்சி...

அநாதரவான நிலையில் சாப்பாட்டுக்கு வழியின்றி வீதி வீதியாக ஊளையிட்டு அலைந்து திரிகின்றன.

## 'பாஸ்' பெருத மீனவர்களின் நங்கூரங்கள் பறிமுதல்

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ''பாஸ்'' இன்றிக் கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்களின் நங்கூரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சில பகுதிகளில் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்படாத ஆழியவளை, வெற்றிலைக்கேணிப் பகுதி மீனவர்கள் வெள்ளிக்கிழமை ''பாஸ்'' இன்றிக் கடலுக்கு மீன்பிடிக்கச்சென்றனர்.

இப்பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற சில கடற்றொழிலாளர்கள் ''பாஸ்'' வைத்திருக்காமையினால் அவர்களின் ''நங்கூரங்கள்'' எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

## வலவைக்கு...

விக்கின்றன.

அவ்வறிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வெளிநாட்டு உதவி செய்யுமாறு கோரப்பட்டுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது.

## அமிரின...

கள் குறித்து பரிசீலனை செய்யப்படுமென, ஐ. தே கட்சி எம். பி. அஸ்வரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வெளிவிவகார, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திருமதி யசோதா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பிரதிப் பொதுச் செயலாளர் இராகவானந்தம், ''டெக்கான் ஹெரால்ட்'', ''ஸ்டேட்மன்'', முரசொலி, தினகரன் ஆகியவற்றின் பத்திரிகையாளர்கள் ஆகியோரே விசா பெருமல் இங்கு வந்தோராகும்.

இதேவேளை வடக்குக்கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமான் ஜனாதிபதி பிரேமதாஸவின் அனுமதி பெற்றே புதுடில்லி சென்றூர் எனவும் ரஞ்சன் விஜேரட்ன குறிப்பிட்டார்.

## நாளை சங்காபிஷேகம்

நயினாதீவு ஸ்ரீ காளி பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகா சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதமகுரு சிவ ஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் இது நடைபெறும்.

## தனியார் கல்வி...

யங்களைத் திறந்து கல்விச் சேவையை நடாத்துகின்றது. இவ்வாறு யாழ். தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினால் விடுக்கப்பட்ட உருக்கமான வேண்டுகோள் என்ற அறிக்கையிற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி கற்பித்தலும் கற்றலும் அறிவுபூர்வமான ஒரு நிகழ்வு மட்டுமல்ல உளவியல் ரீதியான தொடர்பையும் கொண்டது. அமைதியின்மை, பீதி, பயம் ஆகிய புறச்சூழ்நிலைகள் மாணவரின் உள்ளத்தைப் பாதிக்கிறது. அவ்வேதனைகள் மாணவர்களின் எதிர்காலத்தைப்பாதிப்பதோடு மட்டுமல்லாது சமுதாயத்தின் உள்ளக்குமுறலாகவே உருவெடுக்கும். எமது சிறுவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்து விடும். தமது உழைப்பையும் உடைமையையும் தமிழ் மக்கள் இழக்கத் தயாராகவிருப்பது கல்வி ஒன்றுக்கேயாகும்.

அதனையும் இழந்தால் எல்லாவற்றையும் இழந்தவர் ஆவோம். தனியார் கல்வி நிலையங்களுக்கு இப்போது தான் மாணவர்கள் சிறுகச் சிறுக வர ஆரம்பிக்கின்றனர். இந்நிலையில் அவர்கள் தமது கல்வியைத் தொடர பெற்றோர், ஆசிரியர், பொதுஸ்தாபனங்கள், அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகிய சம்பந்தப்பட்ட யாவரையும் எமது இச் சேவை தொடரத் தயைகூர்ந்து உதவுமாறு தாழ்மையுடன் தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகின்றது எனவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் தெரிவுப் பரீட்சை வவுனியாவில் 18ம் திகதி ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஆசிரியர் பயிலுநர்களுக்கான முதலாவது நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 18-ம் திகதி முதல் இங்கு ஆரம்பமாகும். இது ஒருவாரத்திற்கு நடைபெறும்.

திட்டமிட்டபடி இதுநடைபெறுமென கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினர்.

குறித்த நேர்முகப்பரீட்சைக்குப்பின்பே எழுத்து மூலமான பரீட்சை நடைபெறும். இதுபற்றிய அறிவித்தல் பின்னர் தெரியப்படுத்தப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின.

# பொடிச் செய்திகள்

## ஈ. என். டி. எல். எப் அஞ்சலி

மிருசுவில் சம்பவத்தில் இறந்த தமது தோழர்களின் 45-வது நாளான இன்று துக்கதினம் அனுஷ்டிப்பதுடன் தமது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதாக ஈ. என். டி. எல். எப், இயக்கம் தெரிவித்துள்ளது.

## முல்லைத்தீவில் மோதல் கப்டன் தினேஷ் மரணம்

கடந்த சில நாட்களாக முல்லைத்தீவில் இடம் பெற்ற மோதலில் ஏழு ஜவான்கள் பலியானதாகவும், தமது தரப்பில் அரசியல் அமைப்பாளரில் ஒருவரான கப்டன் தினேஷ் மரணமானதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்ததாக பி. பி. ஸி தெரிவித்துள்ளது

## உற்சவம்

கன்னாதிட்டி காளியம்மன் ஆலய தேர்த்திருவிழா செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. கடந்த ஏழாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்தஉற்சவம் பதினாறும் திகதி புதன்கிழமை, தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுறும். நாளை திங்கட்கிழமை சப்பறத் திருவிழா இடம்பெறும்.

## சவச்சாலையில் சடலம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் சூட்டுக்காயங்களுடன் கிடந்த இளைஞனின் சடலம் யாழ். வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது அடையாள அட்டையில் நெடுந்தீவு புவிராஜசிங்கம் கந்தராஜ் (22) எனவும் வீட்டு முகவரி ஸ்கந்தபுரம், கிளிநொச்சி எனவும் காணப்பட்டுள்ளது.

## முதலமைச்சர் ராஜீவ் சந்திப்பு

(புதுடில்லி)

நேற்றும் வடகிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர். பேச்சுகளின் விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## நிவாரணம்

அரியாலை மேற்கைச் சேர்ந்த 460 குடும்பங்களுக்கும் அரியாலை மத்தியைச் சேர்ந்த 362 குடும்பங்களுக்கும், மீளக் குடியமர்த்தலுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பதினான்காம் திகதி திங்கட்கிழமை ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் இக் கொடுப்பனவு வழங்கப்படும்.

G. C. E. (O/L)
தமிழ் இலக்கியம் சந்தர்ப்பம் கூறல்
முன்பு பெறத்தவறிய மாணவரின் நன்மை கருதி இரண்டாம் பதிப்பு வெளியாகியுள்ளது.
கிடைக்குமிடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்நகர்
08165

UNIVERSAL
FOR GOD AND COUNTRY
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
O/L
DAY CLASS
ஆரம்பம்: 14. 08. 89 காலை 8.30

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 13 . 08 . 89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.